# அஸ் ஸலாத் - தொழுகை, தவறுகளும் விளக்கங்களும்

## அனிந்துரை

### பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

மனிதனின் சீரிய வாழ்க்கைக்கான சட்ட ஒழுங்கமைப்பை உருவாக்கிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். அச்சட்டங்களை மனிதனது வாழ்க்கையில் எவ்வாறு எடுத்து நடக்க வேண்டும் என்று முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டிச் சென்ற இறைத் தூதர் நபி (ஸல்) அவர்கள் மீது கருணையும் சாந்தியும் உண்டாகட்டுமாக.

**அஸ் ஸலாத் - தொழுகை, தவறுகளும் விளக்கங்களும்** எனும் இந்நூல் **மஷ்ஹூர் ஹஸன் அல் ஸல்மான்** என்பவரினால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட **The Clarified Ruling of Mistakes Done In Salath** என்ற நூலிலிருந்து **அப்துர் ரஹ்மான் ஆப்தீன்** என்பவரினால் தொகுக்கப்பட்ட முக்கிய குறிப்புக்களை உள்ளடக்கிய **Salath - Mistakes and Ruling** என்ற நூலின் சுருக்கமான மொழிபெயர்ப்பாகும்.

தொழுகை ஒரு முஸ்லிமின் முக்கியமான கடமையாகும். அல்லாஹ்வை ஓர் அடியான் உள்ளார்ந்த ரீதியாக நெருங்குவதற்கான ஓர் மைல் கல்லாக இத்தொழுகை கனிக்கப்படுகின்றது. எனவே இப்பாரிய கடமையானது அதன் தூய வடிவத்தைப் பெறும்போதுதான் அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்பட்ட வணக்கமாக மாறுகின்றது. எனினும் இப்படியான கடமைகளை சரிவர நிறைவேற்றுவதில் முஸ்லிம்கள் அசிரத்தை காட்டுவதுடன் உரிய முறைகளைப் பின்பற்றித் தொழுவதில் பாரிய பின்னடைவைக் கொண்டுள்ளனர். “நான் தொழுவதை நீங்கள் எவ்வாறு பார்த்தீர்களோ அதுபோலவே நீங்களும் தொழுங்கள்” என்ற நபி (ஸல்) அவர்களின் வாக்கு இன்று மறக்கடிக்கப்பட்டு வேண்டப்படாத பல விடயங்கள் தொழுகையில் இனைக்கப்பட்டுள்ளன. இத்தவறுகளை சுட்டிக்காட்டி அதற்கான தெளிவுகளை முன்வைப்பதே ஆசிரியரின் நோக்கமாகும்.

அந்த வகையில் தொழுகையில் ஏற்படும் தவறுகளை தத்ரூபமாக சுட்டிக்காட்டி அவற்றை நீக்குவதன் அவசியத்தை எழுத்தாளர் கையாண்டுள்ளார். இந்நூல் பர்ழான தொழுகையோடு மட்டும் சுருங்கி விடாது தொழுகைக்கான அதான் கூறும் சட்டத்திலிருந்து ஜும்ஆ மட்டும் பெருநாள் தொழுகை உள்ளடங்களாக அனைத்து வகையான தொழுகைகளையும் பற்றிப் பேசியுள்ளமை அதன் சிறப்பம்சத்தை

வெளிப்படுத்துகின்றது.ஒவ்வொரு சட்டத்துக்குமான ஆதாரங்களை அல் குர்ஆன், அல் ஹதீதிலிருந்து மேற்கோள் காட்டி இஸ்லாமிய சட்டத்துறை அறிஞர்கள் பலரின் கருத்துக்களையும் இணைத்துக் கூறப்பட்டுள்ளமை அதனை இன்னும் மெருகூட்டுகின்றது.

சுருக்கமாக வடித்தெடுக்கப்பட்ட ஆங்கில நூலின் தொகுப்பை அல் ஹாபிழ், அஷ் ஷெய்க் சஹாப்தீன் முஹம்மது ஐஸர் (நத்வி) அவர்கள் தமிழ் வடிவத்திற்கு மொழிமாற்றம் செய்துள்ளார். படித்தவர்கள் மாத்திரமன்றி பொதுமக்களும் படித்து விளங்கிக் கொள்ளும் அளவுக்கு மிக எளிய நடையில் இம்மொழியாக்கம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தொழுகையின் சட்டதிட்டங்கள் பற்றி எழுதப்பட்டுள்ள நூல்களுள் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள இந்நூல் வரவேற்புக்குரியதாகும். எனவே இறை வணக்கங்களில் மிகவும் விருப்பமான தொழுகையை அதன் தூய வடிவில் அறிய விரும்பும் ஒவ்வொரு முஸ்லிமும் இந் நூலை வாசிப்பது மிகவும் அவசியமாகும். இஸ்லாத்தைத் தெளிவாகப் புரரிந்து அதனை தூய வடிவில் பின்பற்ற அல்லாஹ் நம்மனைவருக்கும் நல்லருள் புரிவானாக.

அஷ் ஷெய்க் அல் ஹாஜ் M.M.கரீம் (நத்வி)
அதிபர்
நத்வதுல் உலமா அரபுக் கல்லூரி
மூதூர்.

## மொழி பெயர்த்தோனுரை

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்…..

மனித சமூகத்தை உன்னதமான பாதையில் வழி நடாத்திச் செல்வதில் இஸ்லாத்திற்கு நிகர் இஸ்லாம் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. மேலும் சுவனத்தின் திறவுகோலாய் தினந்தோறும் வாழ்வியல் பயிற்சியை தந்துகொண்டிருக்கும் இஸ்லாத்தின் கடமைகளில் தொழுகையின் வகிபங்கு அளப்பெரியது.

இஸ்லாமிய கடமைகளை நிறைவேற்றும்போது ஒருவன் தனக்கேயுரிய பாணியிலோ அல்லது தான் விரும்பியவற்றையோ செய்வதன் மூலம் தனது பணி நிறைவேறிவிட்டது என இறுமாப்புக் கொள்ள முடியாது. மாறாக அவனின் செயற்பாடு வஹியின் நிழலில் புடம்போடப்படும் மாத்திரத்திலேயே அது பூரணத்துவம் அடைகின்றது.

அந்த வகையில் இஸ்லாத்தின் கடமைகளில் பிரதான கடமையான தொழுகையை நிறைவேற்றுவோரிடத்தில் பலவாறான தவறுகள் காணப்படுகின்றமையினால் அந்தத் தவறுகள் முஸ்லிமிடம் குளிக்கச் சென்று சேறு பூசிய நிலையாகி விடக் கூடாது என்ற எண்ணத்தின் விளைவாகவே **தொழுகை – தவறுகளும் விளக்கங்களும்** என்ற இந்நூல் உங்கள் கரம் எட்டப்பட்டிருக்கின்றது.

இந்நூல் மஷ்ஹூர் ஹஸன் அல் ஸல்மான் என்பவரினால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட The Clarified Ruling of Mistakes Done In Salath என்ற நூலிலிருந்து அப்துர் ரஹ்மான் ஆப்தீன் என்பவரினால் தொகுக்கப்பட்ட முக்கிய குறிப்புக்களை உள்ளடக்கிய Salath Mistakes and Ruling என்ற நூலின் மொழிபெயர்ப்பாகும். இந்நூல் தொழுகையில் ஏற்படுகின்ற தவறுகள் மற்றும் அவற்றிற்கு இஸ்லாம் எவ்வாறான விளக்கங்களை முன்வைக்கின்றது என்ற விடயங்களை அல் குர்ஆன் சுன்னா மற்றும் அறிஞர்களின் கூற்றுக்களின் விளக்கங்களோடு தெளிவாக விளக்கிச் செல்கின்ற அதே வேலை அவற்றின் விரிவான ஆதாரங்கள் மூல நூலில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பினும் இங்கு விரிவஞ்சி தவிர்க்கப்பட்டுள்ளது.

நான் மேற்கொண்டிருக்கும் இச் சிறு முயற்சி ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வாசகர்களின் கைக்கெட்டாத பல்வேறு அறிவுக் கருவூளங்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு வெளிக்கொண்டு வந்து வாசகர்களின் அறிவுத் தாகத்தைத் தீர்ப்பதன் ஓர் முதல் முயற்சியாகும். இப்பனியில் நடைபயிலும் எனது முதல் முயற்சியில் ஆங்காங்கே குறைகள் காணப்படலாம். எனவே அதனைப் பெரிது படுத்தாது எனக்கு அன்பாய்த் தெரியப்படுத்தி இப்பணியில் அணையா ஒளிவிளக்காய் அறியாமை இருளகற்ற என்றும் வாசகர்கள் துணை நிற்பீர் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கின்றேன்.

இவன்

அல் ஹாபிழ், அஷ் ஷேய்க் சஹாப்தீன் முஹம்மது ஜஸர் (நத்வி)

# முன்னுரை

ஈருலகிலும் மனிதன் வெற்றியடைவதற்குத் தேவையான சரியான பாதையிலும் நியாயமான சிறந்த செயல்களிலும் வழிகாட்டிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் உரித்தாகட்டும்.

தொழுகை என்ற பெயரிலான இந்நூல் அல் குர்ஆனைக் கற்றுத் தேர்ந்த மேதைகளின் விலைமதிக்க முடியாத அறிவுக் கருவூலங்களை உள்ளடக்கிய ஓர் நூலாகும். இந்நூல் தொழுகையில் இடம்பெறுகின்ற தவறுகள், நபிகளார் மீது ஸலவாத்துச் சொல்வதில் ஏற்படுகின்ற பிழைகள், தவறுகள் உள்ளடங்களாக ஏனைய பல முக்கிய பிரச்சினைகளையும் அவற்றிற்கான தீர்வுகளையும் உள்ளடக்கியுள்ளது. சுருங்கக் கூறின் தொழுகைக்கான ஓர் **கலைக் களஞ்சியமாக** வடிவமைக்கப்பட்டுள்ளது. உண்மையை உணர்த்துவதன் மூலம் மக்கள் மனதில், உள்ளங்களில் காணப்படும் தவறான, நம்பிக்கைகள், தப்பபிப்பிராயங்களை படம்பிடித்துக் காட்டுகின்றது.

தொழுகை பித்அத் வாதிகளின் செயற்பாடுகள் மற்றும் தொழுகை பற்றிய பூரண அறிவில்லாதவர்களினால் நன்மை பெறும் நோக்கோடு உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்களிலிருந்து தூய்மையாக்கப்பட்டு நபிகளாரின் சிறந்த வழிகாட்டலினூடாக மிக்க அவதானமாக நிறைவேற்றப்பட வேண்டிய ஓர் கடமையாகும்.

இவ்வாறு நிறைவேற்றப்படும் ஓர் தொழுகைக்கு அபரிமிதமான நன்மைகளை வழங்குவதாக அல்லாஹ் வாக்களிக்கின்றான். இறைவனின் சட்டதிட்டங்களையும் அவனது நியதிகளையும் சிரமேற்கொண்டு தவறாது சட்டதிட்டங்களுக்கு அடிபணிந்து வாழ்கின்றவர்கள் இறைவனின் உயர்வான அந்த நன்மைகளைப் பெற்றுக் கொள்வர். மாறாக இறைச்சட்டங்களுக்கு மதிப்பளிக்காது அவற்றைப் புறக்கணித்து வாழ்வோர் துன்பத்தையும் அவமானத்தையுமே பெற்றுக் கொள்வர்.

எந்த ஒரு ஆத்மாவும் தான் செய்த குற்றத்தை உணராது உண்மையை ஆராயாது உள்ளதோ அது நரகத்துக்கு செல்லும் கூட்டத்தோடுதான் இணைந்து செல்லும். ‘‘அவர்களே நேர்வழிக்குப் பதிலாக வழிகேட்டையும், மன்னிப்புக்குப் பதிலாக வேதனையையும் விலைக்கு வாங்கிக் கொண்டவர்கள். ஆகவே நரக நெருப்பின் மீது, அவர்களை சுகிக்கச் செய்தது எதுவோ?” (2:175)“அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்போர் அல்லாஹ்வின் அருளைப் பெற்ற நபிமார்கள் உண்மையாளர்கள், உயிர் தியாகிகள் மற்றும் நல்லோருன் இருப்பர்.அவர்களே மிகச் சிறந்த நன்பர்கள்”.(4:69)

மேற்படி அல்குர்ஆன் வசனங்கள் மிக ஆழமான கருத்துக்களை முன்வைக்கின்றன. எந்த மனிதன் உண்மையை ஏற்று நன்மைகளைச் செய்கின்றானோ நிச்சயமாக அவன் சிறந்த கூட்டத்தின் ஓர் அங்கத்தவனாக இருப்பான்.அக்கூட்டம் இறை ஒளியிலும், இறை அருளிலும் நிலையாக வாழும்.இம்மனிதர்களை அல் குர்ஆன் நான்கு தராதரங்களில் வகைப்படுத்துகின்றது. **முதலாவது தரத்தினர்** அல்லாஹ்விடமிருந்து செய்திகளையும் கட்டளைகளையும் பெற்று வந்த நபிமார்களும் ரஸூல்மார்களுமாவல்.அவர்கள் உயர்வான தரத்தையுடையவர்கள்.அவர்கள்தாம் மனித நேயத்தை அதன் உண்மையான வடிவில் காண்பித்த உதாரணப் புருஷர்கள்.**இரண்டாவது தரத்தினர்** உண்மையை நேசிப்பதுடன் உண்மையாளர்களுக்கு ஆதரவளிப்போருமாவர்.நம்பிக்கையும் நேர்மையுமே அவர்களின் அடையாளமாகும்.வாழ்வின் இலக்கும் கவர்ச்சியும் அவர்களில் நிறைச்திருக்கும்.அவர்களே அன்னலாரின் அருமைத் தோழர்கள்.**மூன்றாவது தரத்தினர்** உண்மையை உரத்துச் சொன்ன சாட்சியாளர்களின் உயர்ந்த படையினர்.அவர்களின் சாட்சியம் துச்சமாக மதித்த உயிராகவோ அல்லது சத்தியத்தை சத்தியத்தை உரத்துச் சொன்ன நாவாகவோ அல்லது பேரறிஞர்களின் சிந்தனைகளைப் பதித்த நாவாகவோ அல்லது சேவைக்காக ஒரு மனிதன் அர்ப்பணம் செய்த வாழ்வாகவோ இருக்கலாம்.**நான்காவது தரத்தினர்** நேர்மையான மனிதர்கள் அவர்கள் ஓர் பெரும் கூட்டத்தினராகக் காணப்படுவர்.அவர்கள் தமது நாளாந்த செயற்பாடுகளை எப்பொழுதும் நேர்த்தியாகவும் நியாயமான வழியிலுமே நிறைவேற்றுவர்.

## தொழுகையில் பெண்களின் ஆடை

பெண்கள் தங்களை தொழுகையில் மறைத்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியமாகும்.அவர்களில் பெரும்பான்மையானோர் தலை முடி, கழுத்து போன்ற மேற்பகுதிகளை மிகச் சரியாக மறைக்கும் அதேநேரம் உடலின் கால் போன்ற கீழ்ப் பகுதிகளில் கவனம் செலுத்துவது கிடையாது. அவர்கள் தங்கள் தொழுகையில் மிக மெல்லிய இறுக்கமான கெண்டைக் காலைக் கூட மறைக்காத அளவு கட்டையான ஆடைகளை அணிகின்றனர். சில வேளைகளில் நைலோனாளான மெல்லிய காலுறைகளை அணிகின்றனர். ஆனால் அவை மேலும் கவர்ச்சியை அதிகரிக்கின்றது. இவ்வாறான ஆடையமைப்புடன் தொழுகையை நிறைவேற்றுவது வரவேற்கத்தக்கதல்ல. இவர்கள் ஆரம்பகால ஸஹாபியப் பெண்மணிகளை முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும். **அவர்களுக்கு ஹிஜாப் பற்றிய வசனங்கள் இறங்கியபோது தங்களது ஆடையின் ஒரு பகுதியைக் கிழித்து தங்கள் தலைகளையும் மார்பகங்களையும் மறைத்துக் கொண்டனர்.** ஆனால் தற்காலப் பெண்களையும் அவ்வாறு ஆடைகளைக் கிழித்து மறைக்க வேண்டும் எனக் கூறவில்லை. மாறாக தாங்கள் அணியும் ஆடைகளை பொருத்தமான ஆடைகளாக அணிய வேண்டும் என்பதையே எதிர்பார்க்கப்படுகின்றது.

சில இடங்களில் அதிகமான முஸ்லிம்கள் கால்ப்பாதம் மறைக்க வேண்டிய பகுதியல்ல என்ற தவறான சிந்தனையின் நிமித்தம் தமது ஆடைகளை பாதம் வெளித் தெரியும் வண்ணம் அணிந்து கொள்கின்றனர். ஆனால் இஸ்லாத்தின் பார்வையில் அவை கட்டாயம் மறைக்கப்பட வேண்டிய பகுதிகளில் உள்ளடங்குகின்றது. அல்லாஹ் எமது அனைத்து செயற்பாடுகளுக்கும் தகுந்த கூலி வழங்க வேண்டும்.

## ஆண்களின் ஆடைகள்

ஆண்கள் தம் தொழுகையில் தொப்புள் மற்றும் முழங்காலுக்கு இடைப்பட்ட பகுதியை அவசியம் மறைக்க வேண்டும்.எனினும் கூடுதல் ஆடை உள்ளவர்கள் கண்டிப்பாகத் தோள் புயத்தையும் மறைத்துத் தொழ வேண்டும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் ‘‘உங்களில் யாரும் உங்கள் தோளின் மீது துணி எதுவும் இல்லாதிருக்க ஒரே ஆடை அணிந்து கொண்டு தொழ வேண்டாம்’’ எனக் கூறினார்கள்.

ஆனால் ஆடை இல்லாதவர்கள் “இடுப்பில் மட்டும் துணியைக் கட்டிக்கொண்டு தொழ முடியும்”. அதே வேலை கரண்டைக்குக் கீழாக ஆடை அணியும்

விடயத்திலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அபூஹுரைரா (ரழி) அறிவிக்கின்றார்கள் "ஒரு மனிதர் தனது ஆடை தரையில் இழுபட்ட நிலையில் தொழுதார். இதனைக் கண்ட நபியவர்கள் அம்மனிதரை அழைத்து மீண்டும் வுழூச் செய்து வருமாறு கூறினார்கள். அவர் வுழூச் செய்து கொண்டு வந்த போது மீண்டும் நபிகளார் அவரை வுழூச் செய்து வருமாறு கூறினார்கள். அவ்வேளையில் அங்கிருந்த பிறிதொரு மனிதர் நபிகளாரிடம் அல்லாஹ்வின் தூதரே எதற்காக அவரை மீண்டும் மீண்டும் வுழூச் செய்து வருமாறு கூறினீர்கள்? எனக் கேட்டார். அதற்கு நபிகளார் (ஸல்) அவர்கள் அம்மனிதர் தனது ஆடை தரையில் பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் தொழுதார். "நிச்சயமாக அல்லாஹ் ஆடைகள் தரையில் இழுபட்ட நிலையில் தொழுபவனின் தொழுகையை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டான்". எனக் கூறினார்கள்.

எனவே ஒரு முஸ்லிம் தனது ஆடைகள் விடயத்தில் கவனம் செலுத்துவது அவசியமாகும். அவ்வாறே இறைவனால் தடுக்கப்பட்ட இச்செயற்பாடுகளுக்கு அஞ்சவும் வேண்டும். இறை தண்டனையையும் அவனது கோபத்தையும் அஞ்சி நபிகளாரின் சுன்னாவையும் பின்பற்றிதொழுகும் மனிதன் தனது ஆடைவிடயத்திலும் கவனம் செலுத்தும் முகமாக தனது ஆடைகளை கரண்டைக்குக் கீழாக அணியாதிருக்க வேண்டும். இவ்வாறானவர்களுக்கு அல்லாஹ் நேரான பாதையைக் காட்டுவான்.

## சிறுவர்களும் பள்ளிவாயலும்

சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை காற்சட்டைகளை அணிந்த நிலையில் பள்ளிவாயலுக்கு அழைத்து வருகின்றனர். ஆனால் நபியவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஏழு வயதானதும் தொழுகையைக் கற்றுக் கொடுங்கள் எனக் கூறியது தொழுகைக்கான சட்டதிட்டங்கள், நடைமுறைகள் அனைத்தும் உள்ளடங்களாகத்தான். எனவே பெற்றோர் தமது பிள்ளளைகளது ஆடைகள் விடயத்திலும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். அவ்வாறே பள்ளிவாயல்களுக்கு சமூகமளிக்கும் இளம் சிறார்களை தனியாக வேறுபடுத்தி வைப்பது வரவேற்கத் தக்கதல்ல.ஏனெனில் அது பல்வேறு அசௌகரியங்களையும் இடைஞ்சல்களையும் ஏற்படுத்தி விடும். எனவே பெரியோர் நிற்கின்ற ஸப்களிலே போதியளவான இடம் இருப்பின் அவர்களுக்கு தொழுகையைக் கற்பிக்கும் நோக்கில் சிறுவர்களும் நிற்பதில் எவ்வித தவறுகளும் இல்லை. அதற்கான தெளிவான ஆதாரங்களும் காணப்படுகின்றன.

## தொழுகையில் ஆடைகளை மடித்தல

தொழுகையில் ஆடைகளை அதன் உரிய அமைப்பில் அணிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். எனவேதான் ஆடைகளை மடிப்பது தொடர்பில் பல வகையான எச்சரிக்கைகளை இஸ்லாம் முன் வைத்துள்ளது. இமாம் இப்னு குஸைமா அவர்கள் தனது "அஸ் சுன்னா" எனும் நூலில் தொழுகையில் ஆடைகளை மடித்தல் என்ற ஓர் தலைப்பைத் தனியாகக் கொண்டுவந்துள்ளார்.

இமாம் நவவி கூறுகையில், "தொழுகையில் ஆடைகளை மடித்தல் அல்லது கைச்சட்டைகளை சுருட்டி விடுதல் தடுக்கப்பட்ட விடயமாகும்" எனக் கூறுகின்றார்.

இமாம் மாலிக் (றஹ்) கூறுகையில், "ஒருவன் தனது வேலைகளின் நிமித்தம் கைச் சட்டைகளை மடித்து பின்னர் தொழுகைக்கான நேரம் வருகையில் தான் உணராத நிலையில் அதே நிலையில் தொழுதால் அவர் மீது குற்றமில்லை. மாறாக தொழுகையின் போதோ அல்லது தொழுகை ஆரம்பிப்பதற்கு முன்பாகவோ வேண்டுமென்றே அவ்வாறு செய்த நிலையில் தொழுவாரானால் அது குற்றமாகவே கணிக்கப்படும். எனினும் எனது கருத்தின்படி ஹதீதில் குறிப்பிடப்பட்டிருப்பது பொது விதியே என்ற வகையில் தொழுகைக்கு முன்பாகவோ தொழுகின்ற சமயத்திலோ ஆடைகளை மடித்தல் என்பது குற்றமாகவே கணிக்கப்படும்."

இமாம் அந்நவவி கூறுகையில், "தொழுகையில் ஆடைகளை மடிப்பதோ தலை முடியை ஒன்று சேர்ப்பதோ மிகவும் வெறுக்கத்தக்கது. எனவே இவ்வாறான செயற்பாடுகளை தொழுகையில் செய்தால் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது." இக்கருத்தினை அபூ ஜஹ்பர் முஹம்மத் இப்னு அத் தபரீ அவர்களும் குறிப்பிடுவதுடன் இக்கருத்து பெரும்பான்மையான அறிஞர்களின் உடன்பட்ட கருத்துமாகும் எனக் குறிப்பிடுகின்றார்.

இப்னு முன்திர் (றஹ்) கூறுகையில், "யாராயினும் ஒருவர் ஆடையினை மடித்த நிலையில் தொழுகையை நிறைவேற்றுவாரானால் அத்தொழுகை ஏற்கப்படமாட்டாது. அதனை மீட்டித் தொழ வேண்டியது அவசியமாகும். மேலும் அவர் கூறுகையில் இத்தடை பொதுவானது. அவர் தொழுகையின் போது செய்தாலும் தொழுகைக்கு முன்னராக அவர் செய்தாலும் சரியே."

அல்தாவூதி கூறுகையில், "தொழுகையில் வேண்டுமென்றே இச்செயற்பாடுகளை செய்வோருக்கு இத்தடை விதிக்கப்பட்டுள்ளது. மிகச்சிறந்த அபிப்பிராயம் சஹாபாக்களாலும் ஏனையோராலும் மேற்கொள்ளப்படும் முறைகளே."

## சாயமிடப்பட்ட ஆடைகள்.

இஸ்லாம் ஆடைகள் விடயத்தில் கவணம் செலுத்துகின்ற அதேவேலை அதன் நிறம் தொடர்பிலும் சில வறையறைகளையும் சட்டங்களையும் முன்வைத்துள்ளது. அந்த வகையில் கண்ணைப் பறிக்கும் கவர்ச்சியான நிறங்கள், கருமையான நிறங்கள் அந்நிய மதத்தவர்களின் கலாசாரங்களைப் பிரதிபலிக்கக் கூடிய வகையிலான நிறங்கள் போன்றவற்றை இஸ்லாம் தடை செய்துள்ளது.அப்துல்லாஹ் பின் அம்ர் (றழி) அறிவிக்கின்றார்கள், ஒரு முறை குங்குமப்பூ சாயமிடப்பட்ட ஆடையை அணிந்த என்னைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் ''இது காபிர்களுடைய செயற்பாடு. எனவே ஒரு போதும் இவ்வாறான ஆடைகளை அணியக்கூடாது என எனக்கு உபதேசித்தார்கள்.''

## தலையை மூடாது தொழுதல்

தொழுகையின் போது ஆண்கள் தங்களது தலைகளை மறைக்க வேண்டிய அவசியம் கிடையாது. பெண்களது தலை மறைக்க வேண்டிய பகுதிகளில் உள்ளடக்கப்படுவதால் அவர்கள் தலைகளை மறைப்பது அவசியமாகும். பொதுவாக ஓர் முஸ்லிமான ஆண் தொழுகையின் போது மிகச்சிறந்த அழகான அமைப்பிலும், மிக நேர்த்தியான அமைப்பிலும் இருக்க வேண்டும் என்பதை இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. எனவே அவர் தலையை மறைக்கும் முகமாக தலைப்பாகையையோ அல்லது வேறுவகையான தலைக்கவசத்தையோ அணிவது விரும்பத்தக்கது. ஆனால் பர்ளான கூட்டுத் தொழுகையில் தலையை மறைக்காதிருப்பது மிகவும் வெறுக்கத்தக்க விடயமாகும் என்பதை இமாம் அல்பானி அவர்கள் கூறுகின்றார்கள். "தலையை மூடாது தொழுகை நிறைவேற்றுவது மிகவும் வெறுக்கத்தக்கதாகும். ஒரு முஸ்லிம் தொழுகைகளின் போது மிக அழகான தோற்றத்தில் தன்னை அமைத்துக் கொள்ள வேண்டும்".

## தொழுகையில் கவனத்தைத் திருப்பக்கூடிய அலங்காரங்களைப் பயன்படுத்தல்.

அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், ''ஒரு முறை அன்னை ஆயிஷா (றழி) அவர்கள் அவர்களது அறையின் ஓர் சுவரில் அலங்காரங்கள் நிறைந்த திரைச்சீலை ஒன்றைத் தொங்க விட்டார்கள். அதனைக் கண்ட நபிகளார் அதனை அகற்றிவிடுமாறு கூறிவிட்டு "இந்த அலங்காரம் என்னைத் தொழுகையை விட்டும் திசைதிருப்புகின்றது" எனக் கூறினார்கள். இந்த நபி மொழி படங்கள் மற்றும் அலங்காரம் நிறையப் பெற்ற இடத்தில் தொழுகையை நிறைவேற்றக் கூடாது என்பதைத் தூண்டுவதுடன் தொழுகையின் கவனத்தை திசை திருப்பக்கூடிய

செயற்பாடுகளை அகற்றுதல் அவசியம் என்பதை உணர்த்துகின்றது.'' மேலும் நபி (ஸல்) அவர்கள் இங்கு தொழுகையை நிறுத்திவிடவோ மீட்டவோ இல்லை. என்பதால் அவ்வாறான இடங்களில் தொழுகின்ற தொழுகை நிராகரிக்கப்படமாட்டாது என்பதையும் உணர்த்துகின்றது.

## கோயில்கள் அல்லது படங்கள் காட்சிப்படுத்தப்பட்ட இடங்களில் தொழுதல.

ஷைகுல் இஸ்லாம் இமாம் இப்னு தைமியா (றஹ்) அவர்கள் கூறுகின்றார்கள், ''கோயில்கள் அல்லது படங்கள் காட்சிப்படுத்தப்பட்ட இடங்களில் தொழுகையை நிலைநாட்டுதல் உறுதியாக தடுக்கப்பட்டது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.''

ஜாபிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், ''முஸ்லிம்கள் மக்காவை வெற்றி கொண்ட போது நபி (ஸல்) அவர்கள் உமர் (றழி) அவர்களிடம் கஃபாவின் சுவர்களில் வரையப்பட்ட அனைத்துப் படங்களையும் அழித்து விடுமாறு கட்டளை பிறப்பித்தார்கள். பின்னர் அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டது என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னர்தான் நபி (ஸல்) அவர்கள் கஃபாவினுள் நுழைந்தார்கள்.'' மேலும் ''ஸஹாபாக்கள் படங்கள் இல்லாத வெறுமையான கோயில்களில் பல தடவைகள் தொழுகையை நிலைநாட்டி இருக்கிறார்கள்" என்பதையும் காணமுடிகிறது. உமர் (றழி) கிறிஸ்தவர்களை நோக்கிக் கூறினார்கள், ''உங்களது கோயில்களில், தேவாலயங்களில் படங்கள் வரையப்பட்டதன் காரணமாகவேதான் நாம் அதனுல் உட்பிரவேசிக்கமாட்டோம்.'' இப்னு அப்பாஸ் (றழி) சிலவேலைகளில் "படங்கள் வரையப்படாத தேவாலயங்களை தொழுகைக்காக பயன்படுத்தியுள்ளார்கள்". (மேற்படி ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ள படங்கள் எனக் குறிப்பிடப்படுவது உருவப்படங்களேதான்.)

இப்னுல் கையூம் அல் ஜெளஸி (றஹ்) கூறுகிறார்கள், "தடுக்கப்பட்ட படங்கள் என்பது உருவப்படங்களே அவை சிலை வடிவமாகவோ, சுவர்களில், திரைச்சீலைகளில் வரையப்பட்டதாகவோ, துணிகள், விரிப்புகளில் செய்யப்பட்ட அலங்கார வேலைப்பாடுகளாகவோ எவ்விதமானதாக இருந்தாலும் சரியே". சில உலமாக்களின் கருத்துப்படி "மரங்கள் தாவரங்களில் இருந்தாலும் அவை தடுக்கப்பட்டவைகளின் பட்டியல்களில் உள்ளடக்கப்படும்".

## மண்ணறைகளின் மீது அல்லது மண்ணறைகளை நோக்கித் தொழுதல.

ஜுன்துப் பின் அப்துல்லாஹ் அல் பஜாலி (றழி) அறிவிக்கின்றார்கள், நபி (ஸல்) அவர்கள் மரணிப்பதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் அவர்கள் கூறியதை நான் செவிமடுத்தேன். நபியவர்கள் கூறினார்கள், "உங்களில் எனக்கு கலீல் (மிகவும் நேசத்திற்குரியவர்) யாரும் இல்லை. அல்லாஹ் நபி இப்றாஹீம் (அலை) அவர்களை கலீலாக தெரிவு செய்து கொண்டது போல் என்னையும் கலீலாக தெரிவு செய்துள்ளான். உங்களில் நானும் கலீலாக ஒருவரைத் தெரிவு செய்வதாக இருந்தால் அபூபக்கரை கலீலாக தெரிவு செய்திருப்பேன். உங்களுக்கு முன்னர் வாழ்ந்தோர் அவர்களது நபிமார்களின் மண்ணறைகளை வணக்கஸ்த்தலமாக ஆக்கிக் கொண்டது போல் எனது மண்ணறைகளை வணக்கஸ்த்தலமாக ஆக்கிக் கொள்ள வேண்டாம். உண்மையில் நான் அதனை முற்றாகத் தடுக்கின்றேன்."

மேற்படி ஹதீஸ் பின்வரும் விதிமுறைகளை சுட்டிக் காட்டுகின்றது.

1. மண்ணறை எனக் கூறப்பட்டதன்படி மண்ணறைகளாகப் பயன்படுத்தப்படக்கூடிய முழு இடமும் தொழுவதற்கு தடுக்கப்பட்ட இடங்களே.
2. மண்ணறைகள் மீது கட்டப்பட்ட பள்ளிவாயல்கள் இடிக்கப்பட வேண்டும். அவ்வாறே **அதன் மீது கட்டப்பட்ட பள்ளிவாயல்களில் தொழுகின்ற தொழுகையும் நிராகரிக்கப்படும். என்பதும் அனைவராலும் ஏகோபித்த முடிவாகும்.**

அத்தோடு இவ்வாறான இடங்களில் பள்ளிவாயல்கள் கட்டப்படாவிட்டாலும் கூட அவ்விடங்களில் தொழுவதும் வெறுக்கத்தக்க, தடுக்கப்பட்ட ஒன்றாகும். ஏனெனில் நபிகளார் (ஸல்) அவர்கள் கூறினார்கள், "மண்ணறைகளில் அமரவும் வேண்டாம் அதனை நோக்கித் தொழவும் வேண்டாம்." மேலும் கூறினார்கள், "உங்கள் வீடுகளில் தொழுகையை நிலைநாட்டுங்கள். அவற்றை மண்ணறைகளாக (ஏனெனில் மண்ணறைகள் தொழக்கூடாத இடம் என்பதால்) ஆக்கிக் கொள்ள வேண்டாம்".மேலும் மண்ணறைகளை நோக்கியோ அல்லது அவற்றிற்கு அருகாமையிலோ தொழுகையை நிலைநாட்டவும் முடியாது.

சில ஸஹாபாக்களின் கருத்துப்படி மண்ணறைகளில் தொழக்கூடாது என தடுக்கப்பட்டதன் பின்னணிக் காரணி யாதெனில் "அவ்விடங்கள் நஜீஸானவை. எனவே நஜீஸான இடங்களில் தொழமுடியாது என்பதனாலாகும்". இருந்த

போதிலும் இத்தடைக்கான காரணி இதைவிட அதிகமானதும், விரிந்ததுமாகும். அத்தோடு "இவ்வாறான இடங்களில் தொழுதல் மறைமுகமாக சிலை வணக்கத்திற்கு ஒப்பானதாகவே காணப்படுகின்றது".

இமாம் ஷாபி (ரஹ்) அவர்கள் கூறினார்கள், "கல்லறையைத் தொழுகின்ற தளமாக ஆக்கிக் கொள்வது அல்லாஹ்வின் படைப்பை அவற்றிற்கு ஒப்பாக்குவதற்குச் சமமாகும். இது மக்களைத் தவறான வழியில் வழிகாட்டுகின்ற ஓர் பிழையான செயற்பாடாகும். கல்லறைகளை தொழுகைக்குரிய இடமாக்கி அல்லாஹ்வின் படைப்பை அவனுக்கு ஒப்பாக்குகின்ற இச்செயற்பாட்டை நான் மிகவும் வெறுக்கின்றேன். இவ்வாறான பாதையில் யார் வழிநடத்துகின்றார்களோ அவர்கள் தவறான பாதையிலே வழிநடத்துகின்றார்கள்."

இந்த அடிப்படையை நபி (ஸல்) அவர்கள், ''யா அல்லாஹ் எனது மண்ணறையை மக்கள் வணங்குகின்ற வணக்கஸ்த்தலமாக ஆக்கி விடாதே''. என்ற பிரார்த்தனையினூடாகக் கூறினார்கள்

மேலும் நபிகளார் (ஸல்) தன் அருமைத் தோழர்களுக்குக் கூறினார்கள், "காபிர்கள் தங்களில் உள்ள நல்லடியார்களின் மண்ணறைகளின் மீது பள்ளிவாயல்கள் கட்டி , அவற்றின் மீது சிலைகளைச் செதுக்கினார்கள். இவர்கள் இறைவனின் பார்வையில் அவனது படைப்புகளில் மிக மோசமானவர்கள்."

மேற்கூறிய ஹதீதில் நபி (ஸல்) அவர்கள் இரண்டு வகையான மிகப் பெரும் பாவங்களை சுட்டிக்காட்டியுள்ளார்கள். ஒன்று, "மண்ணறைகளை வணக்கஸ்த்தலங்களாக எடுத்துக் கொள்ளல்". மற்றையது "அவற்றில் சிலைகள் செதுக்குதல்".

## இதன்படி மையவாடிகளில் (ஒரேயொரு புதைகுழி மாத்திரம் இருந்தாலும் சரியே) தொழுவது தடுக்கப்பட்ட, நிராகரிக்கப்பட்ட விடயமாகும்.

"இக்திதா அஸ்ஸிராதுல் முஸ்தகீம் என்ற நூலில்" ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் இமாம் அஹ்மதின் மத்ஹபை பின்பற்றுவோருக்கிடையிலான கருத்து வேறுபாடு ஒன்றைக் கூறிக்காட்டுகின்றார். ''மையவாடிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள பள்ளிவாயல்களில் தொழுதல் (தொடர்பாகவும்) , மற்றும் ஓர் பகுதி மையவாடி எனக் குறிப்பிடப்படுவதற்கு ஆகக் குறைந்த மண்ணறைகள் ஒன்றா, மூன்றா (என்ற விடயம் தொடர்பாகவும்)

மேற்படி விடயம் தொடர்பாக அவர்கள் இரு வேறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளார்கள். அவர்களது இரண்டாவது அபிப்பிராயத்தின் படி “ஒரேயொரு மண்ணறையாயினும் அதனை நோக்கித் தொழுவது முற்றாகத் தடுக்கப்பட்டது என்பது அவர்களது ஏகோபித்த கருத்தாகும். அவ்வாறே ஒரேயொரு மண்ணறை அமைந்திருந்தாலும் அது மையவாடியாகவே கருதப்படும்” என்பதும் அவர்களது கருத்தாகும்.

ஹம்பலி மத்ஹபினர்களின் கருத்தின்படி “மையவாடியைச் சூழவுள்ள பகுதிகளும் அதனைச் சார்ந்ததே. என்ற வகையில் அவ்விடங்களிலும் தொழ முடியாது.”

ஆனால் மையவாடியையும், பள்ளிவாயலையும் பிரிக்கக் கூடிய வகையில் யாதாயினும் தடைச் சுவர் அமைத்திருந்தால் அவ்வேளையில் அப்பள்ளிவாயலில் தொழுவது ஆகுமானது. ஆனால் பள்ளிவாயலின் சுவரை மாத்திரம் ஓர் தடையாகக் கொள்ள முடியாது. குப்ரின் மீது அமைக்கப்பட்ட பள்ளிவாயல்களில் தொழுவது தடுக்கப்பட்டது போல் வலமாகவோ, இடமாகவோ, முன்புறமோ, பின்புறமோ எத்திசையில் இருப்பினும் தடைச் சுவர் இல்லையெனில் அவ்விடத்தில் தொழுவது தடுக்கப்பட்டதே. இங்கு மிகப்பிரதானமான பிரச்சிணை இரண்டு. ஒன்று “கப்ருகளின் மீது பள்ளிவாயல் கட்டப்படுதல்.” இரண்டு “கல்லறைகளை நோக்கித் தொழுதல்.” இவை இரண்டும் முற்றிலும் தடுக்கப்பட்ட விடயங்களாகும்.

(மேற்கூறப்பட்ட மண்ணறைகள் கட்டப்படுதல் என்ற தடைசெய்யப்பட்ட விடயம் மண்ணறை நிலமட்டத்தை விட மேலாகக் காணப்படுவதே ஆனால் அதில் நில மட்டத்தை விட பணிவாகக் காணப்படுமாயின் அது தடுக்கப்பட்ட ஒன்றல்ல.)

## தொழுகையில் தனக்கென ஓரிடத்தை ஒதுக்குதல்.

பள்ளிவாயலில் பர்ளான தொழுகைக்காக தனக்கென தனியான ஓரிடத்தை நிலையாக வைத்திருப்பதற்கு இமாமைத் தவிர வேறெந்த ம.ஃமூமுக்கும் அனுமதி கிடையாது.

அப்துர் றஹ்மான் இப்னு ஷிப்லி (றழி) அறிவிக்கிறார்கள், “அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் காக்கை கொத்துவது போல் விரைவாகத் தொழுவதையும் தொழுகையின் இருப்பில் நாய் அமர்வதைப் போல் கால்களை அகட்டி வைத்துக் கொண்டு அமர்வதையும், ஒட்டகங்கள் ஓய்வெடுப்பதற்கு நிலையான ஓரிடத்தில்

வைக்கப்படுவது போல் தொழுகைக்காக பள்ளியில் ஓரிடத்தை நிலையாக வைத்திருப்பதையும் நபி(ஸல்) அவர்கள் தடுத்தார்கள்."

யசீத் இப்னு அபீ உபைத் (றழி) அறிவிக்கின்றார்கள், "நான் ஸலாமா இப்னு அல் அக்வாவுடன் ஒன்றாக இணைந்து பள்ளிவாயலுக்குச் செல்வேன். அவர் வழக்கமாக அவருடைய தொழுகைகளை அல்குர்ஆன் வைப்பதற்கென ஒதுக்கப்பட்ட இடத்திற்கு அருகாமையில் உள்ள கம்பம் முன்னால் நின்று தொழுது வந்தார். நான் ஒரு முறை அவரைப் பார்த்து அபூ முஸ்லிமே நீ எப்பொழுதும் ஒரே இடத்தில் நின்று தொழுவதை அவதானித்தேன்?.... எனக் கூறியபோது அவர் உண்மையில் நான் நபி (ஸல்) அவர்கள் பல தடவைகள் இவ்விடத்தில் நின்று தொழுவதை கண்டிருக்கிறேன் எனக் கூறினார்கள்."

மேற்படி இரண்டு ஹதீஸ்களும் ஒன்றுக்கொன்று முரணானது போன்று தோன்றினாலும் உண்மையில் அவ்வாறல்ல. அதாவது "நபி (ஸல்) அவர்கள் சுன்னத்தான தொழுகைக்காக தனியான இடத்தை தனக்காக வழமையாக்கிக் கொண்டார்கள். அத்தோழர் சுன்னாவை பின்பற்றும் முகமாக அதனை அவர் வழக்கமாக்கிக் கொண்டார்". உண்மையில் நபிகளாருடைய ஹதீஸ்களை நன்கறிந்திருந்த ஸஹாபாக்கள் அவர்களுடைய பொதுவான விடயம் எது குறிப்பான விடயம் எது என்பதையும் நன்கறிந்திருந்தார்கள். மேலும் யசீதுடைய ஹதீஸ் "நபிகளாரின் செயல்கள், கொள்கைகள், கால இட ஒழுங்குகள் அனைத்தையும் அறிந்து கொள்ள வேண்டும். என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது".

இமாம் இப்னு ஹஜர் (றஹ்) தனது பத்ஹுல் பாரியில் மேற்படி ஹதீதில் இடம்பெற்ற ''கம்பம்'' பற்றி பின்வருமாறு விளக்குகின்றார். ''எமது கன்னியத்திற்குரிய உலமாக்களின் கருத்துப்படி மேற்படி கம்பம் றவ்ழாவின் மத்திய பகுதியில் அமைக்கப்பட்ட கம்பமேதான். அது முஹாஜிரீன் கம்பம் என அழைக்கப்படும்''. அண்ணை ஆயிஷா (றழி) அவர்கள் கூறுகையில் ''இந்தக் கம்பத்தின் அந்தஸ்தினை மக்கள் அறிவார்களாயின் அக்கம்பத்தின் முன்னே சென்று தொழுவதற்கு ஒவ்வொருவரும் முன்றியடித்துக் கொண்டு சண்டையிட்டுக் கொள்வார்கள்''. தாரீகுல் மதீனா எனும் நூலின் இமாம் இப்னுந் நஜ்ஜார் என்பவர் கூறுகையில் ''குறைஷியரால் முஸ்லிம்கள் மதீனாவிற்குத் துரத்தப்பட்ட வேலையில் இவ்விடத்தில்தான் அனைவரும் ஒன்றிணைந்தார்கள்''. இதே கருத்தையே முஹம்மத் பின் ஹஸன் என்பவரும் கூறுகின்றார்.

மேற்படி ஹதீதில் கூறப்பட்டுள்ள ''ஒட்டகங்கள் ஓய்வெடுப்பதற்கு நிலையான ஓரிடம் வைக்கப்படல்" என்ற கூற்று அது போல "தொழுகைக்கு ஓரிடம் நிலையாக வரையறுக்கப்படக் கூடாது என்பதோடு மிருகங்களைப்போல்

எமது நடத்தைகள் அமையக் கூடாது” என்பதையும் இது விளக்குகின்றது. மேலும் இவ்வாறான செயற்பாடுகள் ஓர் முஸ்லிமில் வேறு வகையான தாக்கங்களையும் ஏற்படுத்தக் கூடும். அதாவது “நாளை மறுமையில் ஓர் முஸ்லிம் ஸஜதா செய்த ஒவ்வோர் இடமும் அவருக்கு சாட்சியாக இருக்கும்” என நபி (ஸல்) கூறியிருக்கும் நிலையில் ஒருவன் குறிப்பான ஓர் இடத்தை மாத்திரம் தனக்காக வரையறுத்துக் கொள்கின்றபோது அந்த நண்மைகளை இழக்க வேண்டிய ஓர் நிலைக்குள்ளாகின்றான். மேலும் இவ்வாறான நிலையில் பழக்கப்பட்ட முஸ்லிம் தான் வேறு இடங்களில் தொழவேண்டிய நிர்ப்பந்தத்திற்குட்படுகின்றபோது தனது வழக்கத்தை மாற்ற முடியாத நிலைக்குள்ளாகி குறித்த தொழுகையை தொழாது விடக்கூடிய நிலையும் உண்டாகலாம்.

## தொழுகையில் சுத்ரா (தடுப்பு)

தொழுகையில் சுத்ரா என்பது மிக அவசியமான ஓர் சுன்னாவாகும். இது விடயத்தில் எவரும் பொடுபோக்காக இருந்து விட முடியாதளவு நபி (ஸல்) அவர்கள் வழியுறுத்தியுள்ளார்கள். இப்னு உமர் (றழி) அறிவிக்கின்றார்கள் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ‘‘தொழுகையை நிலைநாட்டும்போது சுத்ராவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கும் சுத்ராவுக்குமிடையில் ஷைத்தான் ஊடறுத்தச் செல்லாதவாறு நெருக்கமாக இருந்துகொள்ளுங்கள்”. இப்னு மஸ்ஊத் றழி அறிவிக்கின்றார்கள் “நான்குபேர் கடின உள்ளம் கொண்டவர்களாவர். அவர்களுள் சுத்ரா இன்றி தொழுபவர்களும், அதான் ஒலி கேட்டும் ஜமாஅத்துத் தொழுகைக்குச் சமூகமளிக்காதோரும் உள்ளடங்குவர்.” தொழுகையில் சுத்ராவை வைத்துக்கொள்ள வேண்டும் என்ற நபிகளாரின் இந்த வழிகாட்டலுக்கு கூடுதல் கவணம் செலுத்த வேண்டியது அவசியமாகும். ஏனெனில் அல்லாஹ்வின் தூதைக் கொண்டு வருகின்றார்கள் என்ற வகையில் நபிகளாருக்குக் கட்டுப்படுவது அவசியமாகும்.

சுத்ரா தொடர்பில் ஸஹாபாக்களின் கவனம் மிகக் கூடுதலாகக் காணப்பட்டது. இரண்டாம் கலீபா உமர் (றழி), மற்றும் இப்னு மஸ்வூத் (றழி) போன்றோர் “சுத்ரா இன்றி தொழுவதைக் கூட்டுத் தொழுகையை விடுவது போன்ற பாவமாகக் கருதினார்கள்.” இப்னு அப்துல் பர் கூறுகின்றார், அபூஸயீத் (றழி) கூறியதை இப்னு அப்பாஸ் (றழி) கூறுகிறார்கள். “நீங்கள் இமாமாகவோ தனியாகவோ தொழும்போது உங்கள் முன் எவரையும் கடக்க விட வேண்டாம்.” இப்னு அப்பாஸ் (றழி) யின் அறிவிப்பின் படி “ம.ஃமூமாக நின்று தொழும்போது யாராவது இடையே கடந்து சென்றால் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படும் என்பது அனைத்து இமாம்களாளும் உடன்பாடு காணப்பட்டதாகும்”. இங்கு பொதுவாக

சுத்ராவுக்காக எந்தப் பொருளையும் வைத்துக் கொள்ளலாம். இன்ன பொருள்தான் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை கிடையாது. தூனோ அல்லது சுவரோ இருந்தாலும் அதனை சுத்ராவாக ஆக்கிக் கொள்ளலாம்.

## ஆரம்ப தக்பீருடன் தொழுகைக்காக நிய்யத் வைத்தல.

முஸ்லிம்கள் எந்த வணக்கத்தை செய்வதாக இருந்தாலும் வணக்கம் செய்கின்றோம் என்ற எண்ணத்துடன்தான் செய்ய வேண்டும்.இந்த எண்ணமில்லாமல் வணக்கத்தின் அனைத்துக் காரியங்களையும் ஒருவர் செய்தாலும் அது வணக்கமாக அமையாது.இந்த வகையில் தொழுகையை நிலைநாட்ட முனைகின்ற ஒருவர் அல்லாஹ்வுக்காக இந்த தொழுகையை தொழுகின்றேன் என்று எண்ணிக் கொள்ள வேண்டும்.மாற்றமாக தொழுகைக்கான நிய்யத்தை வாயால் மொழிதல் மார்க்கமாக்கப்பட்டதுமல்ல, அறிஞர்களால் உறுதிப்படுத்தப்பட்டதுமல்ல. இதற்கு மாறாக இது ஒரு பித்ஆவாகும். யாராயினும் ஒருவர் ஷரீஆவில் அங்கீகரிக்கப்பட்டதாக எண்ணி அவ்வாறு செய்வாராயின் உண்மையில் அவன் அம்மார்க்கத்தை உதாசீனம் செய்துவிட்டார் என்ற வகையில் தண்டிக்கப்படுவார். விஷேடமாக உரத்து வாயால் மொழிகையில் தொழுகின்ற ஏனைய மு.்.மின்களுக்கும் இது இடையூறாகவும் அமைந்து விடுகின்றது.

எனவே நிய்யத்தை வாயால் மொழிவது தடுக்கப்பட்டது என்பது பற்றிய அறிஞர்கள் சிலரது கருத்துகள் பின்வருமாறு. காரி அபூராபி சுலைமான் இப்னு உமர் அஷ்ஷாபிஈ கூறுகின்றார். “நிய்யத்தை வாயால் மொழிதல், இமாமுடன் சேர்ந்து குர்ஆன் ஓதுதல் போன்றன நபி (ஸல்) அவர்களின் சுன்னாவிற்கு மாற்றமான வெறுக்கத்தக்க ஒன்றாகும். **ஒருவர் நிய்யத்தை உரக்க வாயால் மொழிந்து ஏனையோரது தொழுகைக்கு இடையூறு ஏற்படுத்துவாராயின் அது ஹராமாகும்.** இன்னொரு வகையில் மார்க்கத்தில் போதிய அறிவின்றி மார்க்க விவகாரத்தில் எந்த ஒரு விடயத்தையும் மேற்கொள்வது தடுக்கப்பட்டதுமாகும்.”

அபூ அப்தில்லாஹ் முஹம்மத் இப்னு அல்காஸிம், அல்தூனூரி அல்மாலிகி கூறுகின்றார். “நிய்யத் என்பது உள்ளத்தில் தோன்றுவதே. எனவே வாயால் மொழிவது பித்ஆவாகும்”. அஷ் ஷேய்க் அபா உதீன் இப்னு அத்தார் கூறுகின்றார். “மற்றவர்களுக்கு இடையூறை உண்டுபண்ணும் வகையில் நிய்யத்தை வாயால் மொழிவது ஹராமாகும். மாறாக ஏனையோருக்கு தொந்தரவின்றி வாயால் மொழிவது எனக் கருதினால் அது பித்ஆவாகும். வாயால் மொழிவது போல் பாசாங்கு செய்தல் பெரும் பாவமாகும். நிய்யத்தை வாயால் மொழிவதை கண்டனம் செய்வோர் சரியான, நேரான பாதையில் உள்ளார்கள். மாறாக

இஸ்லாத்தில் சட்டபூர்வமானது, அங்கீகரிக்கப்பட்டது எனக் கூறுவோர் உண்மையில் அவர்கள் குப்ர்-நிராகரிப்புக்குரிய செயலை செய்துள்ளார்கள். ஒவ்வொரு முஸ்லிமும் அவரவர்கள் தகுதிக்கேற்ப இதற்கெதிராகக் குரல் கொடுப்பது அவசியமாகும். ஏனெனில் இது நபிகளாரின் சுன்னாவோ, ஸஹாபாக்களின் வழிமுறையோ, முஸ்லிம் சமூகத்தின் அடிச்சுவடோ இல்லை."

தொழுகையில் நிய்யத்தை (மௌனமாகக் கூறுவது) எண்ணுவது அனுமதிக்கப்பட்டமை நான்கு இமாம்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். இமாம் அபூதாவூத் அவர்கள் "இமாம் அஹ்மதிடம் இஹ்ராம் தக்பீருக்கு முன் (யாரேனும்) ஏதாவது சொல்ல வேண்டுமா எனக் கேட்டபோது இமாமவர்கள் இல்லையென பதிலலித்தார்கள்."

இமாம் அஸ் ஸுயூத்தி கூறுகையில், "தொழுகைக்கா நிய்யத்தை வாயால் மொழிவது பித்ஆவாகும். ஏனெனில் இது நபிகளாரின் வழிமுறையில் காட்டப்படவுமில்லை, அவர்கள் இதனைச் செய்யவுமில்லை. அவர்கள் தக்பீரை மாத்திரம்தான் வாயால் மொழிந்தார்கள்." இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்களின் கருத்தைத் தழுவியதாக இப்னு அபீ அல் சாலிபீ என்பவர் கூறுகின்றார். "நான்கு இமாம்களில் எந்தவொரு இமாமும் நிய்யத்தை வாயால் மொழியுமாறு கூறவில்லை. உண்மையில் நிய்யத் என்பது உள்ளத்தில் எழக்கூடியதே. ஆனால் பின்வந்தோரே இமாம் ஷாபிஈ (றஹ்) கூறியதாக இதற்கு மாற்றமாக அபிப்பிராயங்களை முன்வைத்தனர்."

இமாம் இப்னுல் கையூம் கூறும்போது, "நபிகளார் தொழுகைக்காக எழுந்து நின்றால் முதலில் தக்பீர் சொல்வார்கள் அதற்கு முன்னர் எதனையும் கூறமாட்டார்கள்". சிலர் கூறுவது போல் (ழுகருடைய நான்கு ரக்அத்துக்களையும் கிப்லாவை முன்னோக்கி ம∴மூமாக, அல்லது இமாமாக அல்லாஹ்வுக்காகத் தொழுகின்றேன்.) என்று நபிகள் ஒரு போதும் வாயால் மொழிந்ததில்லை. இவைகள் அனைத்தும் பித்ஆவாகும். மேலும் ஸஹாபாக்கள் மூலமோ தாபிஈன்கள் மூலமோ அல்லது யார் சார்ந்த இமாம்கள் மூலமோ மேற்கொள்ளப்படவுமில்லை, வழிகாட்டப்படவுமில்லை. மாறாக பின்வந்த சிலரால் இமாம் ஷாபிஈ(றஹ்)வின் பெயரால் பொய்யாக தவறாக முன்வைத்த கருத்துக்களாகும்.

நிய்யத்தை வாயால் மொழிதல் "பித்ஆ" என்பது அனைவராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். யாராயினும் இது ஓர் "சுன்னா" எனக் கூறினால் அவர் உண்மையில் அம்மார்க்கத்தின் பெயரால் பொய்யை இட்டுக்கட்டி விட்டார்.

## தக்பீர் சொல்லுதல்.

அன்னை ஆயிஷா (றழி) அறிவிக்கின்றார்கள். “நபி (ஸல்) அவர்கள் தனது தொழுகையை தக்பீரைக் கொண்டு ஆரம்பிப்பவராக இருந்தார்கள்”. ஆபூ ஹுரைரா (றழி) அறிவிக்கின்றார்கள் “நபி (ஸல்) அவர்கள் தனது தொழுகையை முறையாகத் தொழாத ஒரு மனிதரை அழைத்து நீ உனது தொழுகையை தொழும்போது முதலில் வுழு செய்து கொள். கிப்லாவை முன்னோக்கு, தக்பீர் கூறு. பின்னர் நீ விரும்பியவாறு முடியுமான அளவு குர்ஆனை ஓது”. ஏனக் கூறினார்கள்.

இமாம் நவவி கூறுகிறார். “ஒருவர் ம.ஃமூமாக நின்று தொழுதாலோ அல்லது தனியாக நின்று தொழுதாலோ அவர் தக்பீரை தங்களுக்கு மாத்திரம் கேட்கும் வகையில் மெதுவான தொணியில் கூற வேண்டும். அதனூடாக மற்றவர்களுக்கு துன்பத்தையோ, இடையூறையோ எற்படுத்தக்கூடாது”. இதே ஒழுங்கைத்தான் அல்குர்ஆன் ஓதும்போதும், றுகூஉ, சுஜூதில் திக்ருகள் ஓதும்போதும், துஆ ஓதும்போதும் கூட கடைப்பிடிக்க வேண்டும். பர்ளான தொழுகையிலும் சுன்னத்தான தொழுகையிலும் இவ்விதியையே கடைப்பிடிக்க வேண்டும். ஒருவர் தாழ்ந்த குரலில் அனைத்து திக்ருகளையும் ஓதினால்தான் அவர் பூரணமான நன்மைகளைப் பெறுவார். இல்லையெனில் அந்நன்மைகளை அடைந்து கொள்ளமாட்டார்.

## கையை உயர்த்துதல்

ஆரம்ப தக்பீரின்போது “அல்லாஹு அக்பர்” எனக் கூறி தனது இரு கைகளையும் தோல் புயம் வரை அல்லது காதின் கீழ்ப் பகுதி வரை உயர்த்துவது அவசியமாகும். “நபி (ஸல்) அவர்கள் தனது தொழுகைகளில் றுகூவிற்குச் செல்லும் போதும் றுகூவிலிருந்து எழும்போதும் தனது கையை உயர்த்தினார்கள்”. உமர் (றழி) அறிவிக்கின்றார்கள் “நபி (ஸல்) அவர்கள் தொழுகையைத் துவக்கும்போது தமது இரு கைகளையும் தமது இரு தோல் புயங்கள் வரை உயர்த்தக்கூடியவர்களாக இருந்தார்கள்.” நபிகளாரின் மரணத்தின் பின்னர் அருமை ஸஹாபாக்கள் ஆவலுடனும், மனப்பூர்வமாகவும் இந்த சுன்னாவை நடைமுறைப்படுத்தினார்கள். அப்துல்லாஹ் இப்னு உமர் (றழி) அவர்கள் “தங்களது தொழுகையில் கைகளை உயர்த்தாதவர்களுக்கு சிறு சிறு கூலாங்கற்களால் எறிவார்கள்.”

இமாம் அல் மாவர்ஸி (றஹ்) கூறுகின்றார். "அனைத்து நாடுகளிலும் காணப்படும் அனைத்து உலமாக்களும் தொழுகையில் கையை உயர்த்தும் சுன்னாவை ஏகமனதாக எவ்வித மறுப்புமின்றி ஏற்று உடன்பட்டிருக்கிறார்கள்."

இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கள் கூறுகிறார்கள். "ருகூஉக்குச் செல்லும் போதும், நிலைக்கு வரும்போதும் நபிகளார் கையை உயர்த்தினார்கள் என்ற விடயத்தை அறிந்த அனைவரும் அந்த சுன்னாவை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்."

அப்துல் மாலிக் பின் சுலைமான் (றஹ்) கூறுகிறார். நான் ஸயீத் பின் ஜாபிர் (றழி) அவர்களிடம் தொழுகையில் கையை உயர்த்துவதன் சட்டம் பற்றி வினவினேன். "அது உனது தொழுகையை அழகூட்டக் கூடிய காரியமாகும் (சுன்னா) என பதிலளித்தார்கள்."

அல் காஸ்மீரி கூறுகிறார். "ஒருவர் தொழுகையில் தனது கையை உயர்த்துவது முதவாதிரைச் சார்ந்த ஓர் செயலாகும். இதில் எந்த ஒரு பகுதியும் இரத்து செய்யக் கூடியதாக இல்லை. மேலும் எந்த வித வாதப்பிரதிவாதங்களோ, கருத்து வேறுபாடுகளோ இன்றி முதவாதிர் தரத்தையுடையது." எனவே மேற்படி ஆதாரங்களை வைத்து நோக்கும் போது இந்த சுன்னாவை ஏற்று பின்பற்றுவது அவசியமானதாகும்.

## நிலையில் நிற்றல்.

ஒருவர் தொழுகைக்காக வந்து விட்டால் தனது உடலை நேராக வைத்து கிப்லாவை முன்னோக்கி தனது பார்வையை தாழ்த்திய நிலையில் கம்பீரமாக நிற்க வேண்டும். இஹ்ராம் தக்பீர் சொல்லியதும் கையை நெஞ்சின் மேலோ அல்லது தொப்புலுக்குக் கீழாகவோ வைக்காது நெஞ்சுக் குழியில் வைக்கவேண்டும். ஸஃல் பின் ஸஃத் (றழி) அறிவிக்கின்றார்கள் "அன்னலாரின் காலத்திலே மக்கள் தமது தொழுகைகளில் வலது கையை இடக்கை மீது வைக்குமாறு கட்டளையிடப்பட்டார்கள்"

இப்னு அப்பாஸ் (றழி) கூறுகின்றார்கள் அன்னல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "நபிமார்களாகிய நாம் நோன்புக்காக ஸஹர் செய்வதை பிந்தியும் நோன்பு திறப்பதை அவசரப்படுத்துமாறும் வலக் கையை இடக்கை மீது வைக்குமாறும் ஏவப்பட்டுள்ளோம்." மேலும் வாயில் பின் ஹுஜ்ர் (றழி) அறிவிக்கின்றார்கள் "நபி (ஸல்) அவர்கள் தமது வலக்கையை இடது முன் கை,

இடது மணிக்கட்டு, இடது குடங்கை ஆகியவற்றின்மீது வைத்தார்கள்." மேலும் "நபி (ஸல்) அவர்கள் தொழுகையில் நின்றபோது தங்களது வலக்கையால் இடக் கையைப் பிடித்திருந்ததை நான் பார்த்தேன்"

மேற்கூறப்பட்ட ஹதீஸ்களின் மூலம் தொழுகையில் தமது வலக்கையை இடக்கை மீது வைத்து நெஞ்சுக் குழியில் வைப்பது நபிவழியாகும் என்பதுதெளிவாகின்றது.

இப்னு அப்தில்பர் கூறுகின்றார் இது அன்னலாரின் வழிகாட்டலின் படி அணைத்து உலமாக்களினதும் ஏகோபித்த முடிவாகும் என்பதுடன் அனைத்து ஸஹாபாக்களாலும் தாபியீன்களாலும் நடைமுறைப்படுத்தப்பட்டதுமாகும்.

## துஆஉல் இஸ்திப்தாஹ் (வஜ்ஜஹ்து) மற்றும் இஸ்திஆதா (அஊதுபில்லாஹி மினஷ் ஷைதானிர்ரஜீம்) ஓதுதல்.

தொழுகைக்காக தக்பீர் சொல்லியதும் சூறதுல் பாதிஹா ஓதுவதற்கு முன்னர் துஆஉல் இஸ்திப்தாஹ் (வஜ்ஜஹ்து) ஓதுவது சுன்னாவாகும். வுஜ்ஜஹ்து தவிர வேறு துஆக்களையும் நபி (ஸல்) அவர்கள் ஓதிவந்துள்ளார்கள். அபூ ஹுரைரா (ரழி) அறிவிக்கின்றார்கள் நபி (ஸல்) அவர்கள் தொழுகைக்காக தக்பீர் கூறினால் அல் குர்ஆன் வசனங்களை ஓதுவதற்கு முன்பு சிறிது நேரம் மௌனமாக இருப்பார்கள் "இறைத் தூதரே என் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பனமாகட்டும் தக்பீருக்கும் கிராஅத்துக்கும் இடையே தாங்கள் என்ன ஓதுகின்றீர்கள் எனக் கேட்டேன். அதற்கு "அல்லாஹும்ம பாஇத் பைனீ வபைன கதாயாய கமா பாஅத்த பைனல் மஷ்ரிக் வல் ம.ஃரிப். அல்லாஹும் நக்கினீ மினல் கதாயாய கமா யுனக்கத் தௌபல் அப்யலு மினத் தனஸ். அல்லாஹும்ம.ஃஸில் கதாயாய பில்மாஇ வத் தல்ஜி வல்பர்தி" என்று ஓதுவேன் என பதிலலித்தார்கள்.

மேலும் இஸ்திஆதா (அஊதுபில்லாஹி மினஷ் ஷைதானிர்ரஜீம்) என்று ஒவ்வொரு ரக்அத்திலும் சூறா பாத்திஹா ஓதுவதற்கு முன்னர் ஓத வேண்டியது அவசியமாகும். ஏனெனில் இது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது "நீங்கள் அல்குர்ஆனை ஓதும்போது ஷைத்தானிடமிருந்து பாதுகாவல் தேடிக் கொள்ளுங்கள்." இதுவே இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் கருத்தும், இமாம் இப்னு ஹஸ்ம் (ரஹ்) அவர்களினதும் முதன்மைப்படுத்தப்பட்ட கருத்துமாகும

## ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் சூறா பாத்திஹாவை ஓதுதல்.

சூறா பாத்திஹாவை ஒவ்வொரு ரக்அத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட தடைவைகள் மீட்டி மீட்டி ஓதுதல் நபிகளாரின் வழிகாட்டலில் காணப்படாதது என்ற வகையில்

அது ஓர் வெறுக்கத்தக்க விடயமாகும். இதுவே நான்கு இமாம்கள் உட்பட அனைவரினதும் அபிப்பிராயமுமாகும். சில இமாம்கள் ஒரே ரக்அத்தில் சூறா பாத்திஹாவை ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் ஓதினால் தொழுகை நிராகரிக்கப்பட்டதாக ஆகும் எனக் கூறுகின்றார்கள். ஆனால் இக்கருத்திற்கு உறுதிப்படுத்தப்பட்ட எவ்வித ஆதாரங்களும் கிடையாது. எனினும் யாராயினும் ஒருவர் மறதியாகவோ அல்லது வேண்டுமென்றோ அவ்வாறு செய்தால் அவர் ஸஜதா ஸஹ்வு செய்வது அவசியமாகும் என்பது இமாம் ஷாபிஈ மற்றும் ஹனபி மத்ஹபினரதும் கருத்தாகும். மேலும் ஹனபி மத்ஹபினர் “ஒருவர் வேண்டுமென்று செய்திருந்தால் மீண்டும் அவர் அத்தொழுகையை மீட்டித் தொழ வேண்டும்” எனக் கூறுகின்றனர். மாலிகீ மத்ஹபினர் “ஒருவர் அவ்வாறு வேண்டுமென்று செய்திருந்தால் அவர் ஸஜதா ஸஹ்வு செய்வது அவசியமாகும்.”

## தொழுகையின்போது ஸஜதாவின் இடத்தை பார்க்காது அங்குமிங்குமாகப் பார்த்தல்.

ஒருவர் தொழுகையின் போது வாணத்தை நோக்கியோ வல இடப் புறமாகவோ அங்குமிங்குமாக பார்வையை செலுத்துவது தொழுகையை விட்டும் பராக்காக்குவதுடன் தொழகையில் மறதியை உண்டுபன்னவும் காரணமாக அமைந் விடுகின்றது.அன்னல் நபி (ஸல்) அவர்கள் தொழுகின்ற ஒருவர் அனைத்து நிலைகளிலும் தனது பார்வையை ஸஜதாவுடைய இடத்தை நோக்கி இருக்க வேண்டும் என வழி காட்டினார்கள். எனினும் அத்தஹிய்யாத்துடைய நிலையில் அவர் தனது சுட்டு விரலை நோக்க வேண்டும். “அன்னலார் (ஸல்) அவர்கள் ஒருபோதும் தனது சுட்டு விரலை விட்டும் பார்வையைத் திருப்பியதே இல்லை”. மேலும் தொழுகையில் அங்குமிங்குமாகப் பார்ப்போரை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு எச்சரித்தார்கள். “தொழுகையின்போது தங்கள் பார்வையை வாணத்தின் பக்கம் உயர்த்துவோருக்கு என்ன நேர்ந்து விட்டது? இதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் அவர்களது பார்வைகள் பறிக்கப்பட்டு விடும்” மேலும் ‘‘யார் தொழுகையில் தனது பார்வையை வாணத்தை நோக்கி வைத்துக் கொள்கின்றானோ அவனது பார்வையை திருப்பிக் கொடுக்காமல் இருப்பானாக’’ மேலும் அன்னை ஆயிஷா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்க் “தொழுகையில் திரும்பிப் பார்ப்பது பற்றி நபி (ஸல்) அவர்களிடம் நான் கேட்டேன் “ஒரு அடியானுடைய தொழுகையை ஷைத்தான் அதன் மூலம் பறித்துச் செல்கின்றான்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்”.

## தொழுயையில் கண்களை மூடுதல்

முஸ்லிம்களில் சிலர் தொழுகையில் தமது எண்ணங்களை ஒருநிலைப்படுததும் நோக்குடன் கண்களை மூடிய நிலையில் தொழுகையை நிறைவேற்றுகின்றனர்.இது முற்றிலும் நபி வழிக்குப் புறம்பான செயற்பாடாகும். இமாம் இப்னுல் கையும் அவர்கள் கூறும் போது தொழுகையில் கண்களை மூடுவது நபிகளாரின் வழிமுறையல்ல. "அன்னல் நபி (ஸல்) அவர்கள் தஷஹ்ஹுதின்போது தமது சுட்டு விரலை நோக்கிக் கொண்டிருந்தார்கள்" என்ற ஹதீஸ் இதற்கு சிறந்த சான்றாகும்.

## தொழுகையில் அளவு கடந்து அசைதல்

தொழுகையின்போது தேவையின்றி அளவுக்கதிகமாக அசைதல் எமது தொழுகையைப் பாலாக்கி விடும். உதாரணமாக விரல்களை ஒன்றோடொன்று கோதிக் கொள்ளல், நகங்களைப் பிய்த்து விளையாடுதல், தேவையின்றி நகர்தல், தொப்பி தலைப்பாகை போன்ற ஆடைகளை சரி செய்தல் நேரத்தைப் பார்த்தல் போன்றவாறான செயற்பாடுகளைக் கூறலாம். உண்மையில் ஒவ்வொரு மனிதனும் தான் தொழுகையில் செலுத்துகின்ற கவணத்திற்கு ஏற்பவே முழுமையான நண்மைகள் வழங்கப்படுகின்றான். சில அறிஞர்கள் தொழுகைளில் மேலதிகமாக மூன்று தடவைகள் மாத்திரமேதான் அசைய முடியும் என்கின்றனர்.ஆனால் இவர்களின் இக்கருத்திற்கு சுன்னாவில் எவ்வித தெளிவான ஆதாரமும் கிடையாது. இவை வெறும் கற்பணையின் வழியாகத் தோன்றிய கருத்துகளே.பொதுவாக தெழுகையில் தாடியைப் பிடித்து விளையாடுதல், அளவுக்கதிகமாக சொறிதல் போன்ற செயற்பாடுகள் வெறுக்கத்தக்கதுடன் அத்தொழுகையில் நண்மையை இல்லாமலாக்கக் கூடியதுமாகும்.

ஆனாலும் சாதாரணமான சிறு சிறு அசைவுகள் தொழுகையை பாழாக்க மாட்டாது எனினும் தனது தொழுகையில் பூரன நண்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் தனது தொழுகைளில் அமைதியைப் பேணிக்கொள்ள வேண்டும். இதனை அன்னல் நபி (ஸல்) அவர்களின் வாக்கு உண்மைப்படுத்துகின்றது. ‘‘ஒரு முறை அன்னல் நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதர் எவ்வித காரனமுமின்றி தனது தொழுகையில் அங்குமிங்கும் அசைந்து கொண்டிருப்பதைக் கண்டு கேட்டார்கள் ‘‘குதிரைகள் தமது வால்களை ஓய்வின்றி அங்குமிங்கும் அசைத்துக் கொண்டிருப்பது போல் நீங்களும் ஏன் உங்கள் கைகளை அசைத்துக் கொண்டிருக்கின்றீர்கள் உங்கள் தொழுகையில் அமைதியைக் கடைப் பிடியுங்கள்’’ என்றார்கள்.

## இமாமைத் தொடர்ந்து அல் குர்ஆனை ஏந்தி நிற்றல்

தொழுகையின்போது இமாம் ஓதுகின்ற அல் குர்ஆன் வசனங்களை சரிபார்ப்பதற்காக இமாமைத் தொடர்ந்து அல்குர்ஆனை ஏந்தி நிற்பது தவறானதும் நபி வழிக்குப் புறம்பானதுமாகும். ஏனெனில் தொழுகைக்காக தக்பீர் சொன்னால் வலக்கையை இடக் கை மீது வைத்துக் கொள்ளவேண்டும் என்ற சுன்னா இதன் மூலம் புறக்கனிக்கப்படுகின்றது.

## தக்பீர் சொல்லல.

தொழுகையில் ஒவ்வொரு நிலைக்கு மாறும்போதும் தக்பீர் சொல்வது நபி வழியாகும்.அபூ ஹுரைரா ரழி அறிவிக்கின்றார்கள் நபி (ஸல்) அவர்கள் தக்பீரைக் கொண்டு தனது தொழுகையை ஆரம்பிப்பார்கள். மீண்டும் அல்குர்ஆனை ஓதிய பின்னர் ருகூவிற்குச் செல்லும்போது தக்பீர் சொல்வார்கள், ருகூவிலிருந்து எழும்போது "ரப்பனா லகல் ஹம்து" எனக் கூறுவார்கள், மீண்டும் சுஜூதுக்குச் செல்லும்போதும் சுஜூதிலிருந்து எழும்போதும் தக்பீர் சொல்வார்கள்.இவ்வாறு அனைத்து தொழுகைகளிலும் தக்பீர் சொல்வார்கள்.இவ்வாறு தக்பீர் சொல்வதன் அடிப்படைக் காரணம் இறைவனுடனான தனது சிந்தனையை வலுப்படுத்திக் கொள்வதாகும்.அதாவது அல்லாஹ் மிகப் பெரியவன் , அவனது சக்தி வல்லமை அனைத்தும் அவனது அனைத்துப் படைப்பினங்களையும் விட மேன்மையானது என உறுதிப்படுத்துகின்றான். இதனால் அவன் தொழுகையோடு ஒன்றித்து விடுவதுடன் இறை ஆதரவை எதிர்பார்த்து தன்னையும் இறைவனோடு இனைத்து விட வாய்ப்பேற்படுகின்றது.

## காக்கை கொத்துவது போல் அவசரமாகத் தொழல.

தொழுகை என்பது ஓர் அடியான் அல்லாஹ்வுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதற்கானஓர் சிறந்த சந்தர்ப்பமாகும்.எனவே இந் நிலையில் ஓர் முஸ்லிம் அமைதியாகவும் நிதானமாகவும் அவசரமின்றியும் செயற்படுவது அவசியமாகும்.ஆனால் முஸ்லிம்களில் சிலர் தாம் தொழுகைக்காக எனத் தயாராகச் சென்று தொழுகையை மிக அவசர அவசரமாக நிறைவேற்றுகின்றனர்.அதில் ஓத வேண்டிய திக்ர்கள், மற்றும் ஏனைய அவ்ராதுகளை பூரனமாக ஓதுவதை விட்டும் கவனயீனமாகவும் அலட்சியமாகவும் இருந்து விடுகின்றனர்.இதனால் தொழுகையின் மூலம் அடைய வேண்டிய பூரணமான நன்மைகளையும் இழந்து விடுகின்றான். ஆனால் இவ்வாறு காக்கை கொத்துவது போல் அவசர அவசரமாக தொழுகின்றவர்களை நபி (ஸல்) அவர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள். அப்துர் ரஹ்மான் பின் ஷிப்ல் கூறுகின்றார் "நபி (ஸல்) அவர்கள் காக்கை கொத்துவது போல் அவசரமாகத்

தொழுவதையும், சுஜூதில் சிங்கத்தைப் போல் கைகளை அகட்டி வைப்பதையும், பள்ளியில் ஓரிடத்தை தனக்காக என வரையறுத்து வைப்பதையும் தடுத்தார்கள்."

## அஸ்ரு தொழுகையை பிந்தித் தொழுதல்.

"தொழுகை நேரம் குறிக்கப்பட்ட கடமையாகும்." அதனை உரிய நேரத்தில் நிறைவேற்றுவது மிக மிக அவசியமாகும்.நியாயமான காரணங்களின்றி பராமுகமான நிலையில் தொழுகையை பிற்போடுவது மிகத் தவறாகும்.குறிப்பாக அஸர் தொழுகையை நேரம் பிந்தி நிறைவேற்றுபவன் நயவஞ்சகன் என்பதை பின்வருமாறு நபி (ஸல்) அவர்கள் கூறிக்காட்டினார்கள். (தொடர் ஹதீதில்) "…….பின்னர் அஸர் தொழுகையை தொழுமாறு கட்டளையிட்டார்.அதனை நாம் தொழுதோம். பின்னர் அன்னல் நபி (ஸல்) அவர்கள் கூறியதாகக் கூறினார் அஸர் தொழுகையை அதன் உரிய நேரம் பிந்திய நிலையில் தொழுவது நயவஞ்சகர்களுடைய செயலாகும்.அவர்கள் சூரியன் ஷைத்தானின் இரு கொம்புகளிடையேமறையும் வரை எதிர்பார்த்திருந்து மறையும் தறுவாயில் பறவைகள் தாணியத்தைக் கொத்துவது போல் வேகமாக அஸரைத் தொழுவார்கள்.அவர்கள் தம் தொழுகையில் மிக அற்பமான அளவே அல்லாஹ்வைப் புகழ்வார்கள்."

## றுகூஉடைய அமைப்பு

அல்லாஹ்வுக்கு மிக நெருக்கமான சந்தர்ப்பம் அவனுக்கு சிரம் சாய்க்கும் சந்தர்ப்பமாகும்.அவ்வாறான நிலைகளில் ஒன்றுதான் றுகூஉடைய நிலையாகும்.எனவே இந் நிலையில் நிற்பதில் நபிகளார் காட்டிய அமைப்பை விட்டும் பலர் பொடுபோக்காக இருந்து விடுகின்றனர்.ஒருவர் அந்நிலைகளைச் சரியாகப் பேனுகின்றபோதுதான் தொழுகை பூரணத்துவம் பெற்றதாக அமையும். "………அபூ ஹுமைத் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள் நபி (ஸல்) அவர்களின் தொழுகையைப் பற்றி உங்களைவிட நான் நன்கு அறிந்தவன். நபி (ஸல்) அவர்கள் றுகூஉ செய்யும்போது தமது இரு கைகளாலும் இரண்டு முட்டுக் கால்களையும் பிடித்துக்கொள்வது போல் வைத்தார்கள்.மேலும் தமது இரு கைகளையும் வலைவின்றி நேராக ஆக்கினார்கள்.மேலும் தமது இரு கைகளையும் விலாப் புறத்தை விட்டும் விலக்கி வைத்தார்கள். என்று குறிப்பிட்டார்."

மேலும் இப்னு அப்பாஸ் (றழி) அறிவிக்கின்றார்கள் ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து தொழுகையைப் பற்றி வினவினார் அதற்கு நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் "நீ றுகூஉ செய்யும்போது உனது கரங்களால் முழங்காலைப் பற்றிப் பிடித்து உரிய முறையில் றுகூஉவைச் செய்து கொள்,

சுஜூது செய்யும்போது நெற்றியை உறுதியாகப் பதித்துக்கொள்.'' எனக் கூறினார்கள். பொதுவாக நபி (ஸல்) அவர்களுடைய ஹதீதை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் உதாரணமாக றுகூஉடைய நிலையில் தண்ணீர்ப் பாத்திரத்தை முதுகில் வைத்தால் அது தளர்வுறாது இருக்கக் கூடிய அமைப்பில் நிற்றல் வேண்டும்.

மேலும் றுகூஉவின்போது தலையைத் தொங்கவிடாது முதுகின் மட்டத்திற்கு தலையைத் உயர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.அன்னை ஆயிஷா (றழி) அவர்கள் கூறுகின்றார்கள் "நபி (ஸல்) அவர்கள் றுகூஉ செய்யும்போது தனது தலையை உயர்த்தவும் மாட்டார்கள் ஒரேயடியாகத் தாழ்த்தவும் மாட்டார்கள்.இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் வைப்பார்கள்." மேலும் அனைத்து உறுப்புகளும் அதனது இடத்திற்கு இருக்கும் வகையில் தனது உடலமைப்பை வைத்துக் கொள்ள வேண்டும்.

## சுஜூது செய்தலும் அதன் முறையும்.

பொதுவாக முஸ்லிம்கள் தமது கவணயீனத்தின் காரணமாக தமது தொழுகைகளில் அதிகமான தவறுகளை விடுகின்றனர். "சிலர் நரிகளைப்போல் இங்குமங்குமாகப் பார்க்கின்றனர், இன்னும் சிலர் சுஜூதின்போது சிங்கத்தைப் போன்று தமது கைகளை விரித்து வைக்கின்றனர், இன்னும் சிலர் இருப்புக்களில் அமரும்போது நாய் அமர்வதைப்போல் கால்களை அகல வைத்து அமர்கின்றனர், இன்னும் சிலர் காக்கை கொத்தவது போல் மிக மிக அவசரமாகத் தொழுது முடித்து விடுகின்றனர். மேலும் சலாம் கொடுக்கும் போது வலம் இடப் புறமாக கைகளை அசைக்கின்றனர்,இன்னும் சிலர் பள்ளிவாயல்களில் தமக்காக ஓரிடத்தை குறித்து வைத்து விடுகின்றனர்.இவை அனைத்தும் தொழுகையைப் பாலாக்கக்கூடிய செயற்பாடுகளாகும்."

இமாம் இப்னுல் கையும் (றஹ்) அவர்கள் கூறுகையில் ''முஸ்லிம்கள் காபிர்களைப்போல், மிருகங்களைப்போல், பேய் பிசாசுகளைப்போல் அல்லது ஆண்கள் பெண்களைப்போல் பெண்கள் ஆண்களைப்போல் செயற்படுவதை இஸ்லாம் தடை செய்கின்றது''. எனவே விஷேடமாக தொழுகையில் இவ்வாறான செயற்பாடுகள் முற்றாகத் தடை செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஒரு அடியான் அல்லாஹ்வுடன் நெருங்குகின்ற நிலைகளில் மிக நெருக்கமான நிலை சுஜூதாகும். எனவே அந்நெருக்கம் கிடைக்கப்பெற வேண்டுமாயின் அதன் உரிய அமைப்புமுறைகள் சரியாகப் பேணப்பட வேண்டும்.

அப்பாஸ் பின் அப்தில் முத்தலிப் (றழி) அறிவிக்கின்றார்கள் அன்னல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "நான் ஏழு உறுப்புகள் (இரு கால் பாதங்களின் நுணிவிரல்கள்,நெற்றி. மூக்கு, இரண்டு உள்ளங்கைகள், இருமுழங் கால்கள்) மீது சுஜூது செய்யுமாறு ஏவப்பட்டுள்ளேன்."

மேற்படி ஹதீதின்படி ஒருவர் சுஜூது செய்யும்போது அவரது ஏழு உறுப்புகளும் தரையில் படவேண்டியது அவசியமாகும் என்பது தெளிவாகின்றது. இமாம் ஷவ்கானி (றஹ்) கூறுகின்றார் "ஏழு உறுப்புகளும் தரையில் படவேண்டியது அவசியம். என்பதில் உலமாக்கள் கருத்து வேறுபாடு கொள்கின்றனர்". இமாம் அஷ்ஷாபிஈ (றஹ்) அவர்களின் கருத்துப்படி "ஏழு உறுப்புகளின் மீது சுஜூது செய்வது அவசியமாகும்". இமாம் அபூ ஹனீபா (றஹ்) மற்றும் ஏனைய சில புகஹாக்கள் "சுஜூதின்போது நெற்றி படுவது அவசியமாகும் எனக்குறிப்பிடுகின்றனர்". எது எவ்வாறு இருப்பினும் முன்னைய ஹதீதை ஆதாரமாகக் கொண்டு நோக்குகையில் "மூக்கும் நெற்றியும் உட்பட ஏழு உறுப்புகளும் ஒழுங்கான முறையில் படவில்லையாயின் தொழுகை பூரணத்துவம் பெற மாட்டாது".

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் "தொழுகையில் சுஜூது செய்யும்போது உங்களை நீங்கள் நேராக நேர்த்தியாக வைத்துக் கொள்ளுங்கள். நாய்கள் தரையில் கிடப்பதைப் போல் முழங்கையை விரித்து வைக்காதீர்கள்."

பொதுவாக நபிகளாரின் ஹதீதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது பின்வரும் ஒழுங்கு முறையில் சுஜூதினுடைய அமைப்பு அமைய வேண்டும்.

- நெற்றி, மூக்கு,இரு உள்ளங்கைகள், இரு முழங் கால்கள்,இரு கால் பாதங்களின் நுணி விரல்கள்,ஆகியவை தரையில் படுமாறு வைக்க வேண்டும்.
- கால் விரல்களை வளைத்து கிப்லாத் திசையை நோக்கும் விதமாக வைக்க வேண்டும்
- இரண்டு கால்களையும் சேர்த்து வைக்க வேண்டும்.
- ஆடையோ முடியோ நெற்றி தரையில் படுவதை தடுக்கக் கூடாது.
- ஸஜதாவில் இரு கைகளையும் காதுகளுக்கு நேராகவோ, அல்லது தோல் புயங்களுக்கு நேராகவோ வைக்க வேண்டும்.
- இரு கைகளையும் தரையில் படாமலும் , முழங்கை தரையில் படாமலும் உயர்த்தி வைக்க வேண்டும்.
- தொடையும் வயிறும் சேராமல் இருக்குமாறு வைக்க வேண்டும்.

இதன்படி ஒருவர் சுஜுது செய்யும்போது நெற்றியோ மூக்கோ அல்லது ஏனைய அவசியமான உறுப்புகள் எதுவும் படவில்லையாயின் தொழுகை பூரணத்துவம் பெறமாட்டாது. ஏனெனில் இதனையே நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களுக்கு வழியுறுத்தினார்கள்.

## நோய் காரணமாக சுஜுதுடைய இடத்தில் ஏதாவது ஒரு பொருளை வைத்தல்.

அப்துல்லா பின் உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் , நபி (ஸல்) அவர்கள் ஒரு முறை ஒருவரை நோய் விசாரிக்கச் சென்றார்கள் நானும் அவர்களுடன் சென்றிருந்தேன். அவ்வேளை அம்மனிதர் தொழுத நிலையில் இருந்தார். அவர் தனது நெற்றியை ஓர் குச்சியின் மீது வைத்து சுஜுது செய்து கொண்டிருந்தார். நபி (ஸல்) அவர்கள் அம்மனிதரைப் பார்த்து ‘‘குச்சியை அகற்றி விட்டு அதற்கு பதிலாக ஓர் தலையணையை வைப்பீராக எனக் கூறி விட்டு பின்னர் கூறினார்கள் மக்கள் தாம் சுஜுது செய்யும்போது வெப்பத்திலிருந்து தங்களது கைகளை பாதுகாப்பதற்கு தங்கள் ஆடையின் ஒரு பகுதியால் அவைகளை மறைத்துக் கொள்வதற்கு விட்டு விடுங்கள்’’ எனக் கூறினார்கள்.

மேற்படி ஹதீதுக்கு விளக்கமளிக்குமுகமாக இமாம் அந் நவவி (ரஹ்) அவர்கள் ‘‘ஓர் முஸ்லிம் சுஜுது செய்யும்போது தனது முழங்கையை மறைக்காது உயர்த்தி தனது உள்ளங்கை கட்டாயம் தரையில் படும் வண்ணம் வைத்துக் கொள்ள வேண்டும்’’ எனக் கூறுகின்றார்.

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் “ஒருவர் சுஜுது செய்வதற்காக நெற்றியை நோக்கி தலையணையையோ அல்லது வேறு பொருட்களையோ உயர்த்துவது சுன்னாவுக்கு முரனானதாகும். ஏனெனில் ஸஜதா என்பது தரையிலேயே செய்யப்பட வேண்டிய ஒன்று. எனினும் இயலாத நியைில் ஒருவர் தலையணை போன்றவற்றின்மீது சுஜுது செய்து கொண்டால் போதுமானது எனக் குறிப்பிடுகின்றார்”.

எனினும் இமாம் புஹாரி அவர்கள் தனது ஸஹீஹுல் புஹாரியில் ‘‘உனக்கு தரையின் மீது சுஜுது செய்ய முடியுமானால் அவ்வாறு செய்து கொள். இல்லையெனில் றுகூஉடைய நிலையை விட சற்று கூடுதலாகக் குனிந்து கொள்வதன் மூலம் சுஜுதை செய்து கொள் எனக் கூறுகின்றார்’’. ஆனால் ஓர்

நோயாளி தான் சுஜூது செய்யும் இடத்தில் அல்லது வேறு யாதாயினும் பொருளையோ வைத்து சுஜூது செய்வது வெறுக்கத்தக்கதாகும் என்பது இமாம்களின் ஏகோபித்த முடிவாகும். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் ''ஓர் நோயாளி தான் சுஜூது செய்ய முடியாது என்பதற்காக வேண்டி அவ்விடத்தில் தலையணையையோ அல்லது வேறு பொருட்களையோ நெற்றியில் படுமாறு உயர்த்தவும் முடியாது''எனவும் குறிப்பிடுகின்றார்.

அவ்வாறே ஸலபுகளில் அதிகமானோர் நெற்றியை நோக்கி சுஜூதுக்காக தலையணையையோ அல்லது வேறு பொருட்களையோ உயர்த்துவதை வெறுக்கும் அதே வேலை அது நபி (ஸல்) அவர்களினால் வழிகாட்டப்படாததும் அக்காலத்தில் செய்யப்படாத செயல் எனவும் அது ஓர் **பித்ஆ** எனவும் கூறுகின்றார்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் பின்வரும் அதர் இதற்கான சான்றாக உள்ளது. "உமர் இப்னு முஹம்மத் கூறுகின்றார் நாங்கள் ஹப்ஸ் பின் ஆஸிம் (றழி) நோயாளியாக இருந்த சந்தர்ப்பத்தில் அவரைச் சந்திக்கச் சென்றோம்.அவர் அப்துல்லா பின் உமர் (றழி) நோய் விசாரிக்க வந்த சமயம் தான் சுஜூது செய்வதற்காகத் தயாரித்த தலையனை முன்னால் இருப்பதைக் கண்டு எனது மருமகனே ஒருபோதும் இதன் மீது சுஜூது செய்ய வேண்டாம். முடியுமாயின் தரையின் மீது சுஜூது செய்து கொள் இல்லையெனில் தலையை சற்று குனிந்து கொள் எனக் கூறியதாகக் கூறினார்."

## ஸஜதா ஸஹ்வு

சிலர் ஸஜதா ஸஹ்வுவின்போது (மறதிக்கான ஸஜதா) ''சுப்ஹானல்லதீ மல்லா யனாமு வலா யஸ்ஹு'' (தூக்கமோ மறதியோ அற்ற அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்) எனக் கூறுகின்றனர்.இது சுன்னாவின் ஒளியில் உறுதிப்படுத்தப்படாத ஓர் பிழையான வழிமுறையாகும்.இமாம் அல் குஷைரி அவர்கள் இது பற்றிக் கூறுகையில் ''நபி (ஸல்) அவர்கள் மேற்படி திக்ரை சஜதாவின்போது கூறியதற்கு எவ்வித ஆதாரங்களும் கிடையாது.மாற்றமாக வழக்கமாக சஜதாவின்போது ஓதிய திக்ரையே ஓதியுள்ளார்கள். மேற்படி திக்ர் நபி(ஸல்) அவர்களின் சுன்னாவோ அல்லது சஹாபாக்களது வழிமுறைகளோ அல்ல மாறாக அது ஓர் சூபித்துவ சிந்தனையின் பின்னனியாகத் தோற்றம் பெற்ற ஒன்றாகும்.ஆகவே அது முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஏனெனில் மார்க்கம் என்பது உறுதிப்படுத்தப்பட்ட வழிமுறைகளிலிருந்து பெறப்படவேண்டும்.’’

## ம.ஃ.மூம்களின் ஒழுங்கற்ற வுழூ இமாமின் செயற்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தும.

“ம.ஃ.மூம்களின் ஒழுங்கற்ற,சீரற்ற வுழூவினால் இமாமின் செயற்பாட்டில் பாதிப்பு ஏற்படும்” என்ற இக்கருத்து மக்களின் தப்பபிப்பிராயத்தின் விளைவாகத் தோன்றியதொன்றாகும்.இதற்கு பின்வரும் ஓர் பலவீனமான ஹதீதை ஆதாரமாகக் கொள்கின்றனர்.அதாவது ஷபீப் பின் அபீ ரவ்ஹ் (றழி)அறிவிக்கின்றார் ‘‘ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் சுபஹ் தொழுகையில் சூறா அர் ரூமை ஓதிக் கொண்டிருக்கையில் அதில் பல தவறுகளை விட்டார்கள்.தொழுகையை முடித்ததும் ஸஹாபாக்களை நோக்கி ‘‘உரிய முறையில் சுத்தம் செய்யாது எங்களோடு தொழுகையில் இனைந்து கொண்டவர்கள் யார்? அவர்களே எங்கள் தொழுகையில் தவறுகள் ஏற்படக் காரணமானவர்களாவர்’’ எனக் கூறினார்கள்.

## அத் தஷஹ்ஹுத் (அத்தஹிய்யாத்து ஓதுதல்)

தொழுகின்ற ஒவ்வொருவரும் முதல் இருப்பிலும் (நான்கு ரக்அத்தாயின்), இறுதி இருப்பிலும் “அத்தஹிய்யாத்து” என்று துவங்கும் துஆவை ஓதுவது அவசியமாகும்.

இமாம் புஹாரி அவர்கள் தனது ஸஹீஹுல் புஹாரியில் பின்வரும் ஹதீஸைக் கொண்டு வருகிறார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் “நீங்கள் தொழும்போது அத்தஹிய்யாத்தில் (முதல் இறுதி இருப்பகள்) பின்வருமாறு ஓதிக் கொள்ளுங்கள். ‘‘அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தைய்யிபாத்து லில்லாஹி அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபீய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாதுகு அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன். ஆஷ்ஹது அல்லாயிலாஹ இல்ல்லாஹுவஅஷ்ஹது அன்ன முஹம்மதன் றஸுலுல்லாஹ்’’.

முஸ்லிம்களில் அதிகமானவர்கள் தங்களது அத்தஹிய்யாத்தில் நபிகளார் கூறிக்காட்டாத வார்த்தைகளைக் கூறுகின்றனர். உதாரணமாக “அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத அலா இப்றாஹீம வஅலா ஆலி இப்றாஹீம **வஸ்ஸாலிஹீன** இன்னக ஹமீதும் மஜீத்.” இங்கு **வஸ்ஸாலிஹீன** என்பது போன்ற புதிய வார்த்தைப் பிரயோகங்களைச் சேர்ப்பதோ அல்லது சிலதைக் குறைப்பதோ பாரிய குற்றமாகும். ஏனெனில்

மார்க்கத்தில் எவ்வித கூட்டலோ குறைத்தலோ காட்டமுடியாது. நபிகளார் எவ்வழி காண்பித்தார்களோ அவ்வழியே சுன்னாவாகும்.

அல் ஆலூஸி என்பவர் அல் திராஹ், வல் குர்ராஹ் என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "ராபிழாக்கள் முஹம்மத் என்ற சொல்லிற்கும் "ஆளி முஹம்மத்" என்ற வார்த்தைக்கும் இடையில் அலா என்ற சொல்லைக் கொண்டு பிரிக்கக் கூடாது எனக் கூறுகின்றனர். இதற்கு ஒரு போலியான ஹதீஸை ஆதாரமாகக் கொள்கின்றனர். அதாவது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "யார் என்னையும் எனது குடும்பத்தையும் பிரித்துக் கூறுகின்றாரோ அவருக்கு எனது ஷபாஅத் கிடைக்கமாட்டாது". இந்த ஹதீஸ் போலியானது என்பதை ஷீஆக்களும் ஒத்துக் கொள்கின்றனர். எனவே அஹ்லுஸ் ஸுன்னாவைச் சேர்ந்தோர் மேற்படி ராபிழாக்களின் கருத்தை மறுத்துரைக்கின்றனர்.

அத்தஹிய்யாத்து ஓதிய பின்னர் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓத வேண்டியது அவசியமாகும்.

இமாம் அந்நவவி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள். இரண்டாவது அத்தஹிய்யாத்தில் "நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் சொல்லுதல் விடயத்தில் அறிஞர்கள் மத்தியில் கருத்து முரண்பாடு காணப்படுகின்றது" .இமாம் அபூஹனீபா, இமாம் மாலிக் மற்றும் உலமாக்களின் கருத்துப்படி அது "ஓர் சுன்னாவாகும். ஒருவர் இதனை ஓதவில்லையாயினும் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படும்."

இமாம் அஹ்மத் மற்றும் இமாம் ஷாபிஈ அவர்களின் கருத்துப்படி "அதனை ஓதுவது வாஜிப் அவசியமாகும். ஒருவர் ஓதாது விட்டுவிட்டால் தொழுகை செல்லுபடியற்றதாகிவிடும்." இக் கருத்து உமர் (ரழி) மற்றும் இப்னு உமர் (ரழி) போன்றோரின் கருத்தாகும்.

இரண்டாவது அத்தஹீய்யாத்தில்தான் நபிகளார் மீது ஸலவாத்து ஓத வேண்டும் என்பதல்ல. முதலாவது அத்தஹீய்யாத்திலும் ஓதவேண்டும். இமாம் ஷாபிஈ அவர்கள் தமது அல் உம்மு என்ற நூலில் "முதல் மற்றும் இரண்டாம் அத்தஹீய்யாத்தில் வார்த்தைப் பிரயோகங்கள் இரண்டும் ஒன்றே. எனவே இரண்டிலும் அத்தஹீய்யாத் ஓதி விட்டு நபிகளார் மீது ஸலவாத் சொல்லப்பட வேண்டும். என்று கூறுகின்றார்".

பொதுவாக பெரும்பான்மையான அறிஞர்களின் கருத்துப்படி அத்தஹிய்யாத்து வாஜிப் - அவசியமாகும். இதுவே ஹதீத் கலை வல்லுனர்களின் கருத்துமாகும். இமாம் அஷ்ஷௌகானி அவர்கள் "அத்தஹிய்யாத்து ஓத வேண்டும் என்ற

கட்டளை இரண்டாவதை மாத்திரம் குறிக்கவில்லை, மாறாக இரண்டு அத்தஹிய்யாத்களையுமே குறிக்கின்றது''. என்று கூறுகின்றார்.

எனவே அத்தஹிய்யாத்தில் "அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மத்" என்ற வார்த்தையோடு மட்டுப்படுத்துவது சுன்னாவல்ல. மாறாக நபிகளார் மீதான ஸலவாத்தையும் ஓதுவது அவசியமாகும்.

முஸ்லிம்களில் சிலர் விடுகின்ற மற்றுமொரு தவறு இரண்டு ரக்அத் தொழுகையில் அல்லது ஏனை தொழுகைகளில் இறுதி அத்தஹிய்யாத்தில் இருக்க வேண்டிய ''தவர்ருக்குகடைய'' (வலது காலின் கீழாக இடது காலை வைத்து வலது காலை நட்டி வைத்து தரையில் அமர்தல்) அமைப்பில் இருக்காதிருத்தல்.

''இபாதுல்லாஹிஸ் ஸாலிஹீன்'' அல்லாஹ்வின் சிறந்த அடியார்கள் என்போர் யார் அல்லாஹ்வுக்காக இடப்படுகின்ற கட்டளைகளை நடைமுறைப்படுத்துகின்றாரோ அவர்களேதான்.எனினும் இவ்விலக்கினை அடைந்து கொள்வதில் மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வுக்களைகாணப்படலாம்.

அல் கபாலி என்பவர் தனது ''பதாவா'' என்றநூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்."தொழுகையை அலட்சியம் செய்வது அனைத்து முஸ்லிம்களையும் தீங்குக்கு உட்படுத்தி விடும். ஏனெனில் ஒவ்வொரு தொழுகயிலும் ''அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன்'' என்ற துஆவை ஓதுவது அவசியமாகும். ஒருவன் தொழுகையை அலட்சியம் செய்யும் வேலையில் இந்த துஆவையும் அலட்சியம் செய்து விடுகின்றான் இதன் மூலம் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் கட்டுப்படுவதை விட்டும் அலட்சியமாக இருந்து விடுகின்றான்."

## தேவையின்றி பேசிக் கொண்டிருத்தல்.

பள்ளியில் இமாம் தொழுகைக்காக தக்பீர் சொன்ன பிறகும் பின்னால் நின்று பேசிக்கொண்டிருப்பது மக்கள் செய்யும் மிகப் பெரும் தவறும் பள்ளிவாயலின் கண்ணியத்தையும் கௌரவத்தையும் சீர் குலைக்கும் செயற்பாடுமாகும். இமாம் மாலிக்கிடம் இமாம் தக்பீர் சொன்ன பிறகும் பேசிக்கொண்டிருக்கும் மனிதரின் நிலை பற்றி கேட்கப்பட்டபோது ''அவர்கள் தமது பேச்சை நிறுத்த வேண்டியது அவசியமாகும்'' என பதிலளித்தார். இது பற்றி அன்னல் நபி (ஸல்) அவர்கள் கூறும்போது ''ஒருவன் இந் நிலயில் நல்ல வார்த்தைகள் பேசுவது கூட நெருப்பு விறகை எரிப்பது போல் இச் செயல் நன்மைகள் அனைத்தையும் நாசமாக்கி விடும்'' என்றார்கள்.

எனினும் அன்னல் நபி (ஸல்) அவர்களும் அருமைத் தோழர்களும் பள்ளிவாயலில் அமர்ந்துகொண்டு ஸஹாபாக்கள் தங்களது ஜாஹிலிய்யாக்கால செயற்பாடுகளைக் கூறி புன்னகைக்க அன்னல் நபி(ஸல்) அவர்களும் புன்னகைத்துள்ளார்கள். இது "பள்ளியில் பயனுள்ள பேச்சுக்களைப் பேச முடியும் புன்னகைக்க முடியும் என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்". ஆனாலும் அவை ஏனைய தொழுகையாளிகளுக்கு, இபாதாக்கள் செய்வோருக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது.

சிமாக் இப்னு ஹரிப் அறிவிக்கின்றார் நான் ஜாபிர் பின் சமுரா (றழி) அவர்களிடம் ''நீங்கள் அன்னல் நபி(ஸல்)அவர்களுடன் அடிக்கடி அமர்ந்து பேசியுள்ளீர்களா? எனக் கேட்டேன், அதற்கவர் ஆம் அன்னலார் (ஸல்) அவர்கள் சுபஹ் தொழுகை முடிந்ததும் அதே இடத்தில் சூரியன் உதயமாகும் வரை அமர்ந்திருப்பார்கள். நாங்களும் அவர்களோடு இருந்து ஜாஹிலிய்யாக் காலத்தில் செய்த செயற்பாடுகளைப் பற்றி பேசி சிரித்துக் கொண்டிருப்போம். நபி(ஸல்) அவர்களும் அதனைக் கேட்டுச் சிரிப்பார்கள்.''

எவ்வாறாயினும் இச் செயற்பாடுகள் பள்ளியில் தொழுதுகொண்டிருக்கும்,அல் குர்ஆன் ஓதிக்கொண்டிருக்கும், திக்ர்கள் செய்து கொண்டிருக்கும், மார்க்கத்தைக் கற்று கற்பித்துக்கொண்டிருப்போருக்கு எவ்விதத்திலும் தடையாகவோ இடையூறாகவோ அமையக் கூடாது. எனவேதான் உமர் (றழி) அவர்கள் மேற்படி நபிகளாரின் நடைமுறையை வைத்தக் கூறும்போது ''நீங்கள் பள்ளிவாயல்களை தொழுகைக்குரிய இடமாகவோ அல்குர்ஆனை ஓதுவதற்குரிய இடமாகவோ அன்றி ஆலோசனை மன்றங்களாக ஆக்கிக்கோள்ள வேண்டாம்''

அபூ ஸஈத் (றழி) அறிவிக்கின்றார்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''நீங்கள் அல்லாஹ்வை எவ்வாறு நினைவு கூற வேண்டுமோ அவ்வாறு நினைவு கூறுங்கள். மற்றவர்களுக்கு இடையூறு செய்யாதீர்கள். நீங்கள் அல் குர்ஆன் ஓதும்போது மற்றவர்களுக்கு இடையூறாக அமையும் வகையில் சத்தமாக ஓதாதீர்கள்''

இப்னு மஸ்ஊத் றழி அறிவிக்கின்றார்கள் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் ''நாளை ஒரு காலம் வரும் அவ்வேளை ஒரு கூட்டம் பள்ளிவாயலில் ஒன்று கூடி இம்மை விவகாரம் பற்றி மாத்திரமே பேசிக்கொண்டிருப்பார்கள். அவர்களோடு நீங்கள் இனைந்துகொள்ள வேண்டாம். அவர்கள் பள்ளிவாயலுக்கு வந்தமைக்காக எவ்வித கூலியும் வழங்கப்படமாட்டார்கள்.''

## சுன்னத்துத் தொழுகை

அபூ ஹுுரைரா (ரழி) அறிவிக்கின்றார்கள் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ‘‘இகாமத் சொல்லப்பட்டால் பர்ளான தொழுகையைத் தவிர வேறு எதனையும் செய்ய வேண்டாம்’’ மேற்படி ஹதீத் தொழுகைக்காக இகாமத் சொல்லப்பட்டால் சுன்னத்தான தொழுகைகள் உட்பட அனைத்துச் செயற்பாடுகளையும் நிறுத்திவிட்டு தொழுகையில் இணைந்துவிட வேண்டும் என்பதைக் காட்டுகின்றது.இதே கருத்தையே இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்களும் கூறுகின்றார்கள்.மேலும் இது தொடர்பில் அனைத்து அறிஞர்களது கருத்தும் உடன்பாடானதே. பர்ளான தொழுகைக்காக இகாமத் சொல்லப்பட்டால் நபிலான எந்தத்தொழுகையையும் ஆரம்பிக்க முடியாது. குறிப்பாக ‘‘கத் காமதிஸ்லாத்’’ என்ற இவ்வார்த்தை தொழுகைக்கான மிக உறுதியான ஓர் அழைப்பாகும். எனவே முஸ்லிம் என்ற வகையில் இவ்வழைப்புக்கு விடையளிப்பது மிக அவசியமாகும்.

அல் காழி இயாழ் என்பவர் இதற்கு மற்றுமொரு அடிப்படைக் காரணத்தை விளக்குகின்றார். ‘‘அதாவது தொழுகை ஓர் தலைமைத்துவக் கட்டுப்பாட்டுப் பயிற்சியை வழங்குகின்றது என்ற வகையில் இங்கு காட்டப்படும் பொடுபோக்குத் தனம் ஏனைய செயற்பாடுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும். உதாரணமாக ஒருவர் பள்ளிவாயலுக்கு வருகின்றவேலை இமாம் தொழுகையை நடாத்திக்கொண்டிருக்கையில், அதனைக் கவணத்திற் கொள்ளாது நண்மைகளைப் பூரணமாகப் பெற வேண்டும் என்ற நோக்கில் சுன்னாவை நிறைவேற்றிவிட்டு பின்னர் இமாமுடன் இணைந்து கொள்வார். இங்கு அவர் எண்ணுவதுபோல் பூரண நண்மையைப் பெற முடியாது.’’

## வெள்ளைப்பூடு மற்றும் வெங்காயம் சாப்பிடல.

வெள்ளைப்பூடு மற்றும் வெங்காயம் சாப்பிட்டு தனது வாயை பூரணமாக சுத்தம் செய்யாத நிலையில் பள்ளிவாயலுக்குச் செல்வது பிற மனிதனுக்கு அஸௌகரியத்தை ஏற்படுத்தும் என்பதால் இஸ்லாம் அதனை முற்றாகத் தடைசெய்கின்றது. ஏனெனில் இஸ்லாம் ஒரு மனிதன் பிற மனிதனின் உணர்வுகளை மதிக்க வேண்டும் எனவும், மற்றவர்களுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என்பதிலும் கூடுதல் கவணம் செலுத்துகின்றது. நபி (ஸல்) அவர்கள் இதனை பின்வருமாறு எச்சரித்தார்கள் ‘‘யார் வெள்ளைப்பூடு மற்றும் வெங்காயம் சாப்பிட்டாரோ அவர் எமது பள்ளிக்கு சமூகமளிக்க வேண்டாம்’’

## புகைத்தல்.

புகைத்தல் பொதுவாக மனித உடலுக்க தீங்கு விளைவிக்கக் கூடியது என்ற வகையில் இஸ்லாம் அதனை ஹராமாக்கியுள்ளது. ஓருவர் புகைப்பதால் தனக்கும்

தன்னை அண்டியுள்ளவர்களுக்கும் அசௌகரியங்களையும் இடையூறுகளையும் உண்டுபன்னிவிடுகின்றார். எனவே குறிப்பாக பள்ளிக்குச் செல்பவர் புகைப்பதை தவிர்ந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். அனுமதிக்கப்பட்ட உணவான வெள்ளைப்பூடு மற்றும் வெங்காயத்தை சாப்பிட்டவரே எமது பள்ளிக்கு வரவேண்டாம் என நபி (ஸல்) அவர்கள் தடை செய்திருக்க அனுமதி இல்லாத, ஹராமாக்கப்பட்ட புகைத்தல் பற்றி என்ன கூறுவது?

## அழுக்கான ஆடைகளை அணிதல்.

ஒரு மனிதன் எந்நிலையிலும் சுத்தமான ஆடைகளை அணிய வேண்டும் என்பதையும் நறுமணம் பூசிக் கொள்வதையும் இஸ்லாம் வரவேற்கின்றது. குறிப்பாக பள்ளிவாயலுக்குச் செல்கின்ற ஒருவர் அல்லாஹ்வை சந்திப்பதற்காகச் செல்கின்றார். இந்நிலையில் இந் நடைமுறை கைக்கொள்ளப்பட வேண்டும் என்பதில் இஸ்லாம் கூடுதல் கவணம் செலுத்துகின்றது. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் “அல்லாஹ் அழகானவன், அவன் அழகையே விரும்புகின்றான்” மெலும் “அல்லாஹ் பரிசுத்தமானவன், அவன் பரிசுத்தமானவர்களையே விரும்புகின்றான்”. இப்பரிசுத்தம் உடலளவிலும் உள்ளத்தளவிலும் அமைய வேண்டும். எனவேதான் அழுக்கான துர்நாற்றத்தை வெளியிடும் வகையான ஆடைகளை அணிந்த நிலையில் பள்ளியில் நுழைவதை இஸ்லாம் ஆதரிக்கவில்லை. எனவே பரிசுத்தமான ஆடைகளை அணிந்து செல்வது அவசியமாகும்.

## காற்று வெளியாதல்

ஒரு முஸ்லிம் பள்ளிவாயலில் இருக்கும் நிலையில் காற்றை வெளியாக்கக் கூடாது. ஏனெனில் இது மற்றையோருக்கு அஸெளகரியத்தை ஏற்படுத்தும், பள்ளியின் சூழலை மாசுபடுத்தும் செயலுமாகும். மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் “ஒரு மனிதர் பள்ளியில் நுழைந்ததும் மலக்குகள் அவருக்காக பிரார்த்தனை புரிகின்றார்கள். ‘‘யா அல்லாஹ் இன்ன மனிதருக்கு உனது அருளை, அபிவிருத்தியை வழங்குவாயாக’’ இது அவர் வுழூவுடன் இருக்கும் காலமெல்லாம் அவருக்கு கிடைத்துக்கொண்டே இருக்கும்”.

## இகாமத்தும் அதற்கான பதிலும்.

முஸ்லிம்களில் பலர் முஅத்தின் மாத்திரமே இகாமத் சொல்ல வேண்டும் என எண்ணுகின்றனர். இதற்கு சான்றாக ‘‘அதான் சொல்பவரே இகாமத்தம்

சொல்ல வேண்டும்'' என்ற பலவீனமான ஹதீதை ஆதாரமாகக் கொள்கின்றனர். ஆனால் இது தவறானதும் பிழையானதுமான கண்ணோட்டமாகும்.

அஷ் ஷேய்க் அல்பானி அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார். ''மேற்படி பலவீனமான ஹதீத் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் எதிர்மறையான விளைவுகளை உண்டுபன்னியுள்ளது. உதாரணமாக இகாமத் சொல்ல தாமதமாகும் சந்தர்ப்பத்தில் வேறு யாராயினும் ஒருவர் இகாமத் சொல்ல முனைந்தால் வேறு சிலர் அதனைத் தடுக்க முனைகின்றனர். இதன்போது சில முரன்பாடுகளும் உண்டாகும் நிலையும் தோன்றுகின்றது".

எவ்வாறாயினும் முஅத்தினோ ஏனையோரோ இமாம் தனது இடத்திற்கு வராத நிலையில் எவரும் இகாமத் சொல்ல முடியாது. ஏனெனில் அது இமாமுக்குரிய கன்னியமும் உரிமையுமாகும்.

சில முஅத்தின்கள் முதல் வரியில் இமாமின் பின்னால் அவரது வலப் பக்கத்தை தமது வழக்கமான இடமாக்கிக் கொள்கின்றனர். இன்னும் சிலர் தாம் நடந்த நிலையில் இகாமத்தைக் கூறுகின்றனர். இதனை இமாம் அஹ்மதிடம் "நடந்த நிலையில் இகாமத் சொல்வது தொடர்பில் கேட்கப்பட்டபோது அவர்கள் ஓர் குறித்த இடத்தில் நின்று சொல்வதே சிறந்தது" என பதிலலித்தார்கள் மேலும் ஒருவர் தனியாக தொழ முனைந்தால் அங்கும் இகாமத் கூறப்பட வேண்டியது நபிவழியாகும்.

## வரிசையில் நிற்றல்.

ஜமாஅத்துத் தொழுகையில் வரிசையைக் கடைப்பிடிப்பது அவசியமாகும்.வரிசையில் நிற்கும்போது ஒருவருக் கொருவர் நெருக்கமாகவும் நேராகவும் நிற்பதில் அதிகமானோர் பொடுபோக்காகவே இருந்து விடுகின்றனர். அன்னலார் (ஸல்) அவர்கள் தொழுகையின்போது ஸப்புகளில் நிற்கும் ஒழுங்குகளை மிக அழகாக் காட்டியுள்ளார்கள். "அதாவது ஒருவர் சப்பில் நிற்கையில். அவருடைய தோல் புயம் மற்றவருடைய தோல் புயத்துடனும் காலின் சின்ன விரல் மற்றவருடைய சின்ன விரலுடனும் படும் வகையில் நெருக்கமாக நிற்க வேண்டும்".

ஆனால் இன்று இந்த சுன்னாவை புறக்கனிக்கும் வகையிலேயே அதிகமான முஸ்லிம்கள் காணப்படுகின்றனர். எனவே இது விடயத்ததில் முஸ்லிம்கள் குறிப்பாக இமாம்கள் கூடுதல் கவணம் செலுத்த வேண்டியது அவசியமாகும். ஜாபிர் பின் சமுறா றழி அறிவிக்கின்றார்கள் ''ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் மலக்குகள் அல்லாஹ்வின் முன் நிற்பது போல் நீங்கள் ஏன் நிற்கக்கூடாது? எனக்

கேட்டார்கள். அதற்கு நாங்கள் அல்லாஹ்வின் தூதரே மலக்குகள் அல்லாஹ்வின் முன்னால் எவ்வாறு நிற்கின்றனர்? என வினவினோம். அதற்கு நபி (ஸல்) அவர்கள் மலக்குகள் ஒவ்வொருவரும் இடைவெளி விடாது நெருக்கமாகவும் ஒரு சப்பின் பின் இரண்டாவது அதன் பின் மூன்றாவது என்றவாறு நிற்கின்றனர் என பதிலலித்தார்கள்''

நபி (ஸல்) அவர்கள் சப்பின் ஒழுங்கு, ஒழுங்கீனம் தொடர்பில் பல எச்சரிக்கையான ஹதீத்களைக் கூறியுள்ளார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "நீங்கள் உங்கள் சப்புகளில் நேராக நின்றுகொள்ளுங்கள், முன்பின் முரனாக நிற்காதீர்கள் அல்லாஹ் உங்கள் உள்ளங்களிடையே முரன்பாடுகளை ஏற்படுத்தி விடுவான்". எனவே இது போன்ற பல ஹதீத்கள் சப்பின் ஒழுங்கின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது.

## தனியாக நின்று தொழுதல்.

ஜமாஅத்தத் தொழுகையின்போது தனியாக சப்பில் நின்று தொழுவதை நபி (ஸல்) அவர்கள் கண்டித்தார்கள். உதாரணமாக சப்புடன் இணைந்து நிற்காது வசதி கருதி பின் சப்பில் தனியாக நிற்றல், அல்லது கீழ்த்தளத்தில் தொழுகை இடம்பெறும் அதே வேலை மேல் தளத்தில் தனியாக நிற்றல் போன்றன நபிகளாரின் சுன்னாவை நிராகரிக்கும் செயற்பாடுகளாகும். அன்னல் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் ''நீங்கள் தொழுகையில் என்னைத் தொடர்ந்து நெருக்கமாக நில்லுங்கள். அவரைத் தொடர்ந்து மற்றவர் அவரைத் தொடர்ந்து மற்றவர் நில்லுங்கள். யார் பின்வாங்குகின்றாரோ அவரை விட்டும் அல்லாஹ் பின்வாங்குகின்றான்.'' என்றார்கள்.

மேலும் பள்ளிவாயல் நிரம்பி, நிற்க இடமின்றி வீதிகளில் தொழ வேண்டிய நிலை ஏற்பட்டால் பள்ளியில் உள்ள சப்புடன் முறிந்து விடாத வகையில் பின்னே நிற்போர் தொடர்பு பட்டிருக்க வேண்டும். அவ்வாறின்றி தொடர்புகள் அறுபட்டிருப்பின் அவ்வாறு தொழுவது செல்லுபடியற்றதாகிவிடும். எனினும் இரு சப்புகளைப் பூரனமாகப் பிரிக்கும் வகையில் பள்ளிகளில் சுவர்கள் இருந்து அவ்வேளை இமாம் கூறும் விடயங்கள் கேட்கும் நிலை இருந்தால் அங்கு தொழுகையைத் தொடர முடியும். எனினும் பள்ளிவாயலுக்குச் சமூகமளிக்காது வீட்டிலோ வீதிகளிளோ நின்று கொண்டு இமாமைத் தொடர்ந்து தொழுவதற்கு இஸ்லாம் அனுமதிக்கவில்லை. ஓர் முஸ்லிமைப் பொறுத்தவரை அவர் பள்ளிவாயலுக்கு செல்வது அவசியமாகும்.

## இமாமுடன் தனியாக நின்று தொழுதல்.

இமாமுடன் ஒருவர் தனிமையாக நின்றுதொழ விரும்பின் இமாமுக்கு நேராக வலப்பக்கமாக நின்று தொழுவதே சுன்னாவாகும். அவருக்கு முன்னாலோ பின்னாலோ நின்ற தொழுவது நபிவழியன்று. இப்னு அப்பாஸ் (றழி) அறிவிக்கின்றார்கள் "ஒரு இரவு நான் நபி(ஸல்) அவர்களின் இடப்புறம் நின்று தொழுதேன். அப்போது அவர்கள் பின்புறமாக எனது கையைப் பிடித்து தமது வலப் புறத்தில் என்னை நிறுத்தினார்கள்."

## முதல் சப்பில் நிற்றல்.

கூட்டுத் தொழுகையில் முதல் சப் அதிக நன்மைகளையும் அந்தஸ்துகளையம் ஈட்டித் தரும் இடமாகும். ஆனால் துரதிஸ்டவசமாக அனேகமானோர் இந் நிலையை அடையத் தவறி விடுகின்றனர். இன்னும் சிலர் முதல் சப்பில் நிற்பதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அதனை உதாசீனம் செய்து விடுகின்றனர். அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் அன்னல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''உங்களில் யாராயினும் முதல் ஸப்பினதும் அதான் சொல்வதனதும் சிறப்பினை அறிந்து கொள்வார்களாயின் அதனை அடைந்து கொள்ள தவழ்ந்தயினும் பள்ளியை நோக்கி விரைந்து வருவார்கள்'' இந்த ஹதீஸ் முதல் சப்பில் பொதிந்துள்ள நன்மைகளையும் அந்த நன்மைகளை அடைந்து கொள்ள ஒவ்வொருவரும் எந்தளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதையும் எடுத்துக் கூறுகின்றது.

## இமாமிற்கு அடுத்துள்ள சப்பில் நிற்பதற்கு தகுதியானவர்கள்

ஜமாஅத்துத் தொழுகையில் ம.்.மூம்கள் நிற்க வேண்டிய ஒழுங்கு முறையை இஸ்லாம் அழகாகக் காட்டியுள்ளது. ஜமாஅத்துத் தொழுகையில் கலந்து கொள்ளும்போது முதல் வரிசையில் மார்க்கச் சட்டங்கள் தெரிந்தவர்களும், பெரியவர்களும் அதற்கடுத்து சிறியவர்களும், கடைசி வரிசையில் பெண்களும் நிற்க வேண்டும். அபூ மஸ்ஊத் (றழி) அறிவிக்கின்றார்கள் "உங்களில் பருவமடைந்ததவர்களும் , அறிவில் சிறந்தவர்களும் எனக்கருகில் முதல் வரிசையில் நிற்கட்டும். பிறகு அவர்களுக்கு அடுத்துள்ளவர்களும் , பிறகு அடுத்துள்ளவர்களும் நிற்கட்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்."

## நீண்ட நேரம் நிலையில் நிற்றல்

தொழுகையில் அனுமதிக்கப்பட்ட திக்ர்கள் மற்றும் ஓதல்கள் தவிர வேறு நோக்கங்களுக்காக நீண்ட நேரம் நிலையில் நிற்கின்ற வழக்கம் சில

தொழுகையாளிகளிடத்தில் காணப்படுகின்றது. உதாரணமாக “ஆரம்ப தக்பீர் சொல்வதற்கு முன்னர் வஸ்வஸாவின் காரணமாக நீண்ட நேரம் நிய்யத்தைக் கூறிக்கொண்டிருத்தல்”.

மேலும் இமாம் சூரதுல் பாதிஹா ஓதி ம.்.மும்கள் ஆமீன் சொன்ன பின்னர் சில (இட்டுக்கட்டப்பட்ட) துஆக்களை நீண்ட நேரம் ஓதிக்கொண்டிருத்தல். ஊதாரணமாக ‘‘அல்லாஹீம்ம அஹ்ஸின் வுகூபனா யதைக்க யவ்மல் அர்ழி அலைஹா , அகாமஹால்லாஹுு வஅதாமஹா வஜஅல்னா மின் ஸாலிஹி அ.்.மாலிஹா’’ மேலும் இமாம் சப்புகளை சீர் செய்யுமாறு கூறியதும் பின்வருமாறு ஓதுதல் ‘‘ஸமி.்.னா வஆதானா குப்ரானக றப்பனா வஇலைகள் மஸீர்’’ மற்றும் ‘‘அல்லாஹுு அக்பர் கபீரன் வஅன பிக முஸ்தஜீர்’’ மேற்படி துஆக்கள் நபிகளார் கான்பிக்காத இஸ்லாத்தில் புதிதாக இட்டுக் கட்டப்பட்ட துஆக்களாகும்.

இதன் தொடராக இமாம்கள் விடுகின்ற சில தவறுகளை இப்னு நாகூக் தனது உம்ததுல் முரீத் பில் பித்ஆ என்ற தலைப்பில் பின்வருமாறு கூறுகின்றார் ‘‘ஆரம்ப தக்பீரைக் கட்டுவதற்கு முன்னர் நீண்ட நேரம் நிற்றல், சப்புகளை ஒழுங்குபடுத்தாது தொழுகையை ஆரம்பித்தல், முதல் ரக்அத்தை விட இரண்டாவது ரக்அத்தில் நீண்ட நேரம் ஓதுதல், போன்றவை அனைத்தும் பித்ஆவாகும். இவ்வாறு நீண்ட நேரம் நிற்றல் மு.்.மின்களுக்கு குழப்ப நிலையை தோற்றுவிப்பதுடன் வேறு சிந்தனைகளையும் ஏற்படுத்தும். இன்னும் சிலர் தக்பீரை மிக நீளமாகவும் அளவுக்கு மிஞ்சிய சப்தத்துடனும் கூறுகின்றனர். இது சில வேலை ஏனைய தொழுகையாளிகளுக்கு இடையூறாகவும் குழப்பமாகவும் அமையலாம். எனவே இவ்வாறான செயற்பாடுகளை தவிர்ந்து கொள்வதே சிறந்ததாகும்.

## சத்தமாக ஓதக்கூடிய தொழுகைகளில் பிஸ்மில்லாஹ் ஓதுதல்.

சில இமாம்கள் பிஸ்மில்லாஹ்வை மௌனமாகவே ஓதுகின்றனர், சில இமாம்கள் பிஸ்மில்லாஹ்வை சத்தமாக ஓதுகின்றனர். இதனால் சில ம.்.மும்கள் இவ்வாறான இமாம்களின் பின்னால் நின்று தொழ மறுக்கின்றனர்.

ஆனால் நபி (ஸல்) அவர்கள் இரு நிலைகளிலும் (சத்தமாகவும், மௌனமாகவும்) ஓதியுள்ளார்கள் என்பதற்கு போதுமான ஆதாரங்கள் காணப்படுகின்றன.

அனஸ் (றழி) அறிவிக்கின்றார்கள் நபி (ஸல்) அவர்கள், அபூபக்கர் (றழி), உமர் (றழி) மற்றும் உஸ்மான் (றழி) அனைவரும் தமது தொழுகையை ‘‘அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்’’ என்றே ஆரம்பித்தார்கள். (இதன்

பொருள் பிஸ்மில்லாஹ்வை மௌனமாக ஓதினார்கள் என்பதாகும்.). மற்றுமொரு அறிவிப்பில் நான் நபி (ஸல்) அவர்கள், அபூபக்கர் (ரழி) அவர்கள், உமர் (ரழி) அவர்கள், மற்றும் உஸ்மான் (ரழி) அவர்கள் ஆகியோருக்குப் பின்னால் நின்று தொழுதிருக்கின்றேன் அவர்களில் எவரும் "பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்" என ஓதியதை நான் கேட்டதே இல்லை. மற்றுமொரு அறிவிப்பில் அவர்கள் "பிஸ்மியை" மௌனமாகவே ஓதினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் "பிஸ்மில்லாஹ்வை" சத்தமாக ஓதியுள்ளார்கள் என்பதற்கு பின்வரும் ஹதீஸ் ஆதாரமாக அமைகின்றது. நுஜம் அல்முல்ஜமிர் அறிவிக்கின்றார் நான் அபூஹுரைரா (ரழி) அவர்களைப் பின்பற்றித் தொழுதேன்.அவர்கள் ''பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்'' என்று ஓதிவிட்டு பிறகு அல்ஹம்து சூறாவை ஓதினார்கள்.அல்லாஹ்வின் மீது ஆணையாக நபி(ஸல்) அவர்கள் தொழுது காட்டியது போல் நான் உங்களுக்குத் தொழுது காட்டினேன்'' என்று அபூஹுரைரா (ரழி)அவர்கள் கூறினார்கள்.

பிஸ்மி ஓதுவது தொடர்பில் இமாம் இப்னுல் கையும் (ரஹ்) கூறுகையில் ''நபி (ஸல்) அவர்கள் பிஸ்மியை சில நேரங்களில் சத்தமாகவும் இன்னும் சில நேரங்களில் மௌனமாகவும் ஓதியுள்ளார்கள்.எனினும் நபி(ஸல்) அவர்கள் வீட்டிலோ பிரயாணத்திலோ ஒரு நாளில் ஐந்து நேரங்களிலும் சத்தமாக ஓதவில்லை. இவ் வழிமுறையையே நான்கு கலீபாக்களும் ஏனைய ஸஹாபாக்களும் பின்பற்றியுள்ளார்கள்.''

## ஜமாஅத்துத் தொழுகையில் இமாமை முந்துதல் மற்றும் இமாமுடன் இனைந்து கொள்ளல்

ஜமாஅத்துத் தொழுகையில் எந்த ஒரு காரியத்தையும் இமாமைப் பின்தொடர்ந்து செயற்படுவதே சிறந்ததும் நபி வழியுமாகும். மாற்றமாக இமாமை முந்துவது சாதாரன விடயமாக இருப்பினும் அது கண்டணத்திற்குரிய குற்றம் என்பது கவணத்திற் கொள்ளப்பட வேண்டும்.

அனஸ் பின் மாலிக் (ரழி) அறிவிக்கிறார்கள் நபி(ஸல்) அவர்கள் ஒரு முறை எங்களுக்கு தொழகை நடாத்தினார்கள். தொழுகையை முடித்ததும் எங்களை நோக்கித் திரும்பி ''மக்களே நான் உங்களுக்கு இமாம். எனவே தொழுகையில் எந் நிலையிலும் என்னை முந்த வேண்டாம். நான் றுகூஉ செய்யும்போதும், சுஜீது செய்யம்போதும், எழும்போதும், ஸலாம் கூறும்போதும் எந் நிலையிலும் சரி என்னை முந்த வேண்டாம்''. மேலும் அபூஹுரைரா (ரழி) அறிவிக்கின்றார்கள் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''இமாமுக்கு முன் தன்

தலையை உயர்த்தக் கூடியவர்கள் அல்லாஹ் அவர்களது தலையை கழுதையின் தலையைப் போல் அல்லது அவரது தோற்றத்தை கழுதையின் தோற்றத்தைப் போல் மாற்றிவிடுவான் என்பதை அஞ்ச வேண்டாமா?''

மேலும் தொழுகைக்கு பிந்தி வருவோர் தொழுகையில் இமாமுடன் இனைந்து கொள்வதற்கு இமாம் சுஜுதிலிருந்து எழுந்து நிலைக்கு வரும் வரை அல்லது இமாம் அத்தஹிய்யாத்துக்கு வரும் வரை இமாமை எதிர்பார்த்து நின்றுகொண்டிருக்கின்றனர். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் தொழுகைக்காக இகாமத் சொல்லப்பட்டால் பள்ளிக்கு நடந்து அமைதியாகச் செல்லுங்கள் அவசரப்பட்டு விரைந்து செல்லாதீர்கள். நீங்கள் இமாமுடன் எதனை அடைந்து கொள்கின்றீர்களோ அதனை அவருடன் இனைந்து செய்யுங்கள்.எவை விடுபட்டதோ அதனை பூரண்படுத்திக் கொள்ளுங்கள்.''

இமாம் இப்பு ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறுகையில் ''மேற்படி ஹதீத் இமாமுடன் எந்த நிலையிலும் இனைந்து கொள்ள முடியும் என்பதற்கு சிறந்த சான்றாகும்.'' இதே சட்டத்தையே பின்வரும் ஹதீதும் எடுத்துக் காட்டுகின்றது. ''யார் என்னை றுகூஉ, சுஜீது, அல்லது எந் நிலையிலும் என்னை சந்தித்தாலும் அவர் தொழுகையில் இனைந்து கொள்ளட்டும்.'' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும் தொழுகையில் விடப்படுகின்ற மற்றுமொரு தவறு ஜமாஅத்துத் தொழுகைக்கு பிந்தி வருவோர் இறுதி சப்பில் தனிமையாக நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டால் முன்னால் உள்ள சப்பில் உள்ள ஒருவரை பின்னால் இழுத்து தன்னோடு கூட்டாக நிற்க வைக்கின்றனர்.இதற்கு ஆதாரமாக பின்வரும் ஆதாரமற்ற ஹதீதை முன்வைக்கின்றனர். ''யார் ஒரு சப்பில் தனிமையாக நின்று தொழுகின்றாரோ அவருடைய தொழுகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.அவர்கள் அத் தொழுகையை மீட்டித் தொழ வேண்டும்.'' ஆனால் பிந்தி வருவோர் இறுதி சப்பில் இனைந்து கொள்ள முடியுமானால் இனைந்து கொள்ளலாம் இல்லையெனில் புதிய சப்பில் நின்றுதொழ முடியும் என்பதே சரியான கருத்தாகும்.இது ஏனெனில் பின்னால் இழுக்கப்படுகின்றவருக்கு தொழுகையில் அசௌகரியத்தை ஏற்படுத்தும் அதே வேலை சிந்தனைக் களைவுகளை உண்டுபன்னும்.மேலும் முன்னால் உள்ள சப்பில் புதிதாக ஏற்படுகின்ற இடைவெளியைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டாகும்.

## முகமன் கூறல்.

அபூ ஹுரைரா (ரழி) அறிவிக்கின்றார்கள் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ‘‘நீ உனது சகோதர முஸ்லிமை எப்பொழுது சந்திக்கின்றாயோ அவருக்கு ஸலாத்தைக் கொண்டு முகமன் கூறுவீராக. மீண்டும் மரமோ, சுவரோ, மதிலோ உன்னைக் குறுக்கிட்டு மீண்டும் சந்தித்தால் மீண்டும் ஸலாத்தைக் கூறு என்றார்கள்’’.

மேற்படி ஹதீதில் ஒரு முஸ்லிம் பிற முஸ்லிமை சந்திக்கும்போது சலாம் கூற வேண்டும் என்பதுடன் இது ஒருவர் மற்றவர் மீது அன்பையும் நேசத்தையும் அதிகரிக்கச் செய்வதோடு மனிதர்களுக்கிடையேயுள்ள பொறாமை, குரோதம் போன்றவற்றையும் அகற்றி விடுகின்றது.

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், “நீங்கள் வாழ்த்தப்படும்போது அதனைவிட அல்லது அதற்குச் சமமான வார்த்தைகளைக் கொண்டு வாழ்த்தியவரை வாழ்த்துங்கள். ஏனெனில் அல்லாஹ் மிக நுணுக்கமான கணக்கெடுப்பாளனாக இருக்கின்றான்”.

ஆனால் தொழுகையில் அத்தஹிய்யத்தின்போது ஸலாம் கொடுத்ததும் வலது இடப் புறமாக இருப்போருக்கு “ஸலாம்” கூறி அல்லது “தகப்பலள்ளாஹ்” எனக் கூறி முஸாபஹா செய்கின்ற வழக்கம் ஒருசில இடங்களில் காணப்படுகின்றது. ஆனால் இதற்கு சுன்னாவில் எவ்வித ஆதாரமும் இல்லை. மாறாக பிழையான வழிநடாத்தலின் விளைவாக உருவான ஒன்றேதான் இதுவாகும்.

## தொழும் முஸ்லிம்மகளுடன் முஸாபஹா செய்தல்.

பொதுவாக எமது சமூகத்தில் சுபஹ், அஸர், மற்றும் ஜும்ஆத் தொழுகைகள் முடிந்ததும் ஒருவருக் கொருவர் முஸாபஹா செய்யும் வழக்கம் ஆங்காங்கு இருந்து வருகின்றது. ஆனால் இது நபிகளார் செய்து காட்டாததும் அவர்களால் கூறிக்காட்டாததுமான ஓர் விடயமுமாகும். இமாம் அஷ் ஷேய்க் அல் இஸ் இப்னு அப்திஸ்ஸலாம் அவர்கள் “சுபஹ் மற்றும் அஸர் தொழுகைகள் முடிந்த பின் ஒருவருக்கொருவர் முஸாபஹா செய்யும் இச் செயற்பாடு ஓர் **பித்ஆவாகும்’’** எனக் கூறுகின்றார். எனினும் ஒரு முஸ்லிம் பிற முஸ்லிமை சந்தித்தால் முஸாபாஹா செய்வது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டதுடன் அவை தொழுகைக்கு முன்னரோ அல்லது பின்னரோ இடம்பெறலாம். குறிப்பாக தொழுது முடிந்ததும் அவ்விடத்தில் நின்று கொண்டு ஒருவருக்கொருவர் முஸாபஹா செய்வதே தடுக்கப்பட்டது.

அதிகமானோர் சுபஹுடைய நேரத்தில் பள்ளியில் நுளையும்போது அங்கு இருப்போருக்கு ஸலாம் கூறாது நுழைந்து உடனே சுன்னாவையும் பர்ளையும் தொழுகின்றனர். பின்னர் ஒருவருக்கொருவர் முஸாபஹா செய்கின்றனர். இது உண்மையில் பித்ஆவாகும். **மாற்றமாக இவை தொழுகைக்கு முன்னரே செய்யப்பட்டிருக்க வேண்டும். அதுவே சுன்னாவாகும்.**

## தஸ்பீஹ்

"அன்னல் நபி (ஸல்) அவர்கள் தொழுது முடித்த பிறகு சுப்ஹானல்லாஹ், அல்ஹம்து லில்லாஹ், அல்லாஹு அக்பர் என ஒவ்வொன்றையும் முப்பது தடவைகள் கூறும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள்". இவ்வாறு கூறுவது சுன்னாவேயன்றி பர்ளான காரியமல்ல. இமாம் தொழுகையை முடித்ததும் இமாம் கிப்லாவின் திசையிலிருந்து திரும்பும்வரை சற்று நேரம் அமர்ந்திருக்க வேண்டும்.

இமாம் இப்னு தைமியா அவர்கள் கூறும்போது "ஸலாம் கொடுத்ததும் இமாம் ம.ஃமூம்களை நோக்கித் திரும்பும் வரை ம.ஃமூம்கள் தங்கள் இடத்தைவிட்டும் வெளியேறக் கூடாது.அதாவது இமாம் ஸலாம் கூறி ''அஸ்த.ஃபிருல்லா'' என மூன்று முறை கூறி ''அல்லாஹும்ம அந்தஸ்ஸலாம்.......'' என்று ஆரபிக்கும் திக்ரை ஓதும் வரை ம.ஃமூம்கள் தங்கள் இடத்தில் அமர்ந்திருக்க வேண்டும். இக்கருத்தை நபி (ஸல்) அவர்களின் பின்வரும் நபிமொழியை ஆதாரமாகக் கொண்டு குறிப்பிடுகின்றார். ''மக்களே உண்மையில் நான் உங்களது இமாமாவேன். எனவே றுகூஉவிலோ, சுஜுதிலோ அல்லது தொழுமிடத்திலிருந்தோ என்னை முந்தி விட வேண்டாம்.'' எனவே ஒவ்வொருவரும் தொழுகையின் பின் நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்த ஆதாரபூர்வமான துஆக்களை ஓத வேண்டும். **தொழுகை முடிந்ததும் நேரடியாகவே இறைவனிடம் பிரார்தணை புரிவது சிறந்த வழிமுறையல்ல**. எனவேதான் நபி (ஸல்) அவர்கள் தொழுகையின் பின்னால் ஓத வேண்டிய பல அவ்ராதுகளைக் கற்றுத் தந்தார்கள்.

## விரல்களால்தஸ்பீஹ் செய்தல்

எமது சமூகத்தில் பலர் தஸ்பீஹ் செய்வதற்கு "தஸ்பீஹ் மணி" என்ற ஒன்றைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் நபி (ஸல்) அவர்கள் "தமது விரல்களால்" தஸ்பீஹ் செய்தார்கள் என்பதை பின்வரும் ஹதீத் உறுதிப்படுத்துகின்றது. இப்னு உமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், ''நபி (ஸல்) அவர்கள் தனது வலக் கை விரல்களால் தஸ்பீஹ் செய்ததை நான் என் கண்களால் கண்டேன்.'' இதுபற்றி இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் கூறும்போது

“ நபி (ஸல்) அவர்கள் தஸ்பீஹ் செய்வதற்கு தமது விரல்களைப் பயன்படுத்தி இருக்க இது போன்ற பொருட்களைப் பயன்படுத்துவது ஓர் சுன்னாவை முற்றிலும் மறைத்து விடுகின்றது. எனவே சுன்னாவைச் செய்வதே மேலானதாகும்.”

## தொழுகை முடிந்த பின் துஆவுக்காக சஜதா செய்தல்.

சிலர் துஆக் கேட்பதற்காக தொழுது முடித்த பின்னர் வெறுமனே சஜதா செய்கின்றனர். இது ஷரீஆவில் அனுமதிக்கப்பட்டதோ அல்லது நபி (ஸல்) அவர்கள் காட்டிய வழிமுறையோ அல்ல. எனினும் தொழுகையில் இறைவனை நெருங்குவதற்கு அல்லது அவனை நோக்கிச் செல்வதற்கு மிகப் பொருத்தமான இடம் சஜதாவே. நபி (ஸல்) அவர்களின் ஹதீத் உறுதிப்படுத்துவது போல் ஒருவன் தொழுகையில் இருக்கும்போது ஸஜதாவுடைய நிலையில் தன் தேவைகளை முன்வைக்க அல்லாஹ்வை அழைப்பதே ஓர் முஸ்லிமுக்கு மிகவும் ஏற்றமானது.

## இஷாத் தொழுகையின் பின்னர் பேசிக்கொண்டிருத்தல்.

அபூ பர்ஸா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் “நபி(ஸல்) அவர்கள் இஷாத் தொழுகைக்கு முன்னால் தூங்குவதையும் இஷாத் தொழுகைக்குப் பின்னால் பேசிக்கொண்டிருப்பதையும் வெறுத்தார்கள்”. இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் “இஷாத் தொகையை தொழுத பின்னர் பிரயாணம், அல்லது வணக்க வழிபாடுகள் தவிர வேறு எந்தநோக்கத்திற்காகவும் இரவின் நெடு நேரம் விழித்திருக்க வேண்டாம்”. இதன்படி தேவையான பயனுள்ள கலந்துரையாடல்கள் தவிர தேவையின்றி பேசிக்கொண்டிருப்பது முற்றிலும் தடுக்கப்படுகின்றது. ஏனெனில் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவோருக்கு அல்லது தூங்குவோருக்க இதன் மூலம் யாதாயினும் அசௌகரியங்கள் ஏற்பட்டுவிடலாம் அல்லது இராப் பொழுது என்பதால் ஷைத்தான் தவறான வழிகளைத் தூண்டி விடலாம்.

## குழுவாக இணைந்து திக்ர் மற்றும் துஆக்கள் ஓதுதல்.

தொழுகைக்குப் பின்னால் குழுவாக இனைந்து திக்ர் மற்றும் துஆக்களை சத்தமாக ஓதுவது நபி வழியல்ல. இது சில இடங்களில் சர்வ சாதாரனமான பழக்க வழக்கமாக இருப்பினும் இதனை ஓர் மார்க்கக் கடமையாக, சுன்னாவாகக் கொள்ள முடியாது. “அஸ் ஸுன்னா வல் முப்தத்ஆ” என்ற நூலில் அதன் ஆசிரியர் “தொழுகைக்குப் பின்னால் கூட்டாக இனைந்து பாவமண்ணிப்புக் கோரல்

பித்ஆவாகும்".எனக் குறிப்பிடுகின்றார். இமாம் இப்னுல் கையூம் (றஹ்) அவர்கள் கூறுகின்றார்கள், "தொழுகைக்குப் பின்னால் கிப்லாவை முன்னோக்கியோ அல்லது ம.்.மூம்களை நோக்கியோ இருந்து கொண்டு இமாமும் ம.்.மூம்களும் கூட்டாக பாவமண்ணிப்புக் கேட்டல் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலல்ல.மேலும் இது தொடர்பில் எவ்வவித ஆதாரபூர்வமான ஹதீத்களும் இல்லை.அருமைத் தோழர்கள் செய்ததாகவும் அறிவுப்புகள் இல்லை.மாற்றமாக இது ஓர் **பித்ஆவாகும்**.அல்லாஹ்வே நன்கறிந்தவன்".

## தொழுகையின் பின்னால் திக்ர் ஓதுதல்.

ஒரு முஸ்லிம் தொழுகையை முடித்ததும் அஸ்த.்.பிருல்லாஹ் என மூன்று முறையும் அல்லாஹும்ம அந்தஸ்ஸலாம் வமிங்கஸ் ஸலாம் எனத் தொடரும் அதிக்ர்களையும் சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர் என ஒவ்வொன்றும் **முப்பத்து மூன்று** தடவைகளுமாக அனைத்து திக்ர்களையும் மௌனமாகக் கூறவேண்டும்.இதனை இருந்த இருப்பிலோ, நின்ற நிலையிலோ எந்நிலையிலும் கூறலாம். ஆனால் இன்றைய நடைமுறையில் உள்ளது போல் சத்தமாகக் கூறுவது பித்ஆவாகும். (அடிப்படையில் எவ்வாறான திக்ர்களை தொழுகையின் பின்னால் ஓத வேண்டும் என்பதை நபி (ஸல்) அவர்கள் தெளிவாகக் காட்டித் தந்துள்ளார்கள்.)

## ஜும்ஆத் தொழுகையைத் தவற விடல்.

வெள்ளிக்கிழமை ளுகர் தொழுகைக்குப் பதிலாக இமாம் மிம்பரில் பயான் நிகழ்த்திய பின்னர் தொழப்படும் இரண்டு ரக்அத்துத் தொழுகையே ஜுமுஆத் தொழுகையாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் "யார் ஜும்ஆவுடைய இரண்டு ரக்அத்துக்களை தவற விடுகின்றாரோ அவர் அதற்கு பதிலாக ளுகருடைய நான்கு ரக்அத்துக்களையும் தொழுது கொள்ளட்டும்".

## ஜும்ஆவின்போது பள்ளியில் தூங்குதல்.

ஜும்ஆவுடைய நாளில் இமாம் மிம்பரில் குத்பா பிரசங்கம் நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது பள்ளியில் தூங்குகின்ற நடைமுறை ஓர் பிழையான செயற்பாடாகும். இப்னு அவ்ன், இப்னு சீரீன் கூறியதாகக் கூறுகின்றார். ''இமாம் பிரசங்கம் நடாத்திக்கொண்டிருக்கும்போது பள்ளியில் தூங்குவதை ஸஹாபாக்கள் வண்மையாக வெறுத்தார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு உமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்ரார்கள் "ஜும்ஆவுடைய நாளில் பள்ளிவாயலில் யார்

தூக்கத்தை உணருகின்றாரோ அவர் தனது இருப்பிடத்தை மாற்றிக் கொள்ளட்டும்.’’

## ஜும்ஆவுடைய முன் சுன்னத்.

“நபி (ஸல்) அவர்கள் வெள்ளிக்கிழமைகளில் நேரகாலத்தோடு பள்ளிவாயலுக்கு வரும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள். பள்ளியில் மிம்பரில் ஏறிய பின் முஅத்தின் பாங்கு கூறியதும் தனது குத்பாவை ஆரம்பிப்பார்கள்”. இங்கு நபி (ஸல்) அவர்கள் முன் சுன்னத் தொழவில்லை ஸஹாபாக்களைத் தொழுமாறு கட்டளையிடவுமில்லை. அவ்வேலை அதான் குத்பாவுக்கான அழைப்பாகவேதான் அமைந்திருந்தது.

இமாம் இப்னு தைமிய்யா (றஹ்) அவர்கள் இது பற்றிக் கூறும்போது ‘‘அனேகமான இமாம்களின் முடிவு **ஜும்அவிற்கு முன் குறிக்கப்பட்ட நேரத்தில் குறிக்கப்பட்ட எண்ணிக்கையில் எந்த ஒரு சுன்னாவும் இல்லை** அவ்வாறு நபி(ஸல்) அவர்கள் மூலம் காண்பிக்கப்படவோ அல்லது வழிகாட்டப்படவோ இல்லை.’’

இதன்படி யாராயினும் ஒருவர் ஜும்ஆவுக்கான முன் சுன்னத் உண்டு என்ற நிலையில் அதனைத் தொழுதால் அவர் நபி (ஸல்) அவர்கள் காட்டாத , செய்யாத ஓர் வழிமுறையையே செய்திருக்கின்றார். எனினும் குத்பா செய்யப்படும்போதோ அல்லது அதற்கு முன்னரோ யாராயினும் பள்ளியில் நுழைந்தால் ‘‘தஹிய்யதுல் மஸ்ஜித் - பள்ளிக் காணிக்கைத் தொழுகை’’ நிறைவேற்ற வேண்டியது மிக உறுதியான நபி வழியாகும். இதற்கு பின்வரும் ஹதீதை ஆதாரமாகக் கொள்ள முடியும். ‘‘ஒரு முறை ஜும்ஆவுடைய நாளில் நபி (ஸல்) அவர்கள் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு மனிதர் வந்தார். உடனே நபி (ஸல்) அவர்கள் நீர் தொழுது விட்டீரா என்று கேட்டார்கள். அதற்கவர் இல்லை என்றார் எழுந்து இரண்டு ரக்அத் தொழுவீராக என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்” .மேற்படி ஹதீதில் குறிப்பிடப்பட்ட தொழுகை ‘‘தஹிய்யதுல் மஸ்ஜிதையே குறிக்கின்றது’’.

மேலும் ‘‘நபி (ஸல்) அவர்கள் ளுஹருக்கு முன் நான்கு ரக்அத்துகள், பின் இரண்டு ரக்அத்தகள் , அஸருக்கு முன் நான்கு ரக்அத்துக்கள், மஃரிபின் பின் இரண்டு ரக்அத் , இஷாவின் பின் இரண்டு ரக்அத் ஜும்ஆவிற்குப் பின் வீட்டு சென்ற பின்னர் இரண்டு ரக்அத் தொழுபவர்களாக இருந்துள்ளார்கள்.’’

இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் ‘‘நபி (ஸல்) அவர்கள் ஜும்ஆவிற்கு முன் சுன்னத் தொழுதார்களா?’’ என்ற தலைப்பினைக் கொண்டு வந்து மேற்படி ஹதீதை சுட்டிக்காட்டி **ஜும்ஆவிற்கு முன்னர் நபி (ஸல்) அர்கள் எந்த சுன்னாவும் தொழவில்லை** என்பதை உறுதிப்படுத்துகின்றார். மேலும் தனது நூலில் ‘‘கிதாபுல் ஈத்’’ என்ற பகுதியில் ‘‘பெருநாள் தொழுகைக்கு முன்னும் , பின்னும் சுன்னத் தொழுதல்’’ என்ற தலைப்பினைக் கொண்டு வந்து ‘‘பெருநாள் தொழுகைக்கு முன்னும் பின்னும் சுன்னத் தொழுவது நபி வழிகாட்டலில் அமையப் பெறாதது எனக் குறிப்பிடுகின்றார்.’’

**பர்ளான தொழுகையின் முன் பின் சுன்னாக்கள்**

பர்ளான தொழுகைகளுக்கு முன்னும் பின்னுமாக சில வரையறுக்கப்பட்ட சுன்னாக்களை நபி (ஸல்) அவர்கள் காட்டித் தந்துள்ளார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் “யார் கடமையான தொழுகையல்லாத பன்னிரண்டு ரக்அத்துக்கள் ஒரு நாளைக்குத் தொழுது வருவாரோ அவருக்க சுவர்க்கததில் ஒரு வீடு கட்டப்படும்”. இந்த வகையில் ‘‘நபி (ஸல்) அவர்கள் ளுஹருக்கு முன் நான்கு ரக்அத்துகள், பின் இரண்டு ரக்அத்தகள் , அஸருக்கு முன் நான்கு ரக்அத்துக்கள், ம.ஃரிபின் பின் இரண்டு ரக்அத் , இஷாவின் பின் இரண்டு ரக்அத், ஜும்ஆவிற்குப் பின் வீட்டு சென்ற பின்னர் இரண்டு ரக்அத் தொழுபவர்களாக இருந்துள்ளார்கள்.’’

## ஜும்ஆவிற்கு சமூகமளிப்போர் மூன்று வகையினராவர்

**முதலாமவர்** : பள்ளிக்கு ஜும்ஆவிற்காகச் சென்று வீன் கேளிக்கைகளில் ஈடுபடுபவர் - இவர் தான் செய்த கேளிக்கைகளைத் தவிர வேறு எதனையும் அடைந்து கொள்ளவில்லை.

**இரண்டாமவர்** : பள்ளிக்குச் சமூகமளித்து அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றார் - அல்லாஹ் அவர்களது பிரார்த்தணையை ஏற்பது ஏற்காது விடுவது அவன் நாட்டத்தைப் பொறுத்தது.

**மூன்றாமவர்** : பள்ளிக்கு அமைதியாகச் சென்று மற்றவர்களுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் செயற்படுகின்றார் - இவருக்கு அல்லாஹ் அடுத்து வரும் ஜும்ஆ உட்பட பத்து நாட்களுக்கான பாவங்களை மண்ணித்து அவற்றிற்கு மாற்றீடான நண்மைகளை வழங்குகின்றான். இதனையே அல்லாஹ் ‘‘அல்லாஹ்

யாருக்கு நலவை நாடுகின்றானோ அவருக்கு பன்மடங்காக நண்மைகளை அதிகரித்துக் கொடுப்பான்.’’

## ஜும்ஆவுடைய தொழுகையை நீட்டுவதும் , குத்பாவை சுருக்குவதும்

இப்னு யாஸிர் றழி அவர்கள் நபி(ஸல்) அவர்கள் கூறக் கேட்டதாக அறிவிக்கின்றார் ‘‘நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் தொழுகையை நீளமாகத் தொழுவதும், குத்பாவைச் சுருக்கிக் கொள்வதும் அறிவுடையோருக்குரிய அடையாளமாகும். எனவே தொழுகையை நீளமாக்கி குத்பாவை சுருக்கிக் கொள்ளுங்கள்’’. மேற்படி ஹதீஸ் குத்பாவை சுருக்க வேண்டும் எனவும் தொழுகையை நீட்ட வேண்டும் எனவும் உணர்த்துகின்றது. எனினும் அத் தொழுகை பிறருக்கு சடைவை உண்டுபன்னும் வகையிலும் அமைந்து விடக் கூடாது.

## ஜும்ஆவுடைய தொழுகையில் ஓதப்படும் சூறா

ஜும்ஆவுடைய தொழுகைகளில் நபி (ஸல்) அவர்கள் “சில நேரங்களில் சூறா ஜும்ஆ மற்றும் சூறா முனாபிகூனை ஓதுவார்கள். இன்னும் சில நேரங்களில் சூறா அல் அ.ஃ.லா மற்றும் சூறா அல் காஷியாவை ஓதுவார்கள்”. நு.ஃ.மான் பின் பஷீர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் ‘‘நபி (ஸல்) அவர்கள் பெருநாள் தொழுகையிலும் ஜுமுஆத் தொழுகையிலும் சூறா அ.ஃ.லாவையும் சூறா அல் காஷியாவையும் ஓதுபவர்களாக இருந்தார்கள். பெருநாளும் ஜுமுஆவும் ஒரே நாளில் வந்து விட்டால் அப்போது இரண்டு அத்தியாயங்களையும் இரண்டு தொழுகையிலும் ஓதுவார்கள்”. இப்னு அப்பாஸ் றழி அறிவிக்கின்றார்கள்.: ‘‘நபி (ஸல்) அவர்கள் ஜுமுஆத் தொழுகையில் முதலாவது ரக்அத்தில் சூறா ஜுமுஆவையும், இரண்டாவது ரக்அத்தில் சூறா முனாபிகூனையும் ஓதுபவர்களாக இருந்தார்கள்.’’

இப்னு அபீ றாபி.ஃ. கூறுகின்றார் : ‘‘அபூஹுறைரா (றழி) அவர்கள் எங்களுக்கு ஜும்ஆ செய்தார்கள் பின்னர் தொழுகையில் முதலாவது ரக்அத்தில் சூறா ஜும்ஆவையும் , இரண்டாவது ரக்அத்தில் சூறா முனாபிகூனையும் ஓதினார்கள்.’’

அதிகமான இமாம்கள் ஜுமுஆவுடைய இரவு இஷாத் தொழுகையில் சூறா ஜுமுஆவின் ஒரு பகுதியையும், சூறா முனாபிகூனின் ஒரு பகுதியையும் சுன்னா

எனக் கருதி ஓதுகின்றனர். நபி (ஸல்) அவர்கள் இஷாத் தொழுகையில் இவ்வாறு ஓதியமைக்கு தெளிவான ஆதாரங்கள் இல்லை.

## குத்பாவில் இடம் பெறும் தவறுகள்.

1.இமாம் மிம்பரில் ஏறும்பொழுது முதல் படியில் ஏறியவுடனும், மக்களை நோக்கி சலாம் கூறுவதற்கு முன்னர் கிப்லாவை நோக்கிய நிலையிலும் துஆ ஓதுதல்:-

இது பற்றி இமாம் இப்னு தைமிய்யா (றஹ்) அவர்கள் கூறும்போத ‘‘இந்நிலைகளில் ஒருவர் துஆக்கள் ஓதுவது நபிகளார் காட்டாத வழிமுறையாகும்’’ இமாம் நவவி (றஹ்) அவர்கள் கூறும்போது ‘‘இது மார்க்கம் பற்றிய தெளிவான அறிவில்லாதவர்களால் புதிதாக உருவாக்கப்பட்ட செயற்பாடுகளாகும்’’.

2.குத்பாவில் ‘‘சூறா காப்’’ ஓதாது விடல்:-

குத்பாவின் ஆரம்பத்தில் ‘‘சூறா காப்’’ ஓதுவது ஓர் சுன்னாவாகும். நபி (ஸல்) அவர்கள் தனது ஒவ்வொரு குத்பாவிலும் “சூறா காபை” ஓதியுள்ளார்கள்.

3.இரண்டாவது குத்பாவில் ஸலாம் கூறல்:-

இரண்டாவது குத்பாவிற்காக எழுந்த பின்னர் இமாம் மக்களை நோக்கி மீண்டும் ஸலாம் கூறும் முறை இக்காலத்தில் ஆங்காங்கே காணப்படுகின்றது. ஆனால் இது நபி (ஸல்) அவர்கள் கான்பிக்காத ஓர் வழிமுறையாகும்.

4.இரண்டாவது கத்பாவை மிக வேகமாக ஓதுதல்:-

முதலாவது குத்பாவை மிக நீளமாக ஓதிவிட்டு இரண்டாவது குத்பாவை மிகக் குறுகிய அமைப்பில் குத்பாவில் எவ்வித உரைகளோ உபதேசங்களோ இன்றி அல்லாஹ்வைப் புகழ்வதுடனும் நபிகளார் மீது ஸலவாத் கூறுவதுடனும் மட்டுப்படுத்தி, மிக அவசர அவசரமாகவும் ஓதுகின்றனர். இது நபி (ஸல்) அவர்கள் காண்பிக்காத ஓர் வழிமுறையாகும்.

5.நபி (ஸல்) அவர்கள் மீதான சலவாத்தை உரத்த குரலில் கூறல்:-

ஜும்ஆவடைய நாளில் இமாம் குத்பா ஓதும்போது நபி (ஸல்) அர்கள்மீது ஸலவாத்து ஓதுகையில் சிலர் அதனை வித்தியாசமான தொணியில் ஓதுகின்றனர். இது பற்றி அபூஷாமா பின்வருமாறுகூறுகின்றார். “இவ்வாறு குத்பாவின்போது உரத்த குரலில், வேறுபடுத்திக் காட்டும் அமைப்பில் ஸலவாத்து ஓதுவது ஷரீஆவிற்கு முரணானதாகும். மேலும் பாமரர்கள் மத்தியில் பிழையான

நம்பிக்கையைத் தோற்றுவிக்கும் ஓர் செயற்பாடுமாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துக் கூறுதல் என்பது ஓர் துஆ. எனவே துஆவை உரத்த குரலில் சத்தமாக ஓதுவதல்ல. அது அமைதியாக ஓதப்படவேண்டும். எனவே குத்பாவின்போது நபி(ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓத வேண்டுமாயின் உரத்த குரலில் ஓதவேண்டியதில்லை. ஏனைய உரைகள் போன்று தாழ்மையான குரலில் கூறினால் போதுமானதாகும்".

## சுன்னாவிற்கும் பர்ளுக்குமிடையில் சிறு இடைவெளி ஏற்படுத்தல.

சுன்னத்தான தொழுகைக்கும் பர்ழான தொழுகைக்குமிடையில் சிறு இடைவெளியை ஏற்படுத்துவது விரும்பத்தக்கதாகும். அது இட இடைவெளியாகவோ நேர இடைவெளியாகவோ அமையலாம். நபி (ஸல்) அவர்களது வழிகாட்டலும் அவ்வாறேதான் அமைந்துள்ளது. எனவேதான் நபி (ஸல்) அவர்கள் சுன்னத்தான தொழுகைகளை வீட்டிலும் பர்ழான தொழுகைகளை பள்ளிவாயலிலும் நிறைவேற்றி வந்தார்கள்.

ஒரு முறை இப்னு உமர் (றழி) அவர்கள் ஒரு மனிதர் ஜும்ஆவுடைய தொழுகையை நிறைவேற்றிவிட்டு அதே இடத்தில் சுன்னத்தான தொழுகையையும் நிறைவேற்றுவதைக் கண்டு "ஜும்ஆவுடைய தொழுகையை நான்கு ரக்அத்தாகத் தொழுகின்றீரா? எனக் கேட்டார்கள்." மேலும் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் அன்னல் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள் "நீங்கள் பர்ளை பள்ளியில் தொழுதால் சுன்னாவை வீட்டில் நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.அவ்வாறு நீங்கள் செய்தால் உங்களது வீடுகளுக்கு அல்லாஹ் தனது அருளை சொரிய வைப்பான்". எனவே சுன்னத்தான தொழுகைகள் வீட்டில் நிறைவேற்றப்படுவதும் பர்ளான தொழுகைகள் பள்ளியில் நிறைவேற்றப்படுவதும் இஸ்லாத்தின் பார்வையில் மிகச் சிறந்ததாகும்.

## ஸலாதுல் இஸ்திகாரா – தேவையை நாடித் தொழும் தொழுகையில் இடம் பெறும் தவறுகள்.

ஒருவர் ஸலாதுல் இஸ்திகாராவைத் தொழ வேண்டுமாயின் இரண்டு ரக்அத் தொழுதுவிட்டு தான் எதிர்பார்த்த விடயத்தில் எதில் வெற்றியும் சாதகமும் பொதிந்துள்ளதோ அதனை நிறைவேற்றித் தருமாறு இறைவனிடம் கேட்க வேண்டும். பின்னர் தான் எண்ணிய அல்லது எதிர்பார்த்த விடயத்தைத் தொடர வேண்டும். ஆனால் அவர் இன்னொருவரில் சார்ந்து நிற்கக் கூடாது. தன் தேவையை தானே நிறைவேற்ற வேண்டும். எனவே இதன்போது ஒரு மனிதன் தான் எண்ணிய விடயத்தில் வெற்றியடைய வேண்டும், பூரணத்துவம் பெற

வேண்டும் என எதிர்பார்த்து செய்யும் அதேவேலை அவ்வேளை நிறைவேறாதபோது தான் சடைவடையாது அல்லாஹ்வின் நாட்டத்தில் வெற்றியும் அருளும் உண்டு என்ற எண்ணத்துடன் அவர் திருப்தியடைந்துகொள்ள வேண்டும். ஆனால் சிலர் தன் சார்பாக இன்னொருவர் நிறைவேற்றினாலேதான் அக்காரியம் பூரணத்துவம் பெறும் என எண்ணுகின்றனர். ஆனால் இது முற்றிலும் தவறானதும் நபிகளாரின் வழிகாட்டலுக்கும் புறம்பானதாகும்.

## தொழுகையை சேர்த்துத் தொழுதலும், சுருக்கித் தொழுதலும். (ஜம்உ_,கஸ்ரு)

இஸ்லாம் சில சந்தர்ப்பங்களில் பர்ளான தொழுகைகளை சேர்க்கவும் சுருக்கவும் அனுமதித்துள்ளது. விஷேடமாக பிரயாணத்தில் இதனை நிறைவேற்ற முடியும் என்பது நபி(ஸல்) அவர்களின் சுன்னாவாகும்.எனினும் இச் சந்தர்ப்பத்தை சிலர் மறுத்து எந் நிலையிலும் உரிய நேரத்திற்கே செய்ய வேண்டும் என்கின்றனர். இன்னும் சிலர் இந்த சுன்னாவை நிறைவேற்றுவதில் பின்தங்குகின்றனர். அஷ்ஷங்கீரி எனபவர் பின்வருமாறு கூறுகின்றார். “பிரயாணத்தின்போது நான்கு ரக்அத் தொழுகைகளை இரண்டாகச் சுருக்கித் தொழ முடியும் என்பது சுன்னாவின் ஒளியில் அனைத்து உலமாக்களும் உடன்பட்ட ஏகோபித்த முடிவாகும்”.

இன்னும் சிலர் சுருக்க வேண்டிய அவசியமில்லை என்பதற்கு இவ்வாறு நியாயம் கூறுகின்றனர். அதாவது “அன்றைய காலங்களில் மேற்கொண்ட பிரயாணங்கள் போல கஷ்டங்களையும் நெருக்கடிகளையும கொண்டல்லவே இன்றைய காலப் பிரயாணங்கள். இன்று விமாணங்கள், கார், வேன் போன்ற சொகுசு வாகணங்களிலேயேதான் பயணங்கள் மேற்கொள்ளப்படுவதால் தொழுகையை சேர்க்கவோ சுருக்கவோ முடியாது”. இன்னும் சிலர் “அங்குமிங்கும் தனது தொழிலின் நிமித்தம் அடிக்கடி பயணம் மேற்கொள்வோர் சேர்த்தோ, சுருக்கியோ தொழ முடியாது என்கின்றனர்”.

மேற்படி கருத்துகளுக்கு விளக்கமளிக்குமுகமாக ஸெய்யித் ஸாபிக் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார். “ஒருவர் விமானத்தில் பயணித்தாலும் சொகுசு வாகணங்களில் பயணித்தாலும் அனைத்தும் பொதுவாக பயணம் என்றே கனிக்கப்படுகின்றது. அவர் அடிக்கடி பயணம் செய்தாலும் எப்போதாவது ஒரு நாள் பயணம் செய்தாலும் சரி பிரயாணி என்ற பெயர் தாங்கிய ஒருவருக்கு தொழுகையை சேர்க்கவும், சுருக்கவும், பர்ழான நோன்புகளை விட்டு பின்னர் நிறைவேற்றவும் இஸ்லாம் பூரண அனுமதியை வழங்கியுள்ளது”.

“ஒருவர் தொழுகையை சுருக்குவதாயின் தனது பிரதேசத்திலிருந்து வெளியேறியதன் பின்னர் தொழுகையை சுருக்கலாம் என்பது அனைத்து இமாம்களினதும் ஏகோபித்த கருத்தாகும்”. அஷ்ஷங்கீதி என்பவர் பின்வருமாறு கூறுகின்றார். “பிரயாணிகள் தங்கள் பிரதேசத்திலிருந்து வெளியேறியதிலிருந்து தொழுகையை சுருக்க முடியும்.இதுவே நான்கு இமாம்கள் உட்பட அனைவரினதும் ஏகோபித்த கருத்தாகும். நபி (ஸல்) அவர்கள் துல் குலைபாவை அடைந்ததும் தொழுகையை சுருக்கித் தொழுத நிகழ்வை இதற்கு ஆதாரமாகக் கொள்கின்றனர்.”

## அதான் கூறுவோரும் கேட்போரும் விடுகின்ற தவறுகள.

பள்ளிவாயல்களில் நியமிக்கப்படுகின்ற முஅத்தின்கள், இமாம்கள் தங்கள் பொறுப்புக்களை நம்பி ஒப்படைப்பதற்கு தகுதியானவர்களாக இருக்க வேண்டும். அன்னல் நபி(ஸல்) அவர்களின் காலத்தில் இப்னு உம்மி மக்தூம் (ரழி) ஆயினும் ஏனையோரும் சரி நபி (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வெளியேயோ அல்லது வேறு இடங்களுக்கோ செல்லும்போது தமது பொறுப்புக்களை நம்பி ஒப்படைப்பதற்கு தகுதியானவர்களாகவே இருந்துள்ளார்கள். இந்த நம்பிக்கைத் தன்மையே அவர் சிறந்தவர் என்பதற்கு அடையாளமாகும்.

மேலும் முஅத்தின்கள் எழுதுவதற்கும், வாசிப்பதற்கும், நேரங்களைக் கணிப்பதற்கும், நேர முகாமைத்துவம் பேணுவதற்கும், முஸ்லிம்களுடைய தொழுகைகளிலும் ஏனை விடயங்களிலும் உதவி செய்வதற்கும் தகுதியானவர்களாக இருத்தல் வேண்டும். துரதிஷ்டவசமாக தற்காலத்திலுள்ள சில முஅத்தின்மார்கள் தங்கள் மீதான பொறுப்புக்களைத் தெரியாதவர்களாகவே இருக்கின்றனர். இன்னும் சிலர் அதானைக் கூட சரியான முறையில் கூறத் தெரியாதவர்களாகவே இருக்கின்றனர்.

அதிகமான மக்கள் ஒவ்வொரு பள்ளியிலும் அதான் கூறுவது மார்க்கத்தில் கட்டாயமான ஓர் கடமை எனக் கொள்கின்றனர். ஆனால் இது தவறான சிந்தனையாகும். உண்மையில் அதான் கூறுதல் என்பது இஸ்லாத்தின் மிகச் சிறந்த சடங்குகளில் ஒன்றாகும். எனினும் அதிகமான ஹதீத்களின்படி அதான் கூறுவது வாஜிப் என்பதற்கு ஓர் பிரதேசத்தில் ஓரிடத்தில் மாத்திரம் கூறினால் போதுமானதாகும்.

இமாம் இப்னுதைமிய்யா (ரஹ்) அவர்களின் கருத்துப்படி ‘‘அதான் என்பது ஓர் பர்ளு கிபாயாவாகும். யாராயினும் இது ஓர் சுன்னா, இதனைச்

செய்யவில்லையாயின் பாவமல்ல எனக் கூறினால் அது ஒரு பிழையான கருத்தாகும்'' எனக் கூறுகின்றார்''. மேலும் அலி அதவி என்பவர் கூறுகையில் ''அதான் கூறுவதன் நோக்கம் தொழுகைக்குரிய நேரம் வந்துவிட்டது என்பதை உணர்த்துவதற்கும் மக்களை பள்ளிவாயலை நோக்கி அழைப்பதற்குமேயாகும். எனவே ஓர் பிரதேசத்தில் அனைவரும் கேட்கும் வகையில் ஓரிடத்தில் மாத்திரம் கூறுவது போதுமானதாகும்''.

ஹனபியாக்களின் கருத்துப்படி ''அதான் ஓர் சுன்னா முஅக்கதா (கட்டாயமான சுன்னா) மேலும் இஸ்லாத்தின் மிகப்பெரும் சடங்குமாகும். எனவே யார் அதனை மறுக்கின்றாரோ அவர் பாவியாவார்''. இதே கருத்தையே ஷாபிய்யாக்களும் கொண்டுள்ளனர். மேலும் இவர்கள் ''ஓர் சுன்னா முஅக்கதாவை மறுக்கும் ஒருவர் ஓர் பர்ளை மறுப்பதற்குச் சமம்'' என்கின்றனர்.

## அதான் கூறுவதில் இடம்பெறும் தவறுகள்.

1.அதான் கூற முன்னும் கூறிய பின்னரும் உரத்த குரலில் நபிகளார் மீது ஸலவாத்து ஓதுதல்:- உண்மையில் இது ஓர் பித்ஆவாகும். அவ்வாறே முஅத்தின் மௌனமாகவேனும் ஸலவாத் கூறுவதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. எனினும் அதான் கூறிய பின்னர் நபி(ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துக் கூறுவதற்கு தெளிவான ஆதாரங்கள் காணப்படுகின்றன. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''முஅத்தின் அதான் கூறக்கேட்டால் அவர் கூறுவதைப் போன்றே நீங்கள் கூறுங்கள். பின்னர் என்மீது ஸலவாத்துக் கூறுங்கள்.''

மேற்படி ஹதீத் அதானைக் கேட்பவரே ஸலவாத்துக் கூற வேண்டும் எனக் கூறுகின்றதே தவிர முஅத்தின் கூறுவதைக் காட்டவில்லை. மறுமுனையில் முஅத்தின் ஸலவாத்துக் கூறுவதை இந்த ஹதீஸ் தடுக்கவுமில்லை. எனினும் தவிந்துகொள்வது சிறந்தது. ஏனெனில் முஅத்தின் அதானுடன் சேர்த்து ஸலவாத்தையும் கூறும்போது ஏனையோர் இதுவும் அதானின் பகுதி என தவறாக விளங்கிக்கொள்ளக் கூடும்.

2.சிலர் அதான் கூறும்போது அதனை மிக நீளமாகக் கூற முனைகின்றனர். இதனால் அதன் எழுத்துக்கள் சொற்களை முற்றிலும் வேறுபட்ட அமைப்பில் மொழிகின்றனர். இன்னும் சிலர் இசையுடன் கூடிய புதிய புதிய இராகங்களை இணைக்கின்றனர். இவை முற்றிலும் தவறானதாகும் எனினும் அதான் கூறும்போது அதன் சொற்கள் மற்றும் பொருள்கள் மாறுபடாத அமைப்பில் அதன் இராகத்தை அமைப்பதில் எவ்வித தவறும் இல்லை.

3.சிறந்த அழகிய தொணியிலான அதானைக் கேட்க வேண்டும் என்ற சிலரின் விருப்பத்தின் காரணமாக அதானை ஒளிநாடாக்களில் பதிவு செய்து ஒலிக்கச் செய்கின்றனர். இது இஸ்லாத்தில் அனுமதிக்கப்படாததும் ஓர் பித்ஆவுமாகும். மேலும் இது பல்வேறு வகையில் அசௌகரியங்களையும் விபரீதங்களையும் உண்டுபன்னி விடுகின்றது. அதாவது

1.ஒரு சில முஅத்தின்களுடைய அதான் மாத்திரமே பதிவுசெய்யப்படும். ஏனையோர் புறக்கணிக்கப்படுகின்றனர்.

2.இது அன்னல் நபி (ஸல்) அவர்களது ஹதீதுக்கு நேரடியாக முரன்படுகின்றது. அதாவது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் ''தொழுகைக்கான நேரம் வந்து விட்டால் உங்களில் ஒருவரை அதான் கூறுவதற்கும் உங்களில் மூத்தவர் ஒருவரை தொழுகை நடாத்துவதற்கும் நியமியுங்கள்.''

3.இது அன்று முதல் இன்று வரையான ஒவ்வொரு பள்ளியிலும் ஐங்காலத் தொழுகைக்காக அதான் கூறி அழைப்பு விடுக்கும் இஸ்லாத்தின் நடைமுறைக்கு மாற்றமானதாக அமைந்து விடுகின்றது.

4.அதான் கூறுவது ஓர் வகையில் உடலியல் சார்ந்த ஓர் வணக்கம். எனவே ஒருவருக்குரிய வணக்கத்தில் இருவர் பங்கெடுக்க முடியாது.

5.அதான் கூறும்போது சில சுன்னாக்கள் கைக்கொள்ளப்பட வேண்டும். உதாரணமாக "ஹய்ய அலஸ் ஸலாஹ் , ஹய்ய அலல் பலாஹ்" எனக் கூறும்போது வலது இடது புறமாகத் திரும்ப வேண்டும். ஆனால் இங்கு அவ்வகையான சுன்னாக்களுக்குரிய சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

6.இத்தனைக்கும் மேலாக அதான் கூறுகின்ற இவ் வழிமுறை நபி(ஸல்) அவர்கள் கான்பிக்காத ஓர் பித்ஆவான முறையாகும்.

**குறிப்பு** :-மேற்படி கருத்துக்கள் ஹிஜ்ரி 1406 ரஜப் மாதம் 2ம் நாள் சனிக் கிழமை மக்காவில் இடம் பெற்ற Islamic Fiqh Assembly Council Of The Islamic World Unionன் ஒன்பதாவது அமர்வின்போது எடுக்கப்பட்ட தீர்மாணங்களாகும். இக்கருத்துகளின்படி அதன் இறுதித் தீர்மானமாவது ''ஒலி நாடாக்கள் மூலம் அதான் ஒலிப்பது அனுமதிக்கப்பட்டதல்ல அது ஓர் பித்ஆவாகும்.'' என்பதாகும்.

4.சில முஅத்தின்கள் அதானின் இறுதியில் நபி (ஸல்) அவர்கள் காண்பிக்காத சில வார்த்தைப் பிரயோகங்களை அதானுடன் இணைத்துக் கூறுகின்றனர். அவை முற்றிலும் பித்ஆவான செயற்பாடுகளாகும்.

5.பஜ்ரின் இரண்டாவது அதானில் ‘‘அஸ்ஸலாது கைரும் மினன் னௌம்’’ எனக் கூறுவதும், உரிய நேரத்திற்கு முன்னர் அதான் கூறுவதும் தவறாகும். மேலும் சில முஅத்தின்மார்கள் முதலாவது அதான் கூறாமலே இரண்டாவது அதானில் ‘‘அஸ்ஸலாது கைரும் மினன் னௌம்’’ எனக் கூறுகின்றனர்.

6.எனினும் இரண்டு அதானும் கூறக் கூடியவர்கள் பின்வரும் தவறுகளை விடுகின்றனர்.

1.உரிய நேரத்திற்கு முன்னர் அதான் கூறல் :- இத் தவறு வரலாறு நெடுகிலும் இடம்பெற்று வந்துள்ளது. இமாம் ஹாபிழ் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் தனது பத்ஹுல் பாரியில் பின்வருமாறு கூறுகின்றார் ‘‘உரிய நேரத்திற்கு முன்னர் இரண்டாவது பஜ்ருடைய அதானைக் கூறுவது சமகாலத்தில் இடம் பெறுகின்ற மிகப் பெரிய பித்ஆவாகும்’’ இதனால் மஃரிபுடைய அதானையும் பிந்த வேண்டிய ஓர் நிலைக்குள்ளாகின்றது. இதனால் ரமழானுடைய காலத்தில் கைக் கொள்ளவேண்டிய ‘‘சஹரைப் பிற்படுத்த வேண்டும் இப்தார்-நோன்பு திறப்பதை முற்படுத்த வேண்டும்’’ என்ற சுன்னா புறக்கனிக்கப்படுகின்றது.

2.இரண்டாவது அதானில் ‘‘அஸ்ஸலாது கைரும் மினன்னௌம்’’ கூறல் :- இது ஓர் பரவலான தவறாகும். ஏனெனில் இது முதலாவது அதானில் கூறப்படவேண்டிய ஒன்றாகும். இதனை இப்னு உமர் (ரழி) அறிவிக்கும் ஹதீஸ் உறுதிப்படுத்துகின்றது. அதாவது ‘‘ஹய்ய அலல் பலாஹ்’’ எனக் கூறிய பின்னர் ‘‘அஸ்ஸலாது கைரும் மினன்னௌம்’’ என முதலாவது பஜ்ருடைய அதானில் கூறப்பட வேண்டும். மற்றுமொரு அபூ மஃதூராவுடைய அறிவிப்பு ‘‘இரண்டு அதான்களிலும் ‘‘ஹய்ய அலல் பலாஹ்’’ எனக் கூறிய பின்னர் ‘‘அஸ்ஸலாது கைரும் மினன்னௌம்’’ எனக் கூறப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. மேற்படி ஹதீஸ்களை வைத்து இப்னு குஸைமா கூறுகின்றார் ‘‘முதலாவது பஜ்ருடைய அதானில் ‘‘அஸ்ஸலாது கைரும் மினன்னௌம்’’ எனக் கூற வேண்டும். ஏனெனில் இதன் நோக்கம் தூங்கும் மக்களை எழுப்பாட்டுவதுதான். அதே வேலை இரண்டாவது அதான் தொழுகைக்காக மக்கள் சமூகமளிக்க வேண்டும் என்பதற்கான அழைப்பேயாகும்.’’

மேலும் ‘‘அஸ்ஸலாது கைரும் மினன்னௌம்’’ என்ற இவ்வசனம் பொதுவில் கடமையான தொழுகைக்கு அழைக்கப்படும் அதானின் பகுதியல்ல. மாறாக மக்களை தூக்கத்திலிருந்து எழுப்பாட்டுவதற்கான முதலாவது பஜ்ருடைய அதானின் ஒரு பகுதியாகும்.

மேலும் பரவலாக அதான் தொடர்பாக நடைமுறையில் இல்லாத ஓர் குறைபாடு பஜ்ருடைய அதானுக்காக இரண்டு முஅத்தின்கள் நியமிக்கப்படாமை. அதாவது நபி (ஸல்) அவர்களது காலத்தில் பஜ்ருடைய இரண்டு அதான்களுக்குமாக இரண்டு முஅத்தின்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இந் நடைமுறை இன்று பராமுகமாக விடப்பட்டிருக்கின்றது.

## அதானைக் கேட்கின்ற வேலையில் மக்கள் விடுகின்ற தவறுகள.

1.அதான் கூறப்படும்போது தனது பெருவிரல்களால் கண்களைத் தடாவுதல் :- அபுல் அப்பாஸ் அஹ்மத் பின் அபீபக்கர் அர் ரத்தாத் அல்யமனீ என்பவர் தனது ‘‘முஜீபாதுர் ரஹ்மான் வஅஸாயிமுல் ம.்.பிரா’’ எனும் நூலில் ஆதாரபூர்வமற்ற ஹதீதை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு கூறுகின்றார். ‘‘யார் ‘‘அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸுூலுல்லாஹ்’’ என முஅத்தின் கூறும்போது ‘‘மர்ஹபன் ஹபீபீ முஹம்மத் பின் அப்தில்லாஹ்’’ எனக் கூறி தனது விரல்களை முத்தமிட்டு அல்லது விரல்களில் ஊதி கண்களில் தடவி விடுகின்றாரோ அவருக்கு அதன் பிறகு கண்ணோடு தொடர்பான எந்தவித நோய்களும் தீண்டமாட்டாது.’’ இந்த பிழையான கருத்தை அடிப்படையாக் கொண்டு எமது சமூகத்தில் பலர் இச் செயற்பாட்டை மேற்கொள்கின்றனர். ஆனால் இது முற்றிலும் தவறானதும் நபி வழிக்குப் புறம்பான ஓர் பித்ஆவுமாகும்.

2.அதானுக்கு பதில் கூறும்போது முஅத்தினை முந்துதல் :- முஅத்தின் அதான் கூறியபின்னர் அவர் கூறியது போன்று நாமும் கூறுவதே சுன்னாவாகும். ஆனால் அனேகமானோர் முஅத்தின் கூறுவதற்கு முன்னரே அதானின் வார்த்தைகளைக் கூறி விடுகின்றனர். உதாரணமாக , முஅத்தின் இறுதியாக ‘‘அல்லாஹுு அக்பர் அல்லாஹுு அக்பர’’ எனக் கூறி முடிப்கதற்குள்ளே அதன் அடுத்த வாசகமான ‘‘லாஇலாஹ இல்லல்லாஹ்’’ என்ற வார்த்தையைக் கூறி முடித்து விடுகின்றனர். இது முற்றிலும் சுன்னாவுக்கு முரனானதாகும்.

3.அதான் கூறி முடித்த பின்னர் மேலதிகமான சில வார்த்தைகளைக் கூறல்:- சிலர் முஅத்தின்கள் அதான் கூறி முடித்ததும் ‘‘யா அர்ஹமர் ராஹிமீன்’’ ‘‘வத்தர்ஜதர் ரபீஆ’’ போன்ற வார்த்தைப் பிரயோகங்களைக் கூறுகின்றனர்.ஆனால் இவை நபிகளார் காட்டாத முற்றிலும் தவறான வார்த்தைப் பிரயோகங்களாகும். இது பற்றி இமாம் இப்னு ஹஜர் (றஹ்) பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ‘‘மேற்படி ‘‘யா அர்ஹமர் ராஹிமீன்’’ ‘‘வத்தர்ஜதர் ரபீஆ’’ போன்ற வசனங்கள் அதானின் பின்னால் கூறுவது தொடர்பில் எவ்வித ஆதார பூர்வமான ஹதீத்களும் கிடையாது.

4.அதான் கூறப்படும்போது பள்ளியை விட்டும் வெளியேறுதல்:- அதான் கூறப்படும்போது நிர்ப்பந்த நிலைகளுக்காகவேயன்றி பள்ளியை விட்டும் வெளியேறக் கூடாது. ஏனெனில் அது ஷைத்தானுடைய செயலாகும். நபி (ஸல்) அவர்கள் இது பற்றி பின்வருமாறு கூறினார்கள். ‘‘அதான் ஒளி கேட்டதும் ஷைத்தான் பள்ளியை விட்டும் வெளியேறி காற்றை வெளியிட்டுக் கொண்டு அதான் ஒளி கேட்காத அளவு தூரத்திற்கு விரைந்தோடுகின்றான்.’’

5.அதானின் பின்னால் ஓதும் துஆ :- அதான் கூறப்பட்டதும் அதான் ஒளி கேட்கும் அனைவரும் பாங்குக்கான துஆவை ஓதுவது அவசியமாகும். ஆனால் இது விடயத்தில் அதிகமானோர் பொடுபோக்காகவே இருந்து விடுகின்றனர். இது பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். “நீங்கள் பாங்கோசையை கேட்டால் பாங்கு கூறுபவர் கூறுவதைப் போலவே கூறுங்கள்”.

## தொழுகை தொடர்பாக முஸ்லிம்கள் மத்தியில் பரவியுள்ள பலவீனமான ஹதீத்கள்.

1. “நபி(ஸல்) அவர்கள் தனது தொப்பியைக் கழட்டி அதனை சுத்ராவாக அமைத்துக் கொண்டார்கள்.”

2. “யார் ஹுஸைனின் மன்னறையில் சஜதா செய்கிறாரோ அவர் பாரக்க முடியாத ஏழு திரைகள் அவருக்காக நீக்கப்படும்.”

3. “ஹுஸைனின் மண்ணறையில் சுஜுது செய்பவருடைய தொழுகை ஏனைய இடங்களில் சுஜுது செய்பவருடைய தொழுகையை விட அதிகமாக ஏற்றுக் கொள்ளப்படும்.”

4.”யார் தொழுகையில் கையை உயர்த்துகின்றாரோ அவரது தொழுகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது”

5. “ஒருவர் தனது தொழுகையில் வலக்கையை இடக்கை மீது வைத்து தொப்புளின் கீழாக வைப்பது நபி வழியாகும்”

6. “நபி(ஸல்) அவர்கள் தான் மரணிக்கும் வரை சுப்ஹுடைய தொழுகையில் குனூத் ஓதினார்கள்.”

7. “தொழுகையில் என்னைத் தலைவன் என அழைக்காதீர்கள்”

8. “நபி (ஸல்) அவர்கள் தொழுகையின் இருப்பின்போது தனது சுட்டுவிரலை நீட்டி மடக்கி வைத்துக்கொண்டிருந்ததை நான் அவதானித்தேன்.”

9. “யார் ஒருவர் முஅத்தின் அஷ்ஹது அன்ன முஹம்மதன் றஸூலுல்லாஹ் எனக் கூம்போது ‘‘லப்பைக் முஹம்மத் பின் அப்தில்லாஹ்’’ எனக் கூறி தனது பெரு விரல்களில் ஊதி பின்னர் தனது கண்களில் ஊதுகின்றாரோ அவருக்கு கண்ணோய்கள் எதுவும் பீடிக்காது”

10.அதன் கூறிய பின்னர் ஓதப்படக் கூடிய துஆவில் சில வார்த்தைப் பிரயோகங்கள் இணைக்கப்படுகின்றன அவை அனைத்தும் பலஹீனமானவையாகும். உதாரணமாக ‘‘இன்னக லாதுக்லிபுல் மீஆத்’’

11. “முஅத்தின் பஜ்ருடைய அதானில் ‘‘அஸ்ஸலாது கைறும் மினன் னௌம்’’ எனக் கூறியதும் ‘‘ஸதக்த வபரரர்த வபில் ஹக்தி நதக்த’’ எனக் கூற வேண்டும்”

12. “நெருப்பு விறகைச் சாப்பிடுவது போல் பள்ளியில் சட்டரீதியான விடயங்களைப் பேசிக்கொண்டிருப்பது நண்மைகளைச் சாப்பிட்டு விடும்.”

13. “தொழுகையில் கோணலாக உள்ள சப்களை அல்லாஹ் ஒருபோதும் பார்க்கவே மாட்டான்.”

14.முஅத்தின் தொழுகைக்காக இகாமத் சொல்லும்போது “கத்காமதிஸ் ஸலாத்” என்று கூறும்போது பதிலுக்கு ‘‘அகாமஹல்லாஹு வஅதாமஹா’’ எனக் கூற வேண்டும்.

15.”யார் அதான் கூறுகின்றாறோ அவரே இகாமத் சொல்ல வேண்டும்”.

16. “யார் ஸப்பில் இமாமின் இடப்புறமாக நிற்கின்றாறோ அவர் இரட்டிப்பான நன்மைகளைப் பெறுவார்.”

17. “நான் நபி ஸல்) அவர்களின் பின்னால் நின்று தொழுதுள்ளேன் அவர் ஒரு போதும் தக்பீரை முழுமையாகக் கூறவில்லை.”

18. “தொழுகையில் இமாம் ‘‘அலைசல்லாஹு பிஅஹ்கமில் ஹாகிமீன்’’ எனக் கூறினால் ‘‘பலா வஅன அலா தாலிக மினஷ் ஷாஹிதீன்” எனக் கூற வேண்டும்.”

19. “நபி (ஸல்) அவர்கள் தான் தொழுது கொண்டிருப்பதை அலி (றழி) அவர்களுக்கு உணர்த்தும் முகமாக கணைத்தார்கள்.”

20. “பள்ளிக்கு அடிக்கடி வருபவராக ஒருவரை நீங்கள் கண்டால் அவர் உண்மையாளர் என்பதற்கு சாட்சியாக இருங்கள்.”

21. “பள்ளியில் நுழையும்போது ‘‘அல்லாஹும்மக்பிர்ழீ துனூபீ’’ என்று ஓத வேண்டும்.”

22. “உங்கள் சிறார்களை பள்ளிவாயலுக்குள் அனுமதிக்க வேண்டாம்.”

23. “பஜ்ருடைய தொழுகையை நிறைவேற்றிய பின்னர் நீங்கள் ஒருவருக்கொருவர் முஸாபஹா செய்து கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களுடைய நண்மைகளை பத்து மடங்காக அதிகரிப்பான்.”

24. “பஜ்ருடைய தொழுகையை நிறைவேற்றிய பின்னர் நீங்கள் ஒருவருக்கொருவர் முஸாபஹா செய்து கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களுடைய நண்மைகளை பத்து மடங்காக அதிகரிப்பான்.”

25. “அன்னல் நபி(ஸல்) அவர்கள் ஜும்ஆவுடைய தொழுகையை தொழுவதற்கு முன்னர் தனது வீட்டில் இரண்டு ரக்அத் சுன்னத் தொழுதார்கள்.”

26. “இமாம் மிம்பரில் ஏறினால் எவரும் தொழவோ பேசவோ கூடாது.”

27. “வெள்ளிக்கிழமை காலை சூறா சஜதாவை ஓதும்போது சஜதா செய்தல் வேண்டும்.”

28. “இமாம் மிம்பரில் ஏறியதும் துஆ ஓதுவார்.”

29. “யார் ஜும்ஆவுடைய தொழுகையை முதன் முதலில் நிறைவேற்றுகின்றாரோ அவருடைய தொழுகையே ஏற்றுக் கொள்ளப்படும்.”

30. “நபி (ஸல்) அவர்கள் ஆண்கள் முதல் சப்பிலும் அதற்கடுத்து சிறுவர்களையும் அதற்குப் பின்னர் பெண்களையும் நிற்கும்படியாக சப்பகளை அமைத்துக் கொண்டார்கள்.”

31. “நபி (ஸல்) அவர்கள் வெள்ளிக்கிழமை இரவு இஷாத் தொழுகையில் சூறா ஜும்ஆ மற்றும் சூறா முனாபிகூனை ஓதக் கூடிய வழக்கமுடையவர்களாக இருந்தார்கள்.”

32. “யார் ஈதுடைய இரவுகளில் வணங்குகின்றாரோ எல்லா இதயங்களும் மரணிக்கும் நாளில் அவருடைய இதயம் மாத்திரம் இறக்காது.”

33. “நபி (ஸல்) அவர்கள் வெள்ளிக்கிழமை குத்பாவிலும் ஈதுடைய குத்பாவிலும் மிக அடிக்கடி தக்பீர் கூறக் கூடியவர்களாக இருந்தார்கள்.”

34. “நபி (ஸல்) அவர்களுடைய வீடு பள்ளிவாயலுக்கு மிக நெருக்கமாக இருந்த போதும் மழை காலங்களில் தொழுகைகளை ஜம்உ செய்து தொழுபவர்களாக இருந்தார்கள்.”

35. “யாருடைய தொழுகை மாணக் கேடான வெறுக்கத்தக்க செயல்பாடுகளை விட்டும் தடுக்கவில்லையோ அவருடைய தொழுகை நிராகரிக்கப்பட்ட தொழுகையாகும்.”

36. “யாருடைய தொழுகை மாணக் கேடான வெறுக்கத்தக்க செயல்பாடுகளை விட்டும் தடுக்கவில்லையோ அவன் அல்லாஹ்வை விட்டும் தூரமாகின்றார்.”

37. “யாருடைய வீடு பள்ளிவாயலுக்கு அருகாமையில் அமைந்துள்ளதோ அவர் அப்பள்ளியில் தொழுதாலேயன்றி தொழுகை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.”

38. “யார் தொழுகையை மறுக்கின்றாரோ அல்லாஹ் அவருக்கு 15 வகையான தண்டணைகளைக் கொண்டு தண்டிப்பான். அவற்றில் ஐந்து உலக வாழ்விலும், மூன்று மரண வேலையிலும், மூன்று மண்ணறையிலும், மூன்று மண்ணறையிலிருந்து எழுப்பப்படும்போதும் கிடைக்கும்.”

39. “யார் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டிருக்கின்றாரோ அவர் மக்களுக்கு தொழுகை நடாத்தி தனக்காக மாத்திரம் பிரார்த்திப்பது கூடாது”.

40. “தவறுகள் செய்யாத நேர்மையான இமாமின் பின்னால் நின்று நீங்கள் உங்கள் தொழுகையை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.”

41. “தொழுகை என்பது மார்க்கம் ஓய்வு பெறும் ஓர் தூன். யார் அதனை நிறைவேற்றுகின்றாரோ அவர் மார்க்கத்தை நிலைநாட்டியவராவார். யார் அதனை நிராகரிக்கின்றாரோ அவர் மார்க்கத்தை அழிக்க முனைந்து விட்டார்.”

42. “ஒரு முறை ஒரு நபித் தோழர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே நான் எனது தொழுகையை பாழாக்கிவிட்டேன். நான் என்ன செய்ய வேண்டும் எனக் கேட்டார் அதற்கு நபிகளார் “நீர் வெள்ளிக்கிழமை இரவில் இறைவனிடம் பச்சாதாபப்பட்டு இரண்டு ரக்அத் தொழுதுகொள்.அதில் ஒவ்வொரு ரக்அத்திலும் சூறா இக்லாசை 25தடவைகள் ஓது பிறகு தொழுகையை முடித்ததும் “ஸல்லல்லாஹு அலா முஹம்மத் என ஆயிரம் தடவைகள் கூறு அவ்வாறு செய்தால் நீர் பாழாக்கிவிட்ட தொழுகைக்கு பரிகாரமாக அமையும்.”

43. “ஒரு மனிதன் தனது தொழுகையில் மன ஒருமைப்பாட்டுடன் தொழுத பகுதியைத் தவிர வேறு எதற்கும் நண்மை வழங்கப்படமாட்டான்.”

44. “இரண்டு மணிதர்கள் ஒரே மாதிரியான ருகூஉ சுஜூதுடன் ஒரே தொழுகையைத் தொழுதாலும் அவ்விருவருடைய தொழுகைக்குமிடையிலான வேறுபாடு வாணத்திற்கும் பூமிக்கும் இடைப்பட்டதைப் போல் இருக்கும்”

45. “யார் ளுஹாத் தொழுகையை நிராகரிக்கின்றாரோ அவர் சிலவேலை குருடராகலாம். அவர் நிராகரிக்கும் தன்மைக்கு ஏற்ப அவரது பார்வையற்ற தன்மை காணப்படும்.”

46. “யார் தொழாத ஒருவருக்கு ஒரு கவள உணவையேனும் கொடுத்துதவுகின்றாரோ அவர் முழு நபிமார்களையும் கொள்வதற்கு உதவியவரைப் போன்றவராவார்.”

**முடிவுரை.**

அல்லாஹ்வை அஞ்சி அவனது அன்பையும் கருனையையும் எதிர்பார்த்து முஸ்லிம்கள் தம் தொழுகையை சீர் செய்ய வேண்டும் என்பதற்காக அவர்கள் தங்கள் தொழுகையில் விடும் தவறுகளை சுட்டிக்காட்டி இந்நூலை உங்கள் முன் வைத்திருக்கின்றேன். இதில் ஏதும் குறைகள் காணப்படின் அவை என்னையே சாரும். தவறுகளைக் கண்டு நிந்திக்காது சிந்திக்க வழி செய்வதே ஏற்புடையதாகும். நிறைகள் காணப்படின் அவை அல்லாஹ் எனக்கு வழங்கிய தாராளத் தன்மையாகும். அனைத்துப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே.


1. **அனிந்துரை**
2. **மொழி பெயர்த்தோனுரை**
3. **முன்னுரை**
4. **தொழுகையில் பெண்களின் ஆடை**
5. **ஆண்களின் ஆடைகள்**
6. **சிறுவர்களும் பள்ளிவாயலும்**
7. **தொழுகையில் ஆடைகளை மடித்தல்**
8. **சாயமிடப்பட்ட ஆடைகள்.**
9. **தலையை மூடாது தொழுதல்**
10. **தொழுகையில் கவனத்தைத் திருப்பக்கூடிய அலங்காரங்களைப் பயன்படுத்தல்.**
11. **கோயில்கள் அல்லது படங்கள் காட்சிப்படுத்தப்பட்ட இடங்களில் தொழுதல்.**

12.மண்ணறைகளின் மீது அல்லது மண்ணறைகளை நோக்கித் தொழுதல்.
13.தொழுகையில் தனக்கென ஓரிடத்தை ஒதுக்குதல்.
14.தொழுகையில் சுத்ரா (தடுப்பு)
15.ஆரம்ப தக்பீருடன் தொழுகைக்காக நிய்யத் வைத்தல்.
16.தக்பீர் சொல்லுதல்.
17.கையை உயர்த்துதல்
18.நிலையில் நிற்றல்.
19.துஆஉல் இஸ்திப்தாஹ் (வஜ்ஜஹ்து) மற்றும் இஸ்திஆதா (அஊதுபில்லாஹி மினஷ் ஷைதானிர்ரஜீம்)
20.ஓதுதல்.
21.ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் சூறா பாத்திஹாவை ஓதுதல்.
22.தொழுகையின்போது ஸஜதாவின் இடத்தை பார்க்காது அங்குமிங்குமாகப் பார்த்தல்.
23.தொழுயையில் கண்களை மூடுதல்
24.தொழுகையில் அளவு கடந்து அசைதல்
25.இமாமைத் தொடர்ந்து அல் குர்ஆனை ஏந்தி நிற்றல்
26.தக்பீர் சொல்லல்.
27.காக்கை கொத்துவது போல் அவசரமாகத் தொழல்.
28.அஸ்ரு தொழுகையை பிந்தித் தொழுதல்.
29.றுகூஉடைய அமைப்பு
30.சுஜூது செய்தலும் அதன் முறையும்.
31.நோய் காரணமாக சுஜூதுடைய இடத்தில் ஏதாவது ஒரு பொருளை வைத்தல்.
32.ஸஜதா ஸஹ்வு
33.ம∴மூம்களின் ஒழுங்கற்ற வுழூ இமாமின் செயற்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தும்.
34.அத் தஷஹ்ஹுத் (அத்தஹிய்யாத்து ஓதுதல்)
35.தேவையின்றி பேசிக் கொண்டிருத்தல்.
36.சுன்னத்துத் தொழுகை
37.வெள்ளைப்பூடு மற்றும் வெங்காயம் சாப்பிடல்.
38.புகைத்தல்.
39.அழுக்கான ஆடைகளை அணிதல்.
40.காற்று வெளியாதல்
41.இகாமத்தும் அதற்கான பதிலும்.
42.வரிசையில் நிற்றல்.
43.தனியாக நின்று தொழுதல்.

44.இமாமுடன் தனியாக நின்று தொழுதல்.
45.முதல் சப்பில் நிற்றல்.
46.இமாமிற்கு அடுத்துள்ள சப்பில் நிற்பதற்கு தகுதியானவர்கள்
47.நீண்ட நேரம் நிலையில் நிற்றல்
48.சத்தமாக ஓதக்கூடிய தொழுகைகளில் பிஸ்மில்லாஹ் ஓதுதல்.
49.ஜமாஅத்துத் தொழுகையில் இமாமை முந்துதல் மற்றும் இமாமுடன் இனைந்து கொள்ளல்
50.வாழ்த்துத் தெரிவித்தல்.
51.தொழும் முஸ்லிம்மகளுடன் முஸாபஹா செய்தல்.
52.தஸ்பீஹ்
53.விரல்களால்தஸ்பீஹ் செய்தல்
54.தொழுகை முடிந்த பின் துஆவுக்காக சஜதா செய்தல்.
55.இஷாத் தொழுகையின் பின்னர் பேசிக்கொண்டிருத்தல்.
56.குழுவாக இணைந்து திக்ர் மற்றும் துஆக்கள் ஓதுதல்.
57.தொழுகையின் பின்னால் திக்ர் ஓதுதல்.
58.ஜும்ஆத் தொழுகையைத் தவற விடல்.
59.ஜும்ஆவின்போது பள்ளியில் தூங்குதல்.
60.ஜும்ஆவுடைய முன் சுன்னத்.
61.பர்ளான தொழுகையின் முன் பின் சுன்னாக்கள்
62.ஜும்ஆவிற்கு சமூகமளிப்போர் மூன்று வகையினராவர்
63.ஜும்ஆவுடைய தொழுகையை நீட்டுவதும் , குத்பாவை சுருக்குவதும்
64.ஜும்ஆவுடைய தொழுகையில் ஓதப்படும் சூறா
65.குத்பாவில் இடம் பெறும் தவறுகள்.
66.சுன்னாவிற்கும் பர்ளுக்குமிடையில் சிறு இடைவெளி ஏற்படுத்தல்.
67.ஸலாதுல் இஸ்திகாரா – தேவையை நாடித் தொழும் தொழுகையில் இடம் பெறும் தவறுகள்.
68.தொழுகையை சேர்த்துத் தொழுதலும், சுருக்கித் தொழுதலும். (ஜம்உ,கஸ்ரு)
69.அதான் கூறுவோரும் கேட்போரும் விடுகின்ற தவறுகள்.
70.அதான் கூறுவதில் இடம்பெறும் தவறுகள்.
71.அதானைக் கேட்கின்ற வேலையில் மக்கள் விடுகின்ற தவறுகள்.
72.தொழுகை தொடர்பாக முஸ்லிம்கள் மத்தியில் பரவியுள்ள பலவீனமான ஹதீத்கள்.
73.முடிவுரை.